Annual Subscription Rs. 6 | 11th April 1937 | Price 2 As.

சுதேசமித்திரன்

Vol. 8 | வாரப்பதிப்பு | No. 10

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஹாலிவுட் விமானத்தோற்றம்.

எல்லா நோவுகளுக்கும் ஒப்பற்ற சஞ்சீவி.

பாடால் பாம்

உதகமண்டலம்:

தென் ஆற்காடு:

ஏஜெண்டுகள்:

ஆரோக்கியத்தின்
முக்கிய ஆதாரம்

வுட்வர்ட்ஸ்
கிரைப்வாடர்

இது குழந்தைகளை
நன்கு பாதுகாக்கின்றது

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD & LTD., LONDON, ENGLAND

ம்யூனிச் நகரின் விமானத் தோற்றம்.

ம்யூனிச் மாதா கோவிலின் வானளாவிய ஸ்தூபியும் காணப்படுகிறது.

நமது சிறுகதை

அர்ப்பணம்

(வி. ஏ. சின்னசாமி)

ராமகிருஷ்ணன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு அன்றைய தினசரியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அடிக்கடி பக்கங்களைப் புரட்டினானே ஒழிய அவன் மனதில் ஒரு வரியாவது அர்த்தமாகவில்லை. மனமெல்லாம் சிந்தனையிலும் விசனத்திலும் ஆழ்ந்திருந்தது. எண்ணமெல்லாம் வேறெங்கோ வாடகைக்குப் போயிருந்தது. பின் சமாசாரப் பத்திரிகையின் வரி எப்படி அர்த்தமாகும்! கொஞ்சநேரத்திற்கு முன்னால் வந்த கடிதம் அவன் ஹிருதயத்தைப் பொடிப் பொடியாக்கிவிட்டது. இம்மாதிரி பயங்கர கடிதத்தை அவன் எதிர்பார்க்கவே இல்லை. மறுபடியும் ஒரு தரம் கடிதத்தை எடுத்துப் படித்தான்.

திருச்சி,

ஆருயிரே! என் அன்பே!

தாங்கள் என்மேல் யாதோ காரணத்தால் கோபித்துக் கொண்டீர்போலும். இதற்கு முன்னும் நான் இரு கடிதங்கள் எழுதியும் பதில் இல்லை. என்னைப் பார்க்கவும் வரவில்லை. என் தகப்பனார் என்னை மதுரை தினகர முதலியார் புத்ரன் கிருஷ்ணசாமி பி. ஏ.வுக்கு விவாஹம் செய்து கொடுப்பதாக நிச்சயித்திருக்கிறார். ஆனபடியால் தாங்கள் இன்று காவிரி யாற்றங்கரைக்கு என்னைச் சந்திக்க வராவிட்டால் என்னை இவ்வுலகில் மறுபடியும் காணமுடியாது. இந்த ஹிந்து மதமென்னும் சாக்கடைதான் என்னை என் காதலரை—ஆசை மணாளரை—என் ஹிருதய மன்னரை—அடையத் தடையாயிருக்கிறது. காவிரி மாதாவுமா என்னைக் கைவிட்டுவிடுவாள்!

தங்கள் தரிசனாபிலாஷி
"ரமாமணி"

இந்தக் கடிதத்தைப் படித்ததும் ராமகிருஷ்ணனுக்கு ஒரு காரியத்திலும் மனம் செல்லவில்லை. எழுந்திருந்து கோட்டை அணிந்துகொண்டு காவிரி யாற்றங்கரைக்குச் சென்றான்.

* * * *

ராமகிருஷ்ணன் திருச்சி செயிண்ட் ஜோசப் காலேஜில் நான்காவது கிளாஸில் வாசிக்கின்றான். ஹாஸ்டலில் அதிக பணச் செலவு ஆனபோதிலும் கூட தனி அறை கிடைப்பது இல்லை. ராமகிருஷ்ணன் ஏகாந்தத்தை விரும்புபவன். ஆனபடியால் தெப்பக்குளம் வீதியில் ஒரு தனி அறை எடுத்துக்கொண்டு வசித்து வந்தான். அவன் வசித்துவந்த அறை ஜன்னலுக்கு நேர் எதிரில் எதிர் வீட்டு ஜன்னலும் இருந்தது. அதில் ஒரு பென்ஷன் டாக்டர் வசித்து வந்தார். ராமகிருஷ்ணன் ஒரு நாள் புஸ்தகங்களின்மேல் வெறுப்படைந்து ஒரு பாட்டெடுத்தான். ஒன்றன்பின் ஒன்றாக 4, 5 பாட்டுகள் ஆய்விட்டன. திடீரென்று ஒரு மதுர வீணையொலி இளந்தென்றலுடன் சேர்ந்து இவன் அறையை அடைந்தது. எதிரிலிருந்த ஜன்னல் மூலம் சுந்தரமே உருவெடுத்தாற்போலவும் அழகிகளுக்கெல்லாம் அழகியாகவும் விளங்கிய ஒரு சுந்தரி வீணை வாசிப்பதைப் பார்த்தான்.

இதற்குப்பின் தினம் அதே சமயம் இங்கு பாட்டும் அங்கு வீணையும் ஆரம்பித்துவிடும். தினமும் தன் அறையின் ஜன்னல்மூலம் ராமகிருஷ்ணன் அவ்வற்புத சங்கீத அம்ருதத்தைப் பருகிக்கொண்டிருந்தான். ராமகிருஷ்ணனும் வீணையுடன் ஒத்து ஹார்மோனியமும் வாசிப்பான். இதனால் சில சமயங்களில் இருவருக்கும் போட்டி ஏற்பட்டுவிடுவதுண்டு. அச்சமயம் ஒருவரின் கண்கள் மற்றவரின் கண்களைச் சந்தித்து அதற்கு அறிகுறியாக முகமும் புன்னகை பூத்து நிற்கும். அப்பெண் தன் குயிற் குரலில் கானம் செய்யும்போது ராமகிருஷ்ணன் ஹார்மோனியம் வாசிப்பான். இவன் பாடும்போது அவ்வழகி வீணை வாசிப்பாள்.

இந்தச் சம்பவங்கள் நடந்து 2, 3 வருஷங்கள் கடந்துவிட்டனவெனினும் ராமகிருஷ்ணன் காதுகளில் இன்னும் ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. அவளுடைய அழகிய வதனமும் சுந்தர புன்முறுவலும் ராமகிருஷ்ணன் கண்முன் இன்னும் நாட்டியமாடின.

இப்படியே சில தினங்கள் கழிந்தன. இப்பொழுது ராமகிருஷ்ணன் அவ்விள நாரீ ரத்னத்துடன் மணிக்கணக்கான சம்பாஷணைகள் செய்ய முடியும். அவ்வழகியின் வீணையின் மேல்தன் சிரசை வைத்துக்கொண்டு அவள் வதன சௌந்தர்யத்தை வர்ணிக்கமுடியும். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அறியாதவராயிருந்தாலும் ராமகிருஷ்ணனுக்கு உண்பது உடுப்பது எல்லாம் அப் பெண்மணிக்காகவே யிருந்தது. அம்மாதரசி ஒரு முறை இவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்துவிட்டால் சுவர்க்க ஆனந்தத்தை யடைவான். ராமகிருஷ்ணனின் ஹிருதய சாம்ராஜ்யத்திற்கு அம்மெல்லி நல்லாள் அதிகாரியாய் விட்டாள்! ராமகிருஷ்ணன் அவள் அடிமையாக விருப்பதிலே அதிக ஆனந்தமடைந்தான்.

ஒரு நாள் ராமகிருஷ்ணன் "ரமா! நாம் இருவரும் ஒரே இடத்தில் இருந்துகொண்டு நான் சங்கீதம் பாடி நீ கேட்கவும் நீ பாடி நான் கேட்கவும் இருந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்" என்றான். ரமாமணி கண்ணை உருட்டி ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தன் குயிலனுமினிய குரலில் கண்களை மேல் உயர்த்திக்கொண்டு சஞ்சலத்துடன், "இவ்வுலகில் நாம் அப்படியிருக்க முடியுமா?" என்று கூறி பெருமூச்சு விட்டனள்.

அவள் கூறியதன் கருத்தை ராமகிருஷ்ணன் தெரிந்துகொண்டான். பின்னும் அறியாதவன் போல் "ரமா! நாம் இவ்விதமாக நாட்களை கழிக்க முடியாது. காலச்சக்கரம் எங்கு கொண்டுபோய்விடும் என்று யார் அறிவார்கள்? இவ்வுலகில் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய சட்டங்களைப் பின்பற்ற வேண்டியிருக்கின்றது. நம் மதத்தில் கடூரமான சட்டங்கள் இருக்கின்றன. உனக்கும் அதைத்தான் பின்பற்ற வேண்டும்போலும்!" என முடித்தான்.

ரமா இதற்கு என்ன பதில் சொல்லமுடியும். பின்னும் "ஜாதி அல்லது மதம் ஒருவருடைய ஹிருதயத்தை என்ன செய்ய முடியும்?" என்றனள்.

இதேமாதிரி நானாவித பேச்சுக்கள் தினமும் நடந்துவந்தன. ஹ்ருதயத்தின் பலஹீனத்தால் ஒருவர் மனதை ஒருவர் நன்றாக அறிந்துகொள்ள முடியவில்லை. எத்தனை நாள் ராமகிருஷ்ணன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு உறுதி செய்து செய்து பார்த்தான்! ஆனால் ரமாமணியைப் பார்த்தவுடன் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறான்.

இதன்மத்தியில் ஒருநாள்ராமகிருஷ்ணனுக்குத் தன் தகப்பனாரிடமிருந்து அவர் நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும் உடனே புறப்பட்டு வரும்படியும் ஒரு கடிதம் வந்தது. ரமாவுடன் சொல்லாமல் கூட ஊருக்குப் புறப்பட்டு விட்டான். ஆனால் ஊரில் ரமாமணியின் ஞாபகமே அதிகமாகவிருந்தபடியால் ராமகிருஷ்ணன் உடனே புறப்பட்டு வந்துவிட்டான். ஆனால் எதிர் வீட்டில் ரமாமணியைக் காணவில்லை. வீடு பூட்டியிருந்தது. டாக்டர் பென்ஷனரானபடியால் கொஞ்ச நாள் அங்கும் கொஞ்சநாள் இங்குமாகக் காலம் போக்கினார். ரமாவின் கடிதத்தைஎதிர்பார்த்துப் பார்த்து ராமகிருஷ்ணன் களைப்படைந்துவிட்டான். படிப்பது எல்லாம் பறந்துவிட்டது. ரமாவைத் தேடுவதிலேயே காலங்கடத்தினான். கவலைக் கடலில் ஆழ்ந்துவிட்டான். கடைசியில் இக்கடிதமும் வந்து சேர்ந்தது.

* * * *

ராமகிருஷ்ணன் உடனே புறப்பட்டு காவிரிக் கரைக்குச் சென்றான். இவன் ஆற்றங்கரையை அடையும்போது தினகரன் தன் பசும்பொன்கிரணங்களால், காவிரி நதியில் மனிதர்கள் மனதில் எழுந்து எழுந்து வீழ்ச்சி யடையும் எண்ணங்களைப்போல் மணலில் விளையாடிக்கொண்டிருந்த அலைகளை அலங்கரித்தான். ரமாமணி இமை கொட்டாமல் நதியின் அவ்வழகாகிய அம்ருதத்தை அருந்திக் கொண்டு இருந்தாள். இளந்தென்றலால் ஆடி அசையும் அவள் கார்மேகக் கூந்தலின் மேல் அம்சுமாலி தன் பொன் கிரணங்களைப் பரப்பி வான வில்லின் சௌந்தர்யத்தைச் சிருஷ்டி செய்து கொண்டிருந்தான். அந்த சௌந்தர்ய மதுவைப் பருகியதால் ராமகிருஷ்ணன் மதம் பிடித்தவன் போல் ஆய்விட்டான். அவளுடன் கூட ஒரு பெண் இருந்தது உடனே அவளுடன் சந்திப்பதற்குத் தடையாக விருந்தது. ராமகிருஷ்ணன் ஒரு செடி மறைவில் நின்று அவ்வற்புதத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தித்துக் கொண்டிருந்தான்.

"தடால்" என்ற சப்தம். ராமகிருஷ்ணன் திடுக்கிட்டுவிட்டான். யாரோ தண்ணீரில் குதித்ததுபோல் தெரிந்தது. அவன் சரீரத்தில் ஒருவித மின்சாரம் போன்று ஓடிற்று. சரீரத்தின் ரோமங்கள் சிலிர்த்துவிட்டன. கண்கள் ரமா இருந்த இடத்தைப் பார்த்ததும் மனத்தில் கலவரம் ஏற்பட்டது. உடனே கால்கள் கரைக்கு ஓடின. துணிகூட கழற்றாமல் தண்ணீரில் குதித்தான். பிரவாகம் அதிவேகமாக விருந்தது. எங்கும் ரமாமணியைக் காணோம். அவன் ஹிருதயத்தில் நடுக்கம் ஏற்பட்டது. தண்ணீரின் பிரவாஹத்தில் ராமகிருஷ்ணன் தவித்துக்கொண்டிருக்கையில் தூரத்தில் ஒரு வெள்ளை வஸ்து தென்பட்டது. அலைகளைப் பிளந்துகொண்டு அதிவேகத்துடன் அதையடைந்தான். வேகமான பிரவாகம் இருவரையும் அதிக வேகமாக அடித்துக்கொண்டுபோயிற்று. அந்த ஆழமான தண்ணீரில் இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டனர். ராமகிருஷ்ணனுக்கு அந்த அவஸ்தையிலும் ஒருவித ஆனந்தம் ஏற்பட்டது. இருந்தபோதிலும் அவளைக் கொஞ்சம் தூரம் தள்ளிவிட்டான். இல்லாவிட்டால் இருவரும் ஒன்றாக மூழ்கி யிறக்க வேண்டியல்லவா வரும். அவள் புடவை நன்றாகச் சுற்றிக்கொண்டதால் முகத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை. தண்ணீருடன் யுத்தம் செய்து

களைத்துவிட்டதால் அவள் ஏறக்குறைய மூர்ச்சித்துவிட்டாள்.

நதியின் பிரவாகத்தில் இருவரும் அதிக தூரம் போய்விட்டார்கள். ராமகிருஷ்ணனின் உடம்பு தளர்ந்துவிட்டது. ராமகிருஷ்ணன் நீந்துவதில் அதிகத் தேர்ச்சி பெற்றவனாகவிருந்தபடியால் சமாளித்துக்கொண்டான். மெல்ல மெல்ல ரமாமணி நழுவ ஆரம்பித்தாள். இவன் துணிகளும் நனைந்து கனமாயின. உள்ளிருந்த அரை நிஜாரைத்தவிர பாக்கி எல்லாவற்றையும் தண்ணீரில் விட்டுவிட்டான். ராமகிருஷ்ணன் எப்பொழுது கரையை அடைந்தான் என்பது அவனுக்கே தெரியாது. ஏனென்றால் கொஞ்ச நேரத்தில் மூர்ச்சித்துவிட்டான். அவன் கையிலிருந்த மூட்டையைப் பிரிப்பதற்கும் அதிகக் கஷ்டப்பட வேண்டியிருந்தது.

அவனுடைய மூர்ச்சையான நிலைமையிலும் அவன் முன் ரமா நிற்பதுபோல் தோன்றியது. அவன் தலை ஏதோ ஒரு கோமள வஸ்துவின்மேல் இருந்தது. ஒருவேளை அது ரமாவின் கரமோ என்ற சந்தேகத்திலிருந்தான் ராமகிருஷ்ணன்.

கொஞ்சநேரத்திற்குப் பிறகு ராமகிருஷ்ணன் கண் திறந்தான். அவன் ஒவ்வொரு நரம்பிலும் வலி எடுக்க ஆரம்பித்ததால் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டான். ஓர் இனிய குரல் "உடம்பு எப்படி இருக்கிறது" என்றது.

ராமகிருஷ்ணனால் பேச முடியவில்லை. மறுபடியும் அதே குரல், "உணர்ச்சி வருகிறது போலிருக்கின்றது. பகவான் சீக்கிரம் சௌக்யம் செய்யட்டும்" என்றது.

கொஞ்சநேரம் கழித்து மறுபடியும் கண் திறந்தான். ஒரு யுவதி முன் நின்றுகொண்டிருந்தாள். ராமகிருஷ்ணனுக்குப் பழகிய முகம்போன்று தோன்றியது. பிறகு அவள் ரமாமணியே என்று தெரிந்துகொண்டான். கொஞ்சம் கொஞ்சமாக முன் நடந்த சம்பவங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. "நான் எங்கேயிருக்கிறேன்" என்றான் ராமகிருஷ்ணன்.

"பயப்படவேண்டாம் என் வீட்டில்தானிருக்கிறீர்" என்றாள் ரமாமணி. ராமகிருஷ்ணன் உட்காரப் பிரயத்தனப்பட்டான். ரமா வேண்டாமென்று சொல்லித் தன் மலர்க் கரங்களால் தடவிக்கொடுத்தாள்.

அவளுடைய ஸ்பர்ஸத்தால் ராமகிருஷ்ணன் ஆனந்தக்கடலில் மூழ்கினான். ஆச்சர்யம் நிறைந்த குரலில் "நான் கனவு காண்கின்றேனா" என்று கேட்டான். "இல்லை நினைவுதான் என்றாள்" ரமா.

அவனால் பொறுக்கமுடியவில்லை. சமாசாரத்தை அறிய அதிக ஆவலுற்றான்.

"ரமா நான் உன்னைக் காப்பாற்றும் பொருட்டே ஜலத்தில் குதித்தேன். பிறகு எப்படி உன்னை பூர்ண சௌக்யத்துடன் பார்க்கிறேன்" என்றான்.

அவள் அன்பு ததும்பும் பார்வையுடனும் புன்னகை பூக்கும் முகத்துடனும் "பின்னால் சொல்கிறேன் இப்பொழுது மூளைக்குத் தொந்திரவு கொடுக்க வேண்டாம்" என்றாள். பிறகு பக்கத்திலிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு உடம்பைத் தொட்டு எவ்வளவு உஷ்ணமிருக்கின்றது என்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

ராமகிருஷ்ணன் முதலிலிருந்து நடந்த எல்லா விருத்தாந்தங்களையும் அறிய அதிக ஆக்ரஹப்படுத்தினான். ரமாமணி இம்மாதிரி ஆக்ரஹப்படுத்தினால் தான் போய்விடுவதாகப் பயமுறுத்தியதால் பேசாமல் படுத்துக்கொண்டான்.

ராமகிருஷ்ணனுக்கு இங்கு படுக்கையில் நோயாளியாகவே படுத்திருக்க வேண்டுமென்ற ஆவலேற்பட்டது. ஏனென்றால் ரமாமணியின் பக்கத்திலேயே எப்பொழுதும் இருக்கலாமல்லவா? அவளைப் பிரியும் ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றும். ரமாவின் சேவையும் டாக்டரின் மருந்தும் மெல்ல குணப்படுத்தின. ராமகிருஷ்ணன் சௌக்யமடைந்ததும் ரமாமணியைப் பிரிய வேண்டுமே என்று எண்ணும் போதெல்லாம் துக்கமடைந்துகொண்டிருந்தான். ஆனால் ரமாமணியோ இவன் சுகமடைவதைப்பார்த்து ஆனந்தமடைந்துவந்தாள். அவனுடைய சரீரம் ஸ்வஸ்தம் அடைய அடைய ஹிருதயம் அஸ்வஸ்தம் அடைந்து வந்தது.

ஒரு நாள் ராமகிருஷ்ணன் ஹாலில் உலாவிக்கொண்டிருந்தான். ரமாமணியும் அங்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய கண்கள் அநேகம் தடவை காதல் என்னும் சமாசாரத்தைத் தெரிவித்தன. ஆனால் அதற்குப் பதில் அளிக்க அவனால் முடியவில்லை. தன் உயிரையும் பொருட்படுத்தாமல் தண்ணீரில் குதித்தான். அம்மூட்டையை வெகு கஷ்டப்பட்டுக் கரைக்கு எடுத்து வந்தான். ஒருவேளை ரமாமணி அல்லவென்று தெரிந்திருந்தால் அவ்வளவு கஷ்டப்பட்டிருக்கமாட்டான். ஆம்! ஒரு பெண்ணைக்காப்பாற்ற முயற்சி செய்திருப்பான். ஆனால் தன் உயிரைப் பொருட்படுத்தாமல் அவ்வளவு தீவிரமாக முயற்சி செய்திருக்கமாட்டான். இதையெல்லாம் ரமாமணியிடம் சொல்ல நினைத்தான். ஆனால் அவ்வளவையும் சொல்லத் தைர்யம் வரவில்லை. மெதுவாகத் தைர்யத்தை வரவழைத்துக்கொண்டு

"ரமா!"

"உம்"

இந்தியா கவர்ன்மெண்டு வைத்திய பட்டதாரியும், கவர்ன்மெண்ட் இந்தியன் மெடிகல் ஸ்கூல் ஹாஸ்பிடல் இவைகளின் நிர்வாஹ கவர்னிங்பாடி, மெடிகல் அட்வைஸரி கமிட்டி, & ஸெண்ட்ரல் போர்டு இவைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலையின் மெடிகல் டிப்ளோமா பட்ட பரீக்ஷைகளுக்கு பரீக்ஷாதிகாரியுமான,

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலவீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1-க்கு 0-8-0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

மஹா பில்வாதி தைலம்:—நேத்திர ஸம்பந்தமான எல்லா ரோகங்களையும் கண்டித்து, கண்களுக்கு நல்ல குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய அப்பியங்கன தைலம். 6 அவு. கொண்ட சீசா 1-க்கு ரூ. 2. வி.பி.வேறு.

ஆனந்த படை நிவாரணி:—இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பி வாராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணா 12. வி. பி. வேறு.

பிரமதாரோக பஞ்ஜனி:—மூத்திர நாளத்தின் எரிச்சல், வெள்ளை முதலிய வெட்டை ஸம்பந்தமான துஷ்டரோகங்களைக்கட்டாயம் தீர்க்கும். சீசா 1-க்கு ரூ. 3. வி. பி. வேறு.

ஆனந்தாஞ்சனம்:—ஸகலவிதமான வலிகளுக்கும், கீல்பிடிப்புகளுக்கும், தேவாமிருதம் போன்றது. சீசா 1-க்கு அணா 8. வி. பி. வேறு.

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

சிறந்த கூந்தல் ஆகாரம்

தேகத்திற்கு நல்லுணவு அவசியமல்லவா? அதுபோல் கூந்தலுக்கும் நல்ல ஆகாரம் அவசியம். எனவே உலகப் புகழ் வாய்ந்த

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்ட்)

உபயோகியுங்கள்.

கூந்தலை வளர்க்கக்கூடிய பல மூலிகைகளாலானது. பொடுகைப்போக்கி, தலைமயிர் உதிர்வதைத் தடுக்கும். மூளைக்குக் குளிர்ச்சி தரும். திவ்விய மணம். விலை புட்டி 1-க்கு ரூ. 1; 3 புட்டிகள் ரூ. 2-10. வி. பி. செலவு தனி. தபால் செலவுக்காக $\frac{1}{2}$ அணா ஸ்டாம்பனுப்பினால் சாம்பில் கிடைக்கும். மொத்த ஏஜண்டுகள்:

The Anglo Indian Drug & Chemical Co , BOMBAY, 2

"என்மேல் இவ்வளவு அன்பு பூண்டிருப்பதற்கு நான் என்ன கைம்மாறு செய்யமுடியும்? என்னிடம் பணமோ கிடையாது. ஆனால் ஹிருதயம் மாத்திரம் இருந்தது. அதையும் நீ கொள்ளை கொண்டுவிட்டாய்"

பாவம்! ஹிந்து சமூகத்தின் ஓர் அபலை எவ்விதம் பதிலளிப்பாள். தாயார் தகப்பனாரின் அதிகாரம் தலைக்கு மேல், இதைத்தான் டினால் உலகநிந்தை என்ற நரகம் வேறு! இதற்குப்பதில் அவள் கண்களில் கார்மேகம் பொங்கியது போல் நீர்ப்பிரவாகம் கரை புரண்டோடியது. அவள் முகத்தைமுந்தானையால் மறைக்க முயன்றாள். ஆனால் ராமகிருஷ்ணன் பார்க்காமலிருக்கவில்லை.

"ரமா! துக்கப்படுவதில் என்ன பிரயோஜனம். இப்பாழும் ஜாதிமதம்! நம்பெண்கள் எல்லோரும் தற்சமயம் எவ்வழியில் செல்கிறார்களோ அதே வழியிலும் அந்த விதியிலும்தான் உனக்கும் செல்ல வேண்டியிருக்கும்!"

"ஆனால் ஹிருதயத்தை விதிகளல்ல, இரும்புச் சங்கிலியாலும் கட்டுப்பாடு செய்யமுடியாது" என்றாள். ரமா கண்களில் நீர் இன்னும் ததும்பிக்கொண்டிருந்தது.

இதையெல்லாம் மறைவிலிருந்து ரமாமணியின் தகப்பனார் கேட்டுக்கொண்டிருந்தார். திடீரென்று அவர் பிரவேசம் செய்ததால் சம்பாஷணை வேறு விதம் திரும்பிற்று. ஆனால் டாக்டரின்மனதில் இவர்களைப் பற்றிய கவலையே எழும்பிக் கொண்டிருந்தது. அவருடைய ஹிருதயம் அந்தகாரமடைந்துவிட்டது. எங்கும் வழியே தெரியவில்லை! ஒரு பக்கம் சமூகம் ஜாதி!! மறுபக்கம் புத்திரி, அவள் எதிர்கால வாழ்க்கை!

* * * *

ராமகிருஷ்ணன் இப்பொழுது பூர்ண சௌக்யமடைந்தான். ஆனால் அவன் மனநோய் மாத்திரம் மாறவில்லை. ரமாமணியைப் பிரியவேண்டுமென்று நினைக்கும்போதெல்லாம் அவன் மனதில் பெரிய வேதனை ஏற்படும். ஹிருதயம் சூர்ணமாய்விடும். இங்கு இனி இருப்பது உசிதமல்லவென்று தோன்றிற்று. கலாசாலையும் வேனிற்காலமான படியால் மூடப்பட்டிருந்தபடியால் ஊருக்குப் போக நிச்சயித்தான். அதை ரமாமணியின், தாய் தந்தையிடமும் தெரிவித்துவிட்டான்.

ரமாமணி அன்று முதல் அன்னமும் நீருமின்றி ஒரு அறையில் கிடந்தாள். என்ன சமாதானம் சொல்லியும் முடியவில்லை. டாக்டர் சாம, தான, பேத, தண்டம் என்ற நான்கு உபாயங்களைப் பிரயோகித்தும் வெற்றியடையவில்லை. கடைசியில் அவருக்கும் அதிகத் துக்கமேற்பட்டது.

ராமகிருஷ்ணன் ஊருக்குப் போகத் தயாரானான். வண்டியும் வாயிலில் வந்து நின்றது. ரமாமணி அழுதாள். கண் சிவந்து விட்டது. கடைசி முறை ராமகிருஷ்ணனை ஊருக்கு அனுப்ப அதே கோலத்துடன் வந்து நின்றாள். ஆனால் கண்ணீர்ப் பிரவாகம் மாத்திரம் நிற்கவில்லை. வண்டியில் ராமகிருஷ்ணன் ஏறப்போகும் சமயம் ஓவென்றலறிக் கொண்டு ரமாமணி கீழேவிழுந்தாள். மூர்ச்சையும் ஆய்விட்டாள். டாக்டரால் இப்பரிதாபக் காட்சியைப் பார்க்க முடியவில்லை. ராமகிருஷ்ணனிடம்

"நான் ஒரு பரிசு கொடுக்கின்றேன், பெற்றுக்கொள்ள வேண்டும். தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் என் புத்திரியைக் காப்பாற்றினீரல்லவா?

"தங்கள் தயவே போதும் எனக்கு. வேறு பரிசும் வேண்டியதில்லை."

"கண்டிப்பாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

ராமகிருஷ்ணன் ஆச்சர்யத்துடன் "என்ன பரிசு?" டாக்டர் ரமாமணியின் கையைப் பிடித்து "இதோ இவளைத் தங்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்!"

எதிர்கால சோதிடம்

ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 2. ஆரூடம் கேள்வி 5-க்கு ரூ. 1. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ். ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,
புதுச்சேரி.

தோலைச் சுத்தமாக்கும் விநோதமான சோப்புக் கட்டி.



உன்னுடைய உடம்பின் தோலை குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) தினந்தோறும் கழுவவும். அதன் வாசனையுள்ள நுரை ரோமத் துவாரங்களை அழுக்ககற்றி சுத்தி செய்து தோலை மிருதுவாக்கி உல்லாசமுண்டு பண்ணுகிறது. சில நாளைக்குள் உன்னுடைய உடம்பின் தோல் நன்மை அடைகிறதைப் பார்ப்பாய். நீ கரப்பான், பருவகள் முதலிய தோல் வியாதிகளால் சங்கடப்பட்டால், புண்ணிருக்கிற இடங்களில் குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவ வேண்டும். படை, சொரி முதலியவைகள், குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) உபயோகித்தால், சீக்கிரம் மறைந்துபோய், தோல் மிருதுவாகவும் அழகாகவும் ஆகும்.

உலகமுழுதலும் ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் தங்களுடைய உடம்பின் தோலை தெளிவாகவும், சுகமாகவும் வைத்துக் கொள்வதற்காக வருஷமுழுதலும் எல்லாக் காலங்களிலும் குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) உபயோகிக்கிறார்கள்.

குடிகூரா சோப்புக்கட்டி
CUTICURA SOAP

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.

கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசெல்ப் -

கொனேகான்

வெள்ளை, வெட்டைக்கு

பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

THIS IS NOT A HAIR-DYE



உங்கள் கூந்தல் ஒளியிழந்திருக்கிறதா?—அதனால் உங்களுக்கு வயது அதிகமாகிவிட்டாற்போல் தென்படுகிறதா?—அப்படியாயின் உங்கள் மருந்து வியாபாரியிடம் ஓடி ஏதாவதொரு சாயத்தை வாங்கித் தடவிக்கொள்ளாதீர்கள். கேஷ்கலாவை உபயோகியுங்கள். அற்புதமான கூந்தல் லோஷன்.

btainable from:—
அப்பா & கம்பெனி, சைனாபஜார் ரோட், மதராஸ். வி. ஜே சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் சிடி & கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ட-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No.(M)5506. Bombay 14.



தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்குக் கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது!

நாகரீகத்திற்கேற்ற நானாவிதக் கலர் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய்க் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,
77, சைனா பஜார் ரோட், மதராஸ்

நமது தொடர் கதை.

ராதா

(குருமலை ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளை)

விடியற்கால நேரத்தில் முற்றம் பெருக்கிக்கொண்டு நின்ற ஒரு சிறு பெண்ணை, தெருவழியாய்ப்போன ஒரு பகையாளிப் பறையன் கண்டு, ஒரு நூலில் மஞ்சளைக் கோத்து அப்பெண்ணின் கழுத்தில் பலாத்காரமாய்க் கட்டிவிட்டுத் தன்னைப் பிறர் பிடித்துக்கொள்வார்களென்ற பயத்தால் உடனே ஒரு கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்துகொள்கின்றான் என்று வைத்துக்கொள். இப்படிப்பட்ட ஒரு விஷயத்தில், அந்தப் பறையன் அந்தச் சிறுமிக்கு நாயகனாவானா? அவன் மரணத்தினால் அந்தப் பெண் விதவையாக வேண்டுமென்பது நியாயமா? அதுபோலவே, நமது ராதாவை இக்கோலத்திற்காளாக்க வேண்டுமென்றே, அந்தச் சண்டாளன் நச்சுமுதலி, பழம்பகையை மனத்தில் வைத்துக்கொண்டு; இந்த ஏழைப்புத்தியுடைய நந்தகோபனை ஏமாற்றி, ராதாவைக் கொள்ளையிட்டுக் கொண்டுபோய், அந்தத் தண்டபாணியைக் கொண்டு அவளுக்குப் பலாத்காரமாய்த் தாலிகட்டுவித்து, முடிவில் அந்தத் தண்டபாணியையும் அவனே கொலை செய்துவிட்டான். இதற்காக, யாதொரு பாவமுமறியாத என்மருமகள் ராதா விதவையாக வேண்டுமென்று எந்த மூடனாவது சொல்வானா? அந்த நச்சுமுதலியின் கொடுமைக்கும் இந்த நந்தகோபனுடைய மடமைக்கும் என் மருமகள் ர[illegible]ாவா ஜவாப்தாரி? கற்ப[illegible]ரில் யாரோ எவனோ இ[illegible]தற்காக நம[illegible] பரி[illegible]தா ஆ எ[illegible] அவ[illegible] ருங்கள் நான் [illegible] யென்று ஸர்டிபி[illegible] ருக்கிறேன். உங்[illegible]

களங்கம் சிறிதுமின்றிச் சும்மா சந்தோஷமாய் இருக்கும்படி ராதாவினிடம் சொல். அமரேசன் சொல்லியனுப்பினதாகவே சொல்லு. மற்றப்படி ராதாவுக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லையல்லவா? அதுவே எனக்கு மிகுந்த சந்தோஷம். இனிமேல் நீ அவளை அடிக்கடித் தொந்தரவு செய்யவேண்டாம். நந்தகோபா, எல்லாம் நம்மிருவருடைய இஷ்டம்போலவே முடிந்தது. அத்தையும் பூந்துறை அம்மையும் சம்மதித்துக்கொண்டார்கள். யார் என்ன ஆக்ஷேபணை சொல்லிவிடுவார்களோவென்று பயந்து கவலைப்பட்டாயே? உன் கவலை தீர்ந்துவிட்டதா?

நந்த:—அத்தான், எனக்கு இப்பொழுதிருக்கிற புத்தியும் ஆளுதவியும் ஏழு வருஷத்திற்கு முன் இருந்திருந்தால் இத்தனை துக்கமும் அவமானமும் கஷ்டமும் வந்திராதே?

கார்த்:—அதுவும் ஒரு நன்மைக்குத்தானென்று நினை. அந்தக் காலத்தில் உனக்கு இந்தப் புத்தியும் ஆளுதவியும் இருந்தாலும்கூட நீ என்ன செய்திருப்பாய்? நச்சுமுதலியின் வஞ்சனையில் அகப்படாமல் வேறொரு நல்ல மாப்பிள்ளையைத் தேடி உன் மகளுக்கு விவாகம் செய்திருப்பாயேயன்றிச் சித்தாந்தம்செட்டியார் எடுத்து வளர்த்த அநாதைப் பிள்ளையாகிய அமரேசனுக்கு உன் மகளைக் கொடுக்க உன் மனம் துணிந்திராது. ஆகவே, உன் மகள் வேறொரு கணவனோடு மங்கலமாய் வாழ்ந்திருப்பாள். இனி, முடிவில் நானும் உன் தமக்கையும் திரும்பி வந்தபின், இந்த அமரேசன் மருமகனென்று தெரிந்து, "அவனுக்குப் பெண்ணைக் கொடுத்தேனில்லையே" என்று நீயும்வருந்தியிருப்பாய்; நானும் வருந்தியிருப்பேன். ஆனால், தற்சமயம் அப்படிப்பட்ட சங்கடங்களொன்றுமில்லாது, எல்லாம் சௌகரியமாய் அமைந்துவிட்டது. நச்சுமுதலி எனக்கும் உனக்கும் செய்த தீமைகளெல்லாம் முடிவில் நமக்கு நன்மையாகவும் அவனுக்குத் தீமையாகவும் முடிந்தன. இன்னும், என்னை அவன் இருபத்தைந்து வருஷம் அண்டமானுக்கு அனுப்பவில்லையானால், என் மகன் அமரேசன் அமெரிக்காவரை சென்று இத்தனை பிரஸித்தி பெற்ற பண்டிதனும் நாவலனும் தலையெடுக்க முடிந்திருக்குமா? அதுவும் நச்சு முதலி செய்த உதவிதான். உலகத்தில், நல்லவர்களால் மட்டுமன்று, கெட்டவர்களாலும், அளவற்றநன்மைவிளைகின்றன.

நந்த:—(நகைத்து) அத்தான், அதெல்லாம் சரிதான். இப்பொழுதாவது ராதா பூரணமாய்ச் சம்மதித்துக் கொண்டாளா? அது தங்களுக்கு நிச்சயம்தானா? இனிமேல் நான் ஒரு பொறுப்பும் வைத்துக்கொள்ளேன்.

கார்த்:—நந்தகோபா, வேறே என்ன நிச்சயம் வேண்டுமென்கின்கிறாய்? இப்படிப்பட்ட விஷயங்களில், பெண்களின் குறிப்பறிந்து நாம் நடந்துகொள்ளவேண்டியதைத் தவிர, அவர்கள் வாய் திறந்து ஒன்றும் சொல்லார்கள். அன்றியும் பெண்கள் "ஆம்" என்பதற்கு "இல்லை" யென்பது பொருள்; அவர்கள் "இல்லை" யென்பதற்கு "ஆம்" என்பது உண்மைப் பொருள். பெண்களின் பரிபாஷையை உன் தமக்கை கற்பகம் போன்ற பெண்கள்தான் இலகுவாய் அறிவார்களன்றி, நீயும் நானும் அறியும்படி அவர்கள் பேசமாட்டார்கள்! தவிரவும், அந்தக் காலத்தில் என்னை மணந்துகொள்ள விரும்புவதாய் உன் தமக்கை கற்பகம் யாரிடமாவது வாய் திறந்து சொன்னதுண்டோ? (என்று நகைத்தார். இந்தப் பரிகாச மொழியைக் கேட்ட)

கற்ப:—(நாணத்துடன் வீட்டிற்குட்போய் நின்று நகைத்து முடித்து) தாயே, ராதா, உன் மாமா சொல்வதைக் கேட்டாயா? (என)

ராதா:—(மெல்ல நகைத்து) அத்தை, உங்கள் மகன் இரண்டு மணி நேரம் பிரசங்கம் செய்து போதிக்கும் பெரிய பிரசங்கத்தின் ஸாரத்தை என் மாமா இரண்டு வார்த்தையில் அடக்கிச் சுருக்கிச் சொல்லிவிடுவார்கள்.

கற்ப:—தாயே, ஏன் ஈரப் புடவையோடு நிற்கின்றாய்? இந்தப் பழம் புடவைகளைக் கட்டிவைத்து விட்டுப் பெட்டிக்குள்ளிருக்கிற நல்ல புடவைகளை யெடுத்து உடுத்திக்கொண்டு, நெற்றிக்கு ஏதேனும் இட்டுக்கொள்.

நந்த:—தாயே ராதா, உன் தாயாருடைய பெரிய பெட்டியைத் திறந்து உனக்கு வேண்டிய புடவைகளையெல்லாம் எடுத்துக் கொள். (என்று தன் அறையிற் கிடந்த கொத்துசாவியைச் சுழற்றிப் பட்டகசாலைக்குள் நீட்டினார்)

இவ்வாறு நந்தகோபர் உள்ளே நீட்டிய சாவியை ராதா அன்பாய் வாங்கிக்கொண்டு அறைக்குட் சென்றாள். அதுவே ராதாவின் சம்மதக்குறியென்றறிந்த நந்தகோபர், அன்றுதினம் புதிதாய் வேறொரு பெண்ணைப் பெற்றெடுத்தாற்போல், அளவற்ற சந்தோஷமடைந்து உடல் பூரித்தார். அன்று முதலாகவே கல்யாண வேலைகளைத் தொடங்கிவிட்டார். உள்ளபடியே நந்தகோபர் தக்கபொருள் படைத்த செல்வவான்; நல்ல உதாரவான். ஆனால், சுயபுத்தி ஒன்றில்லாத தோஷத்தால் இத்தனை கேவலத்துக்கு உட்பட்டார். ஆதலால், யாரும் நினைந்திராமல் இருபத்

நமது புதிய தொடர் கதை

கரும்பூதம்

அல்லது

கள்வனைக் காதலித்த காரிகை

ஓர் ருசிகரமான துப்பறியும் நவீனம்

திருச்சி ஸ்ரீமான் கே.வி.எஸ். வாஸ், பி.ஏ., (ஆனர்ஸ்) எழுதியது.

அடுத்த வாரம் ஆரம்பமாகிறது.

மனோரஞ்சனி
இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!
எம். எஸ். ராமுலு கம்பேனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

சுதேசமித்திரன் வாரப் பதிப்பு 1937ஷ் ஏப்ரல்மீ 11உ

டாக்டர் நாயுடுருக்கும் ராதாவுக்கும் விவாகம் நடைபெற்றது.

தைந்து வருஷத்திற்குப்பின் தம் அத்தானையும் அக்காளையும் கண்ட ஆனந்தத்தையும், அதற்கு மேலாய் உலகப் பிரஸித்திபெற்ற தம் அருமை மருமகனைக் கண்ட ஆனந்தத்தையும், அனைத்திற்கும் மேலாய் தம் மதிக்குறைவினால் வைதவ்வியச் சிறையிலிருந்து வருந்திய தம் செல்வக் குழந்தையின் தீராக் கவலையெல்லாம் தீர்ந்து அவள் மறுபடியும் ஒரு சுமங்கலியாகப் போகிற பேரானந்தத்தையும் நினைந்து, நந்தகோபர் தம் ஏகபுத்திரியின் மண விழாவை வெகு சிறப்பாய் நடத்த வேண்டுமென்று ஆசை கொண்டார்.

இதுவரையும் இந்த விவாக விஷயமாய் நந்தகோபர் வீட்டில் நடந்துகொண்டிருந்த ஆலோசனைகளையெல்லாம் அவ்வப்போதே நந்தகோபர் மூலமாயறிந்த சுலோசன நாயுடுவும் அவர் மூலமாயறிந்த நாவலரும் இந்த உத்தேசம் இனிது நிறைவேறவேண்டுமென்ற ஆவலுடனிருந்தவர்களாகையால், விவாகம் உறுதியான சமாசாரத்தைக் கேள்வியுற்று அவர்களும் அளவற்ற ஆனந்தமடைந்தார்கள். அன்று மாலையில் அனைவரும் ஒன்றாயிருந்து ஆலோசனை செய்து, அடுத்து வரும் ஆனி மாதம் மூன்றாந்தினமாகிய ஆதித்தவாரத்தன்று காலையில் டாக்டர் அமரேச நாயுடுருக்கும் ராதாவுக்கும் விவாகோத்ஸவம் நடத்துவதென்று தீர்மானித்து, அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யத் தொடங்கினார்கள். ...மார் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் பெண்களின் ஸ்வாதீனத்தைப்பற்றி அரிய பிரசங்கம் செய்து போதித்த நாயுடுர் தாமே ஒரு விதவா விவாகம் செய்யப்போகின்றாரென்ற ஆனந்தமான சமாசாரம் சாலிவாடி கீழப்பாளய முதலிய வெளியிடங்களுக்குமெட்டிவிட்டது. ஸர்வ ஜனங்களும் ஆச்சரியத்தோடும் வேடிக்கையாயும் ஆனி மாதம் மூன்றாந் தினத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார்கள். விவாக தினம் சமீபிக்குமுன்னரே, கார்த்திகேயர், கற்பகம் இருவருடைய பழங்கதையும் மேலும் மேலும் பிரஸித்தமாய்விட்டது. வைகாசி மாதத்திலேயே நந்தகோபர் கல்யாண வேலைகளெல்லாவற்றையும் முடித்துத் தமது பந்து மித்திரர்களுக்கெல்லாம் முகூர்த்தக் கடிதங்களனுப்பிவிட்டார். அவ்வாறே நாயுடுரும் எண்ணற்ற இடங்களிலுள்ள தமது எண்ணற்ற நண்பர்களுக்கெல்லாம் ஆயிரக்கணக்கான அழைப்புக் கடிதங்களனுப்பியதுமன்றி, தமது "சைனுபஜார்" பத்திரிகையின் சந்தாதாரர்களைத் தனித்தனியே கடிதமூலமாயழைப்பதற்குப்பதிலாய், தமது பத்திரிகையிலேயே தமது விவாகவிஷயத்தைப்பற்றி ஒரு குறிப்பெழுதியும் பிரசுரம் செய்தார். இவ்வாறு நாயுடுருடைய மணவிழாவைப்பற்றிய மங்கல சமாசாரம் சென்னை ராஜதானி முழுதும் பரவி, அயல் நாடுகளுக்கும் எட்டிவிட்டது. தூரமான பிரதேசங்களிலுள்ள அநேக பிரபுக்களும் பண்டிதர்களும் நண்பர்களும் இன்னின்ன தினத்தன்று இன்னின்ன ரெயிலில் சாலிவாடி ஸ்டேஷனில் வந்திறங்குவதாய்ப் பதிற் கடிதங்களனுப்பினார்கள்.

இதற்குள், வைகாசி திகைந்து ஆனி மாதமும் பிறந்துவிட்டது. முதலாம் தேதி மாலை முதலாகவே கல்யாண விருந்தினர்கள் எல்லாரும் ஒவ்வொருவராய் வந்துகொண்டிருந்தார்கள். மகேந்திரத்திலிருந்து பெண் பாடசாலை ஹெட்மாஸ்டர் மரியதாஸரும் திவான்பேஷ்கார் ராமானுஜ பந்துலுவும் அவர் குமாரரும் நாயுடுர் நண்பருமாகிய பாரிஸ்டர் நரஸிம்ம பந்துலு முதலியவர்களும் வந்தார்கள். ஒற்றைப்புளியிலிருந்து சித்தாந்தம் செட்டியாரும் அவர் மனைவி ஆண்டாள் அம்மையும் தம் அபிமான புத்திரனுடைய மணவிழாவைக் காண வந்துவிட்டார்கள். அவர்களிருவர்க்கும் நாயுடுரும் அவருடைய பெற்றோரும் அளவற்ற உபசாரம் செய்தார்கள். இதுவரையும் பாற்கடலில் தனித்திருந்து வாடிய காளத்தியை அழைத்து வரும்படிக் கார்த்திகேயப் பிள்ளையால் அனுப்பப்பட்ட பூசையாச்சியும் ராஜூவும் இரண்டாம் தேதியன்றே காளத்தி சகிதம் வந்துவிட்டார்கள். அவர்களுடன், திருவூர் முதலிய விடங்களிலுள்ள கார்த்திகேயரின் பந்துக்களும் வந்து சேர்ந்தார்கள்.

22. திருமண வைபவம்

முகூர்த்த தினமாகிய மூன்றாம் தேதி பலபலவென்று விடியவும் மணவிழாவும் தொடங்கிவிட்டது. செயர்மென் நாயுடுவின் மனைவியும் நாவலருடைய பெண் மக்களும் வந்து மணப்பெண்ணாகிய ராதாவுக்குப் பெண்ணலங்காரம் செய்தார்கள். கார்த்திகேயரும் நந்தகோபரும் அதிகாலையில் ஸ்நாநம் செய்து முடித்துக் கல்யாண விருந்தினர்க்குச் சிற்றுண்டியளித்து உபசரித்துக் கொண்டிருந்தார்

(35-ம் பக்கம் பார்க்க)

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

14. ஸகா அவுஸ், மாடுங்கா, பம்பாய்

ஸ்ரீகர கஸ்தூரி கோரோஜனை மாத்திரை

"பாலகஸ்" பேதி மாத்திரை "யூனிகான்" டானிக்

டாக்டர் ஜம்மி வெங்கடராமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெ 06. B

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பிங்னட் வீதி—ரா

‘‘ஆராய்ச்சிக்காரர்களுக்கு 100 வருஷம் பிரமாதமல்ல.

‘‘ஐயையோ, நேற்றுதானே ஆராய்ச்சிக்காரர் அருமை நாதத்திற்கு 100 ரூபாய் கடன் கொடுத்தேன். நூறுவருஷம் கழித்துத் தான் வருமோ?’’

* * * *

காலேஜில் படிக்கும் பிள்ளைக்குத் தகப்பனார் பின்வருமாறு எழுதினார்:—‘‘உன் கடிதம் கிடைத்தது. உனக்கு வழக்கமாக அனுப்பும் 50 ரூபாயுடன் ப[illegible]து ரூபாய் அதிகம் அ[illegible]பியிருக்கிறேன். ஆனல் [illegible]டிதத்தில் ஒரு தவறு இ[illegible]து, ‘10’ எழுதுவதென்[illegible]எழுதிப் பக்கத்தில் ஒரு[illegible]ர்தான் எழுத வேண்டும்[illegible]ரண்டு ஸைபர் [illegible] ஐாக்கிரதை.’’

* * * *

தீயணைக்கும் மோட்டார்களிருக்கும் இடத்திலுள்ள டெலிபோன் மணி ஒலித்தது. தீயணைக்கும் யந்திரங்களின் பிரதம ஆபீஸர் டெலிபோனில் பேசினர்:—

ஆபீஸர்:—தீயணைக்கும் மோட்டார்களிருக்குமிடம் தான். எங்கே தீப்பற்றிக் கொண்டிருக்கிறது?

டெலிபோனில் குரல்:—இப்பொழுதுதான் என் வீட்டிற்கு முன் நல்ல செடிகள் வைத்திருக்கிறேன். ஆகையால்...

ஆபீஸர்:—தீ எங்கே என்று சொல்லுங்கள்.

‘‘என் செடிகளை நாசம் செய்யாமல் அடுத்த வீட்டில் பற்றிக்கொண்டிருக்கும் தீயை அணையுங்கள்.’’

* * * *

பயந்த மனிதர்:—இந்த ஆற்றைக் கடக்கையில் யாராவது காணுது போயிருக்கிருர்களா?

படகுக்காரர்:—அப்படியொன்றும் நடந்ததில்லை. சென்ற வாரம் படகு கவிழ்ந்து ஒருவர் காணுதுபோனர். ஆனல் மறுநாளே அவரது பிணம் அகப்பட்டுவிட்டது.

* * * *

பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவந்த ஒருவர் தமது வீட்டுக்குச் சென்றார். அவரை அவரது நண்பர்கள் வரவேற்றனர். சிலர் மட்டும் அவரை இன்னும் பைத்தியமென்றே பரிகாசம் செய்தனர். அதற்கு அவர், ‘‘இதோ பாருங்கள் நான் பைத்தியமில்லையென்று ஸர்டிபிகேட் வைத்திருக்கிறேன். உங்களுக்கு ஸர்டிபிகேட் ஒன்றுமில்லை. ஆகையால் நீங்கள் தான் பைத்தியம்’’ என்றார்.

* * * *

ஒரு சங்கத்திலுள்ள அங்கத்தினர் ஒருவர் எப்பொழுது பார்த்தாலும் தொண தொணவென்று பேசிக்கொண்டிருக்கும் சுபாவமுடையவராகவிருந்தார். இது பலருக்குத் தொந்திரவாக விருந்தது. கடைசியாக ஒரு அங்கத்தினர் அவர் சங்கத்தைவிட்டு ராஜிநாமாச் செய்தால் 25 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னர்

மேற்படி அங்கத்தினர் இதைக் காரியதரிசியிடம் தெரிவித்தார்.

காரியதரிசி:—அதற்குள் அவசரப்பட வேண்டாம். 25 ரூபாய்க்கு அதிகம் கொடுக்கக் கூடியவர்கள் வருவார்கள்.

* * * *

அடுத்த விட்டுக்காரர் இரவெல்லாம் பாடிக்கொண்டிருந்து தன் தூக்கத்தைக் கெடுத்ததாக ஒருவர் போலீஸில் புகார் செய்தார்.



லண்டனுக்கு விஜயம் செய்த 14 ஜெர்மன் பள்ளிக்கூட மாணவர்கள் அரக்குப் பொருட் காட்சியில் ஹேர் ஹிட்லரின் உருவத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இன்ஸ்பெக்டர்:—ஏன் ஐயா! நீர் இரவெல்லாம் பாடிக் கொண்டிருந்தீரா?

‘‘ஆமாம். ஆனல் நான் வாய் விட்டுப் பாடவில்லை. மனதிற்குள் பாடிக்கொண்டிருந்தேன்.’’

* * * *

தாய்:— அப்பாவைப்போல நீ பெரியவனில்லையா! இந்த மருந்தைக் குடித்துவிடு.

சிறுவன்:—இல்லை. அப்பாவைப் போலப் பெரியவன் என்றால் இரண்டு அவுன்ஸ் குடிக்க வேண்டும். ‘‘பெரியவர்களுக்கு இரண்டு அவுன்ஸ்’’ என்று பாட்டில் மேல் எழுதியிருக்கிறது. நான் குடிக்க மாட்டேன்.

* * * *

கண்காட்சிச் சாலையில்,

ஒருவர்:—இந்தப் பறவைகள் வெகு அழகாக விருக்கின்றனவே. எங்கிருந்து வந்தன இவைகள்?

பக்கத்திலிருந்த போக்கிரி:—முட்டைகளிலிருந்து.

* * * *

குடித்துவிட்டு அட்டஹாஸம் செய்ததாக ஒருவன் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

மாஜிஸ்திரேட் வழக்கை விசாரித்து, ‘‘5 ரூபாய் அல்லது 15 நாள் சிறைவாஸம்’’ என்று தண்டனை விதித்தார்.

கைதி:—என்னிடம் 2 ரூபாய் தானிருக்கிறது.

மாஜிஸ்திரேட்:— நீ குடிக்காமலிருந்தால் அபராதத்தைக் கொடுத்திருக்கலாமல்லவா.

* * * *

‘‘உன் விஷயத்தில் நான் மிகவும் அனுதாபப்படுகிறேன்’’

‘‘ஏன்?’’

‘‘என் மனைவி நேற்றுதான் ஒரு புதுப்புடவை வாங்கினள். அதைக் கட்டிக்கொண்டு இன்று மாலை உன் மனைவியைப் பார்க்கப் போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறாள்.’’

* * * *

ஒருவர் தனக்குத் தூக்கம் வாராதபோது கதை எழுதுகிறாராம்’’

‘‘அந்தக் கதைகளை மற்றவர்கள் தூக்கம் வரும்போது தான் படிக்கிறார்களாம்.’’

* * * *

செவிடு

‘‘டெப்கில்லர்’’ செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7அணு.

AVAILABLE AT ALL LEADING CHEMISTS,

Wholesale: ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனு பஜார் ரோட், மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது.

I

பல்லவி

இலலோப்ரணதார்த்தி ஹருடனுசு பே-
ரெவரிடிரே சங்கருடனுசு நீ (இலலோ)

அநுபல்லவி

தலசிகரகி சிரகாலமு பதமுன
தண்டமிடின நாயெட தயலேதாயே (இலலோ)

சரணம்

கர சரணயுரமு நொஸலு புஜம்முல
தரணிஷோக ம்ரொக்கக லேதா
சரணனுசுநு மொரலிடலேதா-பஞ்-
சநதீச த்யாகராஜநுத நீ (இலலோ)

II

பஞ்ச நதீச	—திருவையாற்றில் கோயில்கொண்டிருக்கும் சிவபெருமானே!
த்யாகராஜநுத	—தியாகராஜனுல் கொண்டாடப்பட்டவரே!
இலலோ	—இவ்வுலகத்தில்
நீகு	—உமக்கு
ப்ரணதார்த்திஹருடு அனுசு	—ப்ரணதார்த்திஹான் என்றும்,
சங்கருடனுசு	—சங்கரன் என்றும்
பேரு எவரு இடிரே	—திருநாமங்களை யார் இட்டார்கள்?
தலசி கரகி	—உம்மையே நினைந்துருகி
சிரகாலமு	—வெகுகாலமாக
பதமுன தண்டமு இடின	—திருவடிகளை விதிப்படி வணங்கி வரும்
நாயெட	—என் மீது
தய லேது ஆயே	—உமக்குக் கிருபை இல்லாமற் போயிற்றே.
கர சரண யுரமு நொஸலு புஜமுல	—கைகளும் கால்களும் மார்பும் நெற்றியும் புஜங்களும்
தரணி ஷோகம்ரொக்கக லேதா	—பூமியிற் படும்படி நான் நமஸ்காரம் செய்யவில்லையா
சரணனுசுனு மொரலிடலேதா	—உம்முடைய திருவடிகளே சரணமென்று நான் முறையிட —வில்லையா?

(அவ்வாறிருக்க உமக்கு என் என்மீது கிருபை பிறக்கவில்லை?)

III

திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் பஞ்சநதீசப் பெருமானைப் பற்றிய கீர்த்தனைகளில் இஃதொன்று. மற்றவை 'எஹித்ரிஜகதீச,' 'எவருன்னாரு' முதலியவைகளாம்.

இந்தக் கீர்த்தனம் வ்யாஜ நிந்தையாக அமைந்துள்ளது, "நான்விதிப்படி தெண்டனிட்டுக்கொண்டு, உம்மையே தியானித்துத் தியானித்து மன முருகியிருந்தும் உமக்கு என்மீது சிறிதும் கிருபையுண்டாகவில்லை. ஆனுல் உம்முடைய திருநாமமோ ப்ரணதார்த்திஹான்—(அதாவது, ப்ரணத:—விதிப்படி ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்பவர்களுடைய, ஆர்த்தி-துயரங்களை, ஹர:—போக்குபவர்) என்று வழங்குகிறது. என் மட்டில் பயனைக் காணவில்லை. உமக்கு இந்தப் பெயரை இட்டவர் யார்?" என்று ஸ்வாமிகள் நியாய நிஷ்டூரமாடுகிறார்.

ப்ரணத:—பகவானுக்கு நமஸ்காரம் செய்யும்போது, கூப்பிய இரு கைகள், இணைந்த இரு பாதங்கள், புஜங்களிரண்டு, மார்பு, நெற்றி ஆகிய எட்டு அங்கங்களும் தரையில் படுமாறு இருக்க வேண்டும். இதுதான் ஸாஷ்டாங்க நமஸ்காரமெனப்படும்.

(10-ம் பக்கம் பார்க்க)

பிராட்காஸ்ட்

ரிகார்டின்

ஏப்ரல் வெளியீடு!



தஞ்சாவூர்
ராமதாஸ் ராவ்

முடிகொண்டான்
வெங்கடராம அய்யர்

மதராஸ்
விஸ்வநாத சர்மா

B. G. 2428{ஸ்ரீரகுவராப்ரமேய மாமவ — காம்போஜி

நஞ்சன்கூடு
நாகரத்னம்

இம்மாது முதல் முதலில்
ரிகார்டு செய்யப்பட்டுள்ளாள்

B. 2429

ஸசாமர ரமாவாணி—ஹம்ஸாநந்தி
தேவி ஸ்ரீ—ஹமீர்கல்யாணி

புதிய
டிராமா ஸெட்
புண்ய புராண சரித்திரம்
பூ கைலாஸ்
அல்லது
ராவண கர்வ பங்கம்
ஆறு ரிகார்டில்

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்.
313, எஸ்பிளனேட் - மதராஸ்.

10, கன்ஸிஸ்டரி கட்டிடம், பிரன்ட் தெரு, கொலம்பு.

12, வாடர்லு தெரு, கல்கத்தா.

16, ராம்பார்ட் ரோ போர்ட், பம்பாய்.

F. M. S & S. Sக்கு ஸோல் டிஸ்ட்டிரிப்யூட்டர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்ஸி, பினாங்—சிங்கப்பூர்.

'ப்ரணதார்த்தி ஹரன்' என்பது காஞ்சீபுரத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீவரதராஜப்பெருமாளுடைய சிறப்புத் திருநாமங்களில் ஒன்றுமாகுமென்பது இங்கு உணரற்பாலது. சிவபெருமானுடைய சிறப்புத் திருநாமங்களிலொன்ருகவும் இது விளங்குகின்றது.

ஆர்த்தி:—ஸ்வாமிகளுக்கு, பகவான் தம்மை யாட்கொள்ளாமையே பரமதுக்கம். 'தலசிகரகி...நாயெட' என்று கூறியிருப்பதனுல் அவருடைய மனத்துயர் நன்கு விளங்கும்,

'அநந்யாஸ் சிந்தயந்தோமாம் யேஜனு: பர்யுபாஸதே - தேஷாம் நித்யாபியுக்தானும் யோக க்ஷேமம் வஹாம்யஹம்' [வேறு சிந்தையற்றவர்களாய் என்னேயே உபாஸிக்கும் ஜனங்களுடைய யோக க்ஷேமங்களை வஹிப்பது என் பாரம்] என்ற பகவத் வாக்யத்தின்படி நடவாமல் என்பால் கருணைபுரியாதது நியாயமல்ல.

சங்கர:—"சம்(–மங்களத்தை), கர: (-செய்பவர்) - இது பெயர்மட்டில்தான். எனக்கு நீர் செய்த மங்களமென்ன? ஆகையால் இந்தப் பெயர்கள் உமக்குப் பொருந்தாது. உமக்கு இப்படிப்பட்ட பெயர்களை இட்டவர்கள் யாவர்?"

...ம்ரொக்க லேதா?... மொரலிடலேதா? 'நான் நமஸ்காராதிகளைச் செய்ததிலும் அபயம் கோரியதிலும் விதி பூர்வகமற்ற காரியங்களைச் செய்தேனு? இல்லை' என்றபடி.

சரணனுசுனு:—"அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்யேதத்வ்ரதம் மம" என்று ஸ்ரீராம ரூபத்தில் நீர் வாக்களித்திருக்கவில்லையா? என்று பாவம். "நேமொரபெட்டிதே மதிலோன நீடு ஆயாஸமு ஏலரா?"—'நான் முறையிட்டுக்கொண்டால் மனத்தில் உமக்கு ஆயாஸம் ஏன்?' என்று ஒரு கீர்த்தனத்தில் கூறியிருப்பதோடு, அதில் இன்னின்ன குற்றங்களைச் செய்திருக்கிறேனு என்று ஸ்வாமிகள் வினவியிருப்பது இங்கு ஒப்புநோக்கற்குரியது. இன்னும் இதே பாவத்தில் வேறு பல கீர்த்தனங்களுமுள்ளன.

'இலலோ' என்று கூறியதனுல், இந்தப் பூவுலகு சம்பந்தப்பட்டவரையில் உம்முடைய பெயரின் பொருத்தம் சரியாக இல்லை. ஒரு சமயம் அது ஸ்வர்க்காதி இதர புவனங்களுக்குப் பொருத்தமாயிருக்கும் போலும்; அப்படியாயின் 'ஸுரர்கள்', 'நரர்கள்' என்பது போன்ற பேதங் கருதிப் பாரபக்ஷமேற்பட்டிருக்கலாம் என்று த்வன்யார்த்தம்.

IV

அடாணு — ஆதிதாளம்

இந்த ராகம் பாஷாங்கம். ஆகையால் இது இன்ன மேளகர்த்தாவில் ஜன்யமென்று நிர்ணயிக்குமிடத்தில்பூர்வாசார்யர்கள் அபிப்பிராயபேதப்பட்டிருக்கின்றனர். முக்யமாக, 72 மேளகர்த்தா முறைப்படி 29 வதான (தீர) சங்கராபரணத்தில் ஜன்யமென்று ஒருவகையினரும், 28 வதான ஹரிகாம்போஜியில் ஜன்யமென்று மற்றொரு வகையினரும் கூறுகின்றனர். காலஞ்சென்ற ஸங்கீத வித்வான் கே. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், தம் கானபாஸ்கரத்திலும் இதர நூல்களிலும் 29-ல் ஜன்யமென்றும், ஸரிமபநிஸ்-ஸ்நிதாபமகாரிஸ என்ற நடையை யுடையதென்றும் கூறியிருக்கிருர். அன்றியும், "ஸங்கீத ரஸார்ணவம்" என்ற க்ரந்தத்தில், ஸாதாரண காந்தார, கைசிகி நிஷாதங்களுங்கூட உசிதம்போல் கலந்து ப்ரயோகிக்கப்படுமென்றும் வக்ரஸம்பூர்ணமாகவும் பாடத்தகுந்ததென்றும் கூறுகிருர்.

ஆனல், வேங்கடமகியின் ஸம்ப்ரதாயத்தில் வேறுவிதமாகக் கூறப்படுகிறது. சுப்பராம தீக்ஷிதரின் "ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினி, என்ற க்ரந்தத்தில் இது கூறப்பட்டிருக்கிறது. 28-வது மேளகர்த்தாவில் பிறந்ததென்றும், ஸரிகம தாநிஸ்-ஸ்நிதாபம காரிஸ என்று க்ரமமென்றும், பாஷாங்க மென்றும், ஜீவஸ்வரமான தைவதம் கைசிகி நிஷாதத்தை அநுஸரித்து இருப்பதனுல் இது 28-ல் ஜன்ய மென்று கொள்ளத்தக்கதென்றும், பதநிஸ என்ற பிரயோகமுமுண்டென்றும், காகலி நிஷாதமும் கலந்து ப்ரயோகிக்கப்படுகிறதென்றும், எனவே இதை ஸம்பூர்ண நடையுடையதென்றே கொள்ளலாமென்றும் அவர் கூறுகிருர்.

காகாரிஸ, என்பதுபோன்ற ப்ரயோகங்களில் ஸாதாரண காந்தாரமே தீர்க்க கமகத்துடன் த்வனிக்கிறதென்பதும், ஸ்நிதப என்பதுபோல் அவரோஹணத்தில் காகலி நிஷாதமும் பதநிப என்பதுபோன்ற ப்ரயோகங்களில் கைசிகி நிஷாதமும் பயன்படுகின்றன என்பது உற்று ஆராய்பவர்களுக்குப் புலனுகும். ஸ்தாபம என்றும் அவரோஹணத்தில் நிஷாதவர்ஜ்யமாய்ப் பிரயோகிக்கப்படுவது ராகரஞ்சகமாயிருக்கிறது. அவரோஹணத்தில் ஸ்நிபம ரிஸ என்றும் பிரயோகம் காணப்படுகிறது. இன்னும் பல விஷயங்கள் அனுபவ வேத்யம்.

ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள் அடாணு ராகத்தில் விசேஷப் பற்றுடையவராயிருந்தாரென்று கூறப்படுகிறது.

பல்லவி

; * ஸ்நிஸா ;
; * இலலோ ;
பா * ஸ்நீபமாரீ ; ;
... * ரெவரிடிரே ; ;
பத * நிநிஸா ; }
... * இலலோ ; }

ஸாநீஸா ;	ரீ	ஸ்ரிஸ்நிபா	நிநிபா	ஸ்நிபம
ப்ரணதா ;	ர்த்தி	ஹ ரு ட	னு சு	பே...
ரிஸ	மரி	பமநிபநிஸ்	ரீக்ரி-ஸாரிஸ்	நீஸ்நி-தாநித
சங்	...	க ரு ட	னு...-......	சு...-டீ......

அநுபல்லவி

; * மபாநிஸா
; * த ல சி க
; * ம்ம்ரிஸ்நிப
; * தண்...ட
பத * நிநிஸா }
யே * இலலோ }

ரீம்ரிம்ரிஸா	நீஸாரீக்ரி	ஸ்ரிஸா	நிஸ்தா	நீஸா
ர கி சி ர	கா......	ல மு	ப த	மு ல
நிநிபம-ரிமரிஸ	;	மபாநிஸா	ரீக்ரி-ஸாரிஸ்	நீஸ்நி-தாநித
மி டி - ந நா	;	யெடதய	லே...-......	தா...-......

சரணம்

; * பபாபபா
; * க ர ச ர
; * நிநிபா-மபதபமரி
; * தரணி-ஸோ...கி
; * மபாநிஸா
; * சரணனு
; * க்க்ரிஸ்நிப
; * ச ன தி
நத * நிநிஸா }
... * இலலோ }

காகாரீஸா	;	நிஸாரிமா	பா ;	நிநிபா
ணயு ர மு	;	நொஸலுபு	ஜ ;	மு லு
ரிமரிஸ	;	ரிமரிமபா	நிபநிப	நிநிபா
ம்ரொ...	;	க்க......க	லே...	...தா
க்ா க்ா, ரிஸா	நீஸாரீக்ரி	ஸாரிஸ்ஸா ;	நிஸ்தா, நி.	ஸா
சு நு, மொர	லி ட	லே........ ;	தா.......	பஞ்
நிநிபமரிஸ-ஸா	மரிபம	நிபநிஸ்	நீஸா-ரீக்ரி	ஸாரிஸ்நீஸா
...ச...-த்பா	க ரா	...ஜ...	து...த......	நீ...........

கண்ணோட்டம்
பிரமுகர்கள்

டாக்டர் மிஸ். ஜி. எல். நத்தானியல். வட ஆர்காடு ஜில்லா டென்னிஸ் போட்டியில் ஸ்ரீமான் கோபால்ராவும், இவரும் நான்காவது தடவையாக வெற்றி பெற்றிருக்கிறார். (வலது பக்கம்) சென்னை லேடி விலிங்டன் வைத்தியப் பள்ளிக்கூடத் தலைவியாகவும், திருவல்லிக்கேணி சோஷா ஆஸ்பத்திரி சூப்பரிண்டாகவும் நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் (மிஸ்) அச்சிஸன்.

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ஆர். ராஜேஸ்வர ராவ் பம்பாய் சர்வகலாசாலை எல். எல். பி. பரிக்ஷையில் மாகாணத்தில் முதன்மையாகத் தேறி தங்கப்பதக்கம் பெற்றிருக்கிறார்.

திருவனந்தபுரம் மிஸ் ஸாரா போதன், சட்ட சாஸ்திர வாதியான இவர் திருவாங்கூரில் பத்திரிகை நிருபராகச் சேர்ந்திருக்கிறார். இந்தப் பதவி வகிக்கும் முதல் ஸ்திரீ இவர்தான்.

மன்னர் மகுடாபிஷேகத்திற்குச் சென்னை கோஷ்டியுடன் செல்லும் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ராவ்சாகிப் எம் நாராயணமேனன்.

சென்னை கவர்ன்மெண்டு பிரதம மின்சார இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் எம். சுப்பிரமணியன்.



ஆசிரியர் கே. ராம பிஷரோடி. ''முற்கால இந்தியாவின் நாடக மேடை'' என்ற விஷயமாக ஆராய்ச்சி செய்வதற்காக இவரை ஜெர்மன் சர்வகலாசாலை அழைத்திருக்கிறது.

திருவாங்கூரில் கடன் சமரஸப் பிரதம ஆபீஸராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் ஜே. ஈப்பன்.

மே மாதம் முதல் வாரத்தில் லண்டனில் நடைபெறவிருக்கும் க்ஷயரோக நிவாரண சம்பந்தமான சாம்ராஜ்ய மகாநாட்டிற்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் செல்லும் டாக்டர் பி. வி. பெஞ்சமென்.



சென்னை புதிய வருமான வரி கமிஷனர் மிஸ்டர் இ. டபிள்யூ. கிளார்க்.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

திருவாங்கூர் மஹாராஜா

ஸ்ரீ ஸ்வாதி திருநாள்

(1813—1847)

(கே. எஸ். ஆர்.)

"தென்னிந்திய போஜ ராஜன்" என்ற பிரசித்த புகழுடன் வாழ்ந்து சோபித்தவர் காலஞ்சென்ற திருவாங்கூர் மஹாராஜா ஸ்ரீ ராமவர்மா ஸ்வாதி திருநாள். மஹாராஜாவே ஒரு அருங்கலை விநோதராகத் திகழ்ந்தவர்; அருங்கலைகளை வளர்ப்பதிலும் அவர் அளவற்ற உத்ஸாஹம் நிறைந்திருந்தவர். இவர் ஸ்ரீ தியாகய்யரின் காலத்தினராக இருந்தவர். ஒரு சமயம் பரம ராம பக்தரான அய்யர் அவர்கள் மஹாராஜாவின்பெருமையைக் கேட்டு அவரைப் பார்க்கப் புறப்பட்டாராம். ஆனால், மார்க்கத்தில் மஹாராஜாவின் மரணச் செய்தியையும் செவியுற்று அவர் திரும்ப நேர்ந்தது என்று சொல்வார்கள்.

"கர்ப்ப ஸ்ரீமான்"

மஹாராஜா ஸ்ரீ ஸ்வாதி திருநாள் ஜனித்த சந்தர்ப்பமானது மிகவும் ஆச்சர்யகரமானது; மஹாராஜா பாலராம வர்மாவின் தேக வியோகத்துடன் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு ஒரு வார்சும் இல்லையென்று கருதப்பட்டது; ஒரு சமயம் சமஸ்தானமானது பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரால் ஸ்வீகரித்துக் கொள்ளப்பட்டுவிடுமோ என்று மிகவும் பீதி ஏற்பட்டதுண்டு. பிரதிதினமும் ஸ்ரீ பத்மநாப ஸ்வாமிக்குப் பூஜைகள் விமரிசையாக நடத்தப்பட்டன. அநேகம் சத்காரியங்கள் மஹாராணி லக்ஷ்மீபாயிக்கு புருஷ சந்ததி ஏற்பட வேண்டுமென்ற அபீஷ்டத்துடன் நடத்தப்பட்டன. இவை எல்லாவற்றின் காரணமாக 1813-ம் வருஷத்தில், ஸ்வாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ராணிக்கு ஒரு புருஷப் பிரஜை பிறந்தது. இக்குழந்தைக்குப் பிறந்த தினத்திலிருந்தே விசேஷ செல்வாக்குக் கிட்டியது. எங்கும் இந்த ஜனனமானது பரம குதூஹலத்துடன் வரவேற்கப்பட்டது. ஆகையினால் அவர் யாவராலும் "கர்ப்ப ஸ்ரீமான்" என்று கோஷிக்கப்பட்டார். இதனால் கர்னல் மன்ரோவிற்கும் பெருத்த சந்தோஷம் ஏற்பட்டதாம்! மஹாராஜாவுக்கு இயற்கையாகவே அதிசய புத்திகூர்மை இருந்து வந்தது. தமது பிதாவான ஸ்ரீ ராஜ ராஜ வர்மா கோயில் தம்புரானிடம், பின்பு திவானான ஆங்கில போதகாசிரியர் ஸ்ரீமான் சுப்பராவிடமும் இவருக்கு உயர்ந்த பயிற்சி கிடைத்துவிட்டது. ஆரம்பத்திலிருந்தே இவர் தமது திடமான ஊக்கத்தையும், கார்யம் செய்து முடிப்பதில் குன்றாத உத்ஸாஹத்தையும் நிரூபித்து வந்தார். தவிர இவர் தமது படிப்பின் மூலமும் மிக்க உயர்ந்துவிட்டவர். வெகு சீக்கிரத்திலேயே பெர்ஸியன், மராத்தி, ஹிந்துஸ்தானி, தெலுங்கு முதலிய பாஷைகளில் நிபுணராகி, அவைகளில் அநேகம் பத்யங்களையும் இயற்றினார். சில சம்ஸ்கிருதக் கிரந்தங்களையும் இவர் இயற்றினார். இவ்வகளுள் ஒன்று "பக்தி மஞ்சரி" என்பதாகும். சமீபத்தில் இப்புத்தகம் திருவாங்கூர் கவர்ன்மெண்டாரால் அச்சிடப்பட்டபோது, அதைப் பரிசோதிக்க உதவிய மஹாமஹோபாத்தியாய டி. கணபதி சாஸ்திரிகள், இக்கிரந்தத்தில் காணப்படும் நடை, சிலேஷைகள், பக்தி, பாவம் முதலிய யாவற்றையும் மிகவும் சிலாகித்து எழுதினார்.

இத்தகைய குணாதிசயங்கள் அமைந்த இவர் 1829-ல் தமது 16-வது வயதில் திருவாங்கூர் பட்டத்தை அலங்கரித்தார். ஆரம்பத்தில் இவருடைய பிதாவும், திவான் வெங்கடராயரும் ரெஸிடெண்டு கர்னல் மாரிஸனும் இவருக்கு உற்ற நண்பர்களாக வாய்ந்திருந்தனர். தவிரவும் தேசம் சுபிக்ஷமாகவிருந்து, சந்தோஷம் எங்கும் பரவியிருந்தது. மஹாராஜாவிற்குத் தமது போதகர் சுப்பராயரை திவானாக்க வேண்டுமெனும் எண்ணம் உண்டு. ஆனால் இதை கர்னல் மாரிஸன் அனுமதிக்க ஒப்பவில்லை. பின்பு கர்னல்மாரிஸன் திருவாங்கூரை விட்டு ஸ்வதேசம் திரும்பியபோது வெங்கடராயர் தமது திவான் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். (அவரை இந்திய கவர்ன்மெண்டார் மைசூர் கமிஷனராக நியமித்து "ராய் ராய ராய்" என்ற பிருதையும் கொடுத்தனர்). 1830-ல் சுப்பாராயர் திவானாக உயர்த்தப்பட்டார். கொல்லத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு அரண்மனை சமீபத்திற்கே ஹுஜூர் காரியாலயங்கள் மாற்றப்பட்டன. சுப்பாராயரும் அநேகம் நல்ல வழிகளைப் பின்பற்றி நாட்டிற்கு நலத்தைப் பெருக்கும் விதத்தை நாடலானார்.

மஹாராஜாவும் தினமும் சில மணி நேரங்கள் ராஜாங்க அலுவல்களைக் கவனிப்பதில் செலவழித்து வந்தார்; பிரதி வாரமும் சில தினங்களில் அவர் திவான், அப்பீல் கோர்ட்டு ஜட்ஜிகள், இதர முக்கிய உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுக்குப் பேட்டி அளித்து அவர்களிடமும் விஷயங்களை விசாரித்துத் தெரிந்து கொள்வது வழக்கம். ஆகவே இவர் பட்டத்தில் அமர்ந்த இரண்டு வருஷ காலத்திற்குள்ளாகவே சமஸ்தானத்தின் ஸ்திதி மிகவும் உயர்த்தப்பட்டது. 1829-ல் "கோர்ட்டு ஆப் டைரக்டர்ஸ்" சபையாரின் ஆலோசனைக்கிணங்கி, சென்னை கவர்ன்மெண்டார் திருவாங்கூரிலிருந்து "ஸப்ஸிடியரி" படைகளையும் ரெஸிடெண்ட் சிப்பந்திகளையும் திரும்பி எடுத்துவிடுவதாகவும் முன் வந்தனர்.

காரணமின்றி கவர்ன்மேண்டின் கெட்ட அபிப்பிராயம்

இடையில் திவான் சுப்பாராவின் நியமனத்தைப்பற்றி ரெஸிடெண்டு கர்னல் மாரிஸன் பிரதிகூலமாக எழுதி அனுப்பினதுபற்றி கவர்னராகப் பதவி வஹித்து வந்த மிஸ்டர் லுஷிங்டன் விஷயங்களைக் கவனிப்பதற்காக திருவாங்கூருக்கு நேரில் வந்து சேர்ந்தார். கொல்லத்தில் மஹாராஜா கவர்னர் பிரபுவைச் சந்தித்து, அவருடன் சல்லாபம் செய்தார். மஹாராஜா ஆங்கிலத்தில் பேசுவதை எதிர்பாராததால், அது கவர்னருக்கு ஆச்சரியகரமாகவிருந்தது. இதனால் கவர்னர் பிரபு ப்ரீதியடைந்தபோதிலும், ஆரம்பத்தில் கொண்டதுர் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவில்லை. இந்த விஷயம்தான் மஹாராஜாவின் பிற்கால வாழ்க்கை முழுவதிலும் இவரது மனதை மிகவும் புண்படுத்திக் கஷ்டப்படுத்தியதாகும். காரணமில்லாமலேயே ஆங்கில கவர்ன்மெண்டார் மஹாராஜாவிடம் இத்தகைய கெட்ட அபிப்பிராயத்தை மேற்கொண்டனர்.

குதிரைப்படைகளுக்கு நல்ல உடையளிப்பதற்கு மஹாராஜா ஏற்பாடுகள் செய்தார். திருவாங்கூர் சேனைக்கு "நாயர் ப்ரிகெட்" என்ற பெயரை மஹாராஜா அளித்தார்.

சாதாரண சிவில், கிரிமினல் வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு இவர் முனிசீப் கோர்ட்டுகளை ஏற்படுத்தினார். 1833–ல் தலைநகரில் இருந்து ஹுஜூர் கோர்ட்டை எடுத்துவிட்டு, ஒரு ஜில்லா கோர்ட்டை அங்கு ஸ்தாபித்தார்.

ராஜ்யத்தில் அமுலில் இருந்துவரும் ரெகுலேஷன்கள் முதலிய சட்டங்களைக் கோர்வையாகச் சேர்த்து வெளியிடுவதற்காக மஹாராஜா, மலையாள தாசீல்தார் ஸ்ரீ கந்தன் மீனனை நியமித்தார். பிரிட்டிஷ் சட்டங்கள்போல் இதையும் செய்து முடிக்குமாறு மஹாராஜா உத்திரவிட்டார். இந்த உத்தியோகஸ்தருக்கு எல்லா அநுகூலங்களும் செய்விக்கப்பட்டன.

மகாராஜாவின் பல நற்செய்கைகள்

ராம [illegible] ந்ததென்றால் கந்தன் மீனன் தயா[illegible]த ரெகுலேஷன்கள் குவியலானது சட்டமாக்கப்பட்டது. இதில் மொத்தம் எட்டு ரெகுலேஷன்கள் அடங்கியிருந்தன. இப்புத்தகம் கோட்டயம் மிஷன் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது. 1837-ல் ஸ்ரீ மீனனுக்குத் தோட்டங்களைப் பற்றிய ரிபோர்டு தயாரிக்கும் வேலை கொடுக்கப்பட்டது. திவானும், கொச்சு சங்கரப்

(29-ம் பக்கம் பார்க்க)

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா7. ஜாதகக் குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர், N. சுப்பிரமணியம்,
நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R சென்னை

ஜோதிர் மண்டலம்

ஈஸ்வர வருஷம்—சித்திரை மாதம்

(ஸ்ரீமான் பி. ஸ்ரீநிவாஸவரதன் எழுதியது.)

இப்பக்கத்திலுள்ள நக்ஷத்திர மண்டலம், இம்மாதம் இராக்காலத்தில் சென்னையில் நமக்குத் தென்படும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் காட்டுகிறது. படத்திலுள்ளபடியே முதல் தேதியன்று (13-4-37) இரவு 10-31-மணிக்கும், 15-ம் தேதியன்று (27-4-37) இரவு 9-36-மணிக்கும், 31-ம் தேதியன்று (13-5-37) இரவு 8-34-மணிக்கும் இக்கூட்டங்களை நாம் காணலாம். சென்னை தவிர மற்ற இடங்களுக்கும் இதை உபயோகப்படுத்தலாம். சென்னைக்கு வடக்கே இருக்கும் ஊர்களுக்கு இப்படத்தை உபயோகப்படுத்த வேண்டுமானால், வடக்கே அடிவானத்தருகே சில நக்ஷத்திரங்கள் அதிகமாகவும், தெற்கடிவானில் சில நக்ஷத்திரங்கள் மறைந்தும் இருக்கும். நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரவும், முன்னிரவைவிட நான்கு நிமிடங்கள் சீக்கிரமாகவே உதயமாகின்றன. ஆதலால் இன்று இப்படத்திலுள்ளபடி நக்ஷத்திரங்கள் இரவு 10-31-மணிக்குத் தென்பட்டால் நாளைக்கு 10-27-க்கு அப்படியே தெரியும். இம்மாதிரியே நாம் எந்தத் தேதிக்குப் படம் எத்தனை மணிக்கு உபயோகப்படும் என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

படத்தை உபயோகிக்க நாம் எத்திசையை நோக்கி நிற்கிறோமோ, அத்திசை அடி பாகமாக வரும்படிப் படத்தைத் திருப்பி வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்கு எதிரில் தெரியும் முக்கிய நக்ஷத்திரங்களைப் படத்தில் அடிக்கோடு முதல் நடுவரையில் காணலாம். படத்தின் நடுவே மத்திய ஆகாயம். நமக்கு வல இடப்புறம் இருக்கும் கூட்டங்களை முறையே வல இடப்புறங்களில் படத்தில் காணலாம்.

இம்மாதம், குறிப்பிட்டுள்ள நேரங்களில் ஆகாய கங்கையின் (பால்வழி) பிரவாகம், வடமேற்கு முதல் தென்கிழக்கடிவானம் வரையில் தெற்கு அடி வானத்தைச் சேர்ந்தாற் போலவே பாய்கிறது. வடக்கிலிருந்து தெற்கே வரவர அதன் அகலம் குறைகிறது. தென் சிலுக் கூட்டத்தைக்கடந்து கிழக்கே போக ஆரம்பித்தவுடன் அதுவும் அகலமாகவும் சிறிது பிரகாசமாகவும் காணப்படுகிறது. அது முறையே மிதுனம், மானஸரஸ், ம்ருகவியாதா, ஆர்கோ நேவிஸ், தென்சிலு, சென்டாரஸ், விருச்சிகம் முதலிய கூட்டங்களின் வழியே ஊடுருவிச் செல்வதைக் காணலாம். விருச்சிகத்தினிடையில் மிகவும் பிரகாசமிருக்கும். ஆகாயக் கங்கை, இனி உதயமாகப் போகும் தனுசை அடைந்தவுடன் அதிக ஒளியுடன் தோன்றும்.

நக்ஷத்திரக் கூட்டங்கள்

இராசிக் கூட்டங்களில், மிதுனம், கடகம் சிம்மம், கன்னி. துலாம், விருச்சிகம் முதலிய கூட்டங்கள் வடமேற்கு முதல் தென்கிழக்கடிவானம் வரையில் ஆகாயத்தில் முறையே காணப்படுகின்றன. உச்சிக்கு மேற்கேயும் கிழக்கேயும் சிம்மமும், கன்னியும் அழகுடன் அமைந்திருக்கின்றன. இப்பொழுது உதயமாகும் விருச்சிகம் ஒரு தேளின் உருவை ஆகாயத்தில் அழகுடன் சித்தரித்துக் காட்டுகிறது.

வடவானத்தில் துருவ மண்டலமும், ஸப்தரிஷி மண்டலமும் அதிவிமரிசையுடன் விளங்குகின்றன. ஸப்தரிஷிகள் வடமேற்கே வீற்றிருக்கின்றனர். துருவமண்டலமோ துருவனைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. இவர்களிடையே அசுரன் வீற்றிருக்கிறான். ஹெர்குலீஸ், பூட்ஸ் கூட்டங்கள் வடகிழக்கே விளங்குகின்றன. ஆரிகே வடமேற்கே அஸ்தமிக்கிறது. பாம்பாட்டியும், பாம்பும் கிழக்கே உதயமாகின்றன.

தென் வானில் முக்கிய நக்ஷத்திரம் 'ஸிரியஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ம்ருகவியாதாவே. இது இப்பொழுது தென்மேற்கே பிரகாசிக்கிறது. இது ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களனைத்திலும் மிகவும் உயர்ந்த ஒளி வீசுவது. ஹைட்ரா எனும் ஒரு நீண்ட கூட்டம் கடகக் கூட்டத்தின் தென்பாகமுதல், கன்னியின் தென்பாகம் வரையில் வியாபித்திருக்கிறது. இதிலிருக்கும் முக்கிய நக்ஷத்திரமாகிய 'ஆல்—பார்டு' எனும் நக்ஷத்திரத்தைக் கவனிக்கலாம். இது ஒரு 'மாறும்' நக்ஷத்திரம் இதன் ஒளி ஒரு முறைப்படி மாறிக் கொண்டேயிருக்கும். நேர் தெற்கே ஒரு கூட்டல் குறி மாதிரி (+) தென் சிலுவைக் கூட்டம் அழகுடன் பிரகாசிக்கிறது. இதை விஸ்வாமித்ரக் கூட்டமென்றும் சொல்லுவர். இதன் முக்கிய நக்ஷத்திரத்திலிருந்து நமக்கு ஒளி க்ரணங்கள் (வெளிச்சம்) வந்து சேர சுமார் 65 வருடங்கள் ஆகின்றன. பழைய காலத்தில் ஆகாயத்தைக் கண்டு இரவில் மணி சொல்ல, இக்கூட்டம் மிகவும் உபயோகமாயிருந்ததாம். இக்கூட்டத்திற்கிரண்டு புறமும், தென் வானத்தின் பெரிய கூட்டங்களாகிய ஆர்கோநேவிஸ் கூட்டமும், ஸென்டாரஸ் கூட்டமும் அழகாகப் பிரகாசிக்கின்றன. மொத்தத்தில் இம்மாதத்திய இராக்காக்ஷி மிகவும் கவனிக்கத் தகுந்ததே. 20 முதல்தர நக்ஷத்திரங்களில், இம்மாதம் முன்னிரவில் 12 முதல்தர நக்ஷத்திரங்கள் வெகு நேர்த்தியாக அழகுடன் ஒளி வீசுகின்றன.



சித்திரை௴ கிரஹங்களின் நிலை

புதன்:—இம்மாதம் 15-ம் தேதிவரை (27-4-37) புதன் மேஷக் கூட்டத்தினிடையேயிருந்து, பிறகு ரிஷபத்திற்குச் செல்கிறது. ஆனால் 18-ம் தேதி இது வக்ரிக்க ஆரம்பிக்கிறது. 23-ம் தேதியன்று (5-5-37) மறுபடியும் மேஷத்திற்கே பிரவேசித்துவிடுகிறது. இக்கிரஹம் மாதக்கடைசியில் 29-ம் தேதியன்று சூரியனுடனேயே உதயமாகி அஸ்தமிக்கிறது. மாத முதலில் இதை மேற்கே காணமுடியும்.

சுக்கிரன்:—இம்மாதம் 27-ம் தேதிவரை (9-5-37) சுக்கிரன் மீனக்கூட்டத்தினிடையே வக்ரத்திலிருக்கிறது. 27-ம் தேதியன்று சுக்கிரன் வக்கிரத்தியாகம் அடைகிறது. இது விடியற்காலையில் மாத நடுவில் 4-40-மணிக்கும், மாதக்கடைசியில் 3-45-மணிக்கும் உ

மாகி, சூரியன் உதயமாவதற்கு முன் மிகப்பிரகாசமாக விளங்கும்.

குஜன்:—இம்மாதமும் விருச்சிகத்திலேயேயிருக்கிறது. இம்மாதம் 2-ம் தேதி வக்ரிக்க ஆரம்பிக்கிறது. இது மாத நடுவில் இரவு 8-15 மணிக்கு உதயமாகிறது. இதன் சிவந்த நிறத்தால் விருச்சிகத்தின் தலையின் சமீபத்தில் இதைக் காணலாம்.

குரு:—தனுசுக் கூட்டத்தின் எல்லையைத் தாண்டி மகரத்திற்குப் போகும்போல் குரு ஆகாயத்தில் விளங்குகிறது. இது சுமார் இரவு 12 மணிக்கு உதயமாகிறது.

சனி:—சனி மீனக் கூட்டத்தில் சிறிதளவே சென்றிருக்கின்றது.

உரானஸும், நெப்டியூனும் முறையே மேஷத்திலும், சிம்மத்திலும் இருக்கின்றன.

புதக்ரஸ்த-சூரிய கிர்ஹணம்

இம்மாதம் புதன் சூரியனுக்கும் நமக்கும் (பூமிக்கும்) நேரிடையே வந்து சூரியனின் பிம்பத்தின்மேல் ஊர்ந்து செல்வதுபோல் தோன்றும். இம்மாதிரி புதக்ரஸ்த சூரிய கிரஹணங்கள் சுமார் ஏழு வருடங்களுக்கொரு முறை சம்பவிக்கின்றன. நச்சுக்குழாய் வழியாலன்றிப் புதனைச் சூரியனின் பிம்பத்தின்மேல் ஊர்ந்து செல்வதைக் காண முடியாது. அப்பொழுது அது ஒரு சிறு கருப்புப் புள்ளி போல் தோன்றும்.

இக்கிரஹணத்தின் விவரங்களாவன:—

சென்னைக்கு:—

சித்திரை மீ-29உ-செவ்வாய்க்கிழமை (11-5-37).

புதன் சூரிய பிம்பத்தின் மேல் பிரவேசிப்பது-பகல் 2-மணி-14 நிமிஷம்

மத்திய காலம்- 2—30

புதன் சூர்ய பிம்பத்தை விட்டு நீங்குவது 2—46

இக்கிரஹத்தினால் ஏற்படும் கிரஹணத்திலிருந்து இக் கிரஹத்தில் காற்றாவது, தண்ணீராவது இருக்க முடியாதென்றும், இது ஒரு 'அழிந்த' உலகமேயென்றும் வான சாஸ்திரிகள் கண்டுகொண்டுள்ளனர்.

சந்திரன் ஆகாயத்தில் உலவி வருகையில், கீழ்க்கண்ட தேதிகளில் கிரஹங்களினருகே அமைந்திருக்கும்:—

எப்ரல்மீ

22உ நெப்டியூனருகில்

28உ குஜனருகில்

மேமீ

2உ குருவினருகில்

7உ சனியருகில்

8உ சுக்கிரனருகில்

10உ உரானஸருகில்

10உ புதனருகில்

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள்பொருட்டு, இம் மாதத்திய இராசி சக்கரத்தைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

ஈஸ்வர வருஷம் - சித்திரைமீ-15-ம் தேதி-சூரிய உதயம்.

சுக்கிரன் சனி	சூரியன்	புதன் கேது	
	1உ—மேஷ—ரவி (7-52) 12உ—ரிஷப—புதன் 14உ—மீன—சுக்கிரன் (வக்ரீ) 25உ—மேஷ—புதன் (வக்ரீ)		
குரு			
	குஜன் ராகு		

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தேவங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.

Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

மூன்று பாகங்கள் விலை ரூ. 6.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

மார்புக் கோளாறுகள் ஜலதோஷம், கபம்

முதலியவற்றைக் குணப்படுத்துக

திடீரென குளிர், இருமல், அல்லது சுவாசாசயத்துக்குப் பல வீனமுண்டாக்கும் கூடம் இவை திடீரென ஏற்பட்டு நீங்கள் கஷ்டப்பட்டால் உடனே பெப்ஸ் உட்கொள்ளுங்கள்.

பெப்ஸ மாத்திரைகளில் ஒன்றை வயில் போட்டதும் அதனின்றும் கிளம்பும் கிருமி நாச ஆவி நேரே சுவாசாசயத்தினுள்ளும், மார்பிலும ஊடுருவிச் சென்று, கிருமிகளை யழிக்கிறது. பெபஸ மாத்திரைகள் எரிச்சலை யடக்கி சுவாசக் குழாய்களின் அடைப்பை அகற்றுகிறது மார்பு நோய், காசம் முதலியவற்றிற்கு பெபஸதான நிச்சயமான நிவாரணி.

பெப்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1 வீதம் கைக்கடக்கமான தீல் வைத்த புட்டிகளில் கிடைக்கும் ஏஜண்டுகள்:— மெஸாஸ் தாதா & கம்பெனி, பாரக்டவுன் மதராஸ்.

பெப்ஸ் கிருமிநாச, சுவாச நிவாரணி மாத்திரைகளை உட்கொள்க

பெப்ச் PEPS

உத்தரவாதமான

பொன், வெள்ளி நகைகளுக்கும்,

பல ஊர் பட்டு ஜவுளி தினுசுகளுக்கும்

ஸ்ரீ ஆண்டாள் ஜுவெல்லரிஸ் லிமிடெட்.

109, சைனு பஜார் ரோட், மதராஸ்.

பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யபபடும் விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சர்யப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார்செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம், நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமையுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரமமைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத்தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினால், ஒரே வினாடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரததுடன் அனுபபப்படும்.

விலை ரூ. 2. தபால் கூலி அணா 8.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.

மிஸ்டர் பாஸ்கர்

"பாச்சு"

பாத்திரங்கள்.

பாஸ்கரன்:— சீமையில் படித்துத் தேறிய இன்ஜினியர்.

பூமா:— அவன் மனைவி.

கிருஷ்ணஸ்வாமி அய்யர்:— பாஸ்கரனின் தகப்பனர்.

சுந்தரம்:— பாஸ்கரனின் ஆப்த நண்பன்.

மிஸ் மோஹினி:— ஓர் பிரபல ஸினிமா நடி.

ஸீன் 1.

பாஸ்கரன் வீடு முன்ஹால்- பூமா கையில் புத்தகத்துடன் ஒருஸோபாவில்உட்கார்ந்திருக்கிருள். பாஸ்கரன் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டே உள்ளே நுழைகிருன்.

பாஸ்:—என்ன பூமா? ஐந்து மணிக்கே தயாராகவிருக்கச் சொன்னேன், இன்னம் சும்மாயிருக்கிருய். அது என்ன புஸ்தகம்?

பூமா:—இதுவா? பகவத்கீதை. ராஜாஜியின்...

பாஸ்:—சட், நான்ஸென்ஸ் இந்த வயதில் கீதை என்ன வேண்டியிருக்கு? நல்ல நாவல்கள் எதாவது படிக்கக் கூடாதோ?

பூமா:—சும்மா ஏதாவது சொல்லாதீர்கள்.

பாஸ்:-எப்படியாவதுதொலே. பார்டிக்கு வருகிருயா என்ன?

பூமா:—நான்தான் நேற்றே இல்லை என்று சொல்லிவிட்டேனே, என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம். தாராளமாய் நீங்கள்.......

பாஸ்:—இதோ பார், பூமா. நீயே சொல். இதோடு எவ்வளவு தரம் ஏமாற்றிவிட்டாய்? ஏதாவது பொய்ச்சாக்குசொல்லிக் கொண்டேயிருக்கிருய். கேட்பவர்களுக்குப் பதில் சொல்ல என்னல் முடியவேயில்லை.

பூமா:—அன்னியர் மனைவியைப்பற்றி அவர்களுக்கென்ன அவ்வளவு கவலையாம்? இன்று அந்த டாக்டர் வீட்டுக்குத்தானே? பாவம்; அவர் சாதுபோலிருக்கு. அவர் மனைவி- அடேயப்பா! பலே தளுக்குக்காரி!

பாஸ்:—இல்லாவிட்டால் உன்னைப்போலிருப்பார்களா, என்ன? தப்பி தவறி யாராவது வந்துவிட்டால் எங்கேயாவது ஓடி ஒளிந்துகொண்டு விடுகிருயே!

பூமா:—யார், உங்களை, இந்த நாட்டுப் புறத்தைக் கட்டிக் கொள்ளச் சொன்னுர்களாம்? அப்பொழுது பல்லைக் காட்டிவிட்டு......

பாஸ்:—பூமா! உனக்கிருக்கிற அழகிற்கும், குணத்திற்கும், நான் சொல்லுகிறபடிமட்டும் கேட்டாயானல்...

பூமா:—வேண்டாம், வேண்டாம், தூரவேயிருங்கள், தயவுசெய்து அந்த சிகரெட் நாத்தம் பொறுக்கவே முடியவில்லை.

பாஸ்:—வீண் வம்பு வளர்க்காதே. பார்டிக்கு வரமுடியாத காரணம்தான் என்ன சொல்லேன்?

பூமா:—என்ன காரணம்? இன்று வெள்ளிக்கிழமை கோவிலுக்குப் போய்விட்டு வர வேண்டும். அப்பா, ஊரிலிருந்து வருவார்.......

பாஸ்:—இன்று வருகிருர்?

பூமா:—ஆமாம். உங்களுக்கேன் அந்தக் கவலை? உங்களையும் பிள்ளை என்று மதித்து லெட்டர் எழுதுகிருரே, அவர் வருகிற சமயம் நானுவது வீட்டிலிருக்க வேண்டாமா?

பாஸ்:—(சற்று கோபமாக) ரொம்ப சரி; நான் வருவதற்கு நேரமாகலாம். எனக்காக ஒருவரும் காத்திருக்க வேண்டாம்.

[என்று வெளியே சென்றுவிடுகிருன். பூமா சற்று நேரம் அவன் சென்ற வழியையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு மறுபடியும் கீதையை எடுத்துக்கொள்கிருள்.]

ஸீன் 2.

(ரீகல் ஸினிமா தியேட்டர்- ரிஸர்வ் செய்யப்பட்ட பாக்ஸில் பாஸ்கரனும், சுந்தரமுமிருக்கிருர்கள். அடுத்த பாக்ஸில் பிரபல ஸினிமா நடி மிஸ் மோஹினியிருக்கிருள். காட்சி ஆரம்பிக்கும் சமயம்.)

சுந்த:—(தற்செயலாக மோஹினியிருப்பதைப் பார்த்து.) ஹல்லோ மிஸ்! ஏது இன்று தனியாக வந்தீர்கள்?

மோஹினி:—யார் - மிஸ்டர் சுந்தரமா? (வெளியே எட்டிப் பார்க்கிருள்.) சுந்தரம் உடனே சென்று, கையைப் பிடித்தழைத்து வந்து பாஸ்கரனுக்கறிமுகப்படுத்துகிருன்.

இதற்குள் படமாரம்பமாகிவிடவே, அவள் தன்னிடத்திற்குப்போக எத்தனிக்கிருள். சுந்தரம் தங்கள் பாக்ஸிலேயே உட்காரச்சொல்லி வற்புறுத்தவே "ஆல் ரைட்" என்று இருவர் மத்தியில் உட்காருகிருள். கொஞ்ச நேரத்திலேயே தன் பேச்சு சாதுர்யத்தாலும் இனிமையாலும் பாஸ்கரனை பயக்கிவிடுகிருள்.

மோஹி:— (கைகெடியாரத்தை பார்த்துவிட்டு) ஓ! மை குட்நஸ்! மணி 9 ஆகிவிட்டதே! நான் சீக்கிரம்போகவேண்டும். காலை 6 மணிக்கு ஸ்டுடியோவிலிருக்கவேண்டுமே! மிஸ்டர் பாஸ்கர்! உங்களை மறுபடியும் எப்போது பார்க்க முடியும்? இதோ, என் கார்டு (விலாசமெழுதிய கார்டை கொடுக்கிருள்.)

பாஸ்:—(அதை வாங்கிப் பார்த்துக்கொண்டே) ஓ, என் ஆபீஸிற்கருகிலேயேதானிருக்கிறீர்கள்!

மோஹி:—அப்படியானல் நாளை சாயங்காலமே ஒரு சின்ன 'டீ' க்கு வந்து என்னைக் கௌரவிக்க முடியுமோ?

பாஸ்:—ஆஹா, அவஸ்யம் வருகிறேன், சரியாக ஐந்து மணிக்கே வருகிறேன்.

மோஹி:—ரொம்ப சந்தோஷம் நான் வரட்டுமா? என்ன மிஸ்டர் சுந்தரம்...?

சுந்த:—எஸ் எஸ். படத்தைக் கவனித்துக்கொண்டிருந்தேன்...

மோஹி:—அப்படியா? நாங்கள் அதை அவ்வளவு ரஸிக்கவில்லை...என்ன மிஸ்டர் பாஸ்கர்?

சுந்த:—கவனிக்கவில்லை என்று சொல்லுங்கள்.

(எல்லோரும் சிரிக்கிருர்கள். இருவரும் மோஹினியுடன் கூடவே சென்று வழி அனுப்புகிருர்கள்.)

ஸீன் 3.

சில தினங்கள் கழித்துப் பாஸ்கரன் வீடுமாடி அறையில் படுக்கையின்மேல் உட்கார்ந்துகொண்டு பூமா, "ஸ்திரீ தர்மம்" என்ற பத்திரிகையைப் படித்துக்கொண்டிருக்கிருள். கார் வரும் ஓசை கேட்டுக் கீழேயிறங்கிவருகிருள். படியின் நடுவில் பாஸ்கரனைச் சந்திக்கிருள்.)

பூமா:—ஏன் மேலே வருகிறீர்கள்? சாப்பிட வேண்டாமா?

பாஸ்:—வேண்டாம். சாப்பிடப் போகிறதில்லை.

[படுக்கை அறைக்குச் சென்று உடைகளைக் கழற்றி எறிந்துவிட்டுப் படுத்துக்கொண்டுவிடுகிருன். பூமா பக்கத்தில் உட்கார்ந்துகொள்ளுகிருள்.]

பூமா:—நான் என்ன குற்றம் செய்தேன்? என்மேல் இவ்வளவு கோபம்?

பாஸ்:—வீணுக என்னைத் தொந்தரவு செய்யாதே! தூக்கம் வருகிறது. நீயும் படுத்துக்கொள்.

பூமா:—எனக்குத் தூக்கம் வேறு வருமா?

பாஸ்:—வராவிட்டால் இந்தா, "ஸ்திரீ தர்மம்" வாசித்துக்கொண்டிரு. (பத்திரிகையை எடுத்தெறிகிருன்.)

பூமா:—இவ்வளவுதானே! இனிமேல் அவைகளைத் தொடக்கூட மாட்டேன்.

பாஸ்:—எனக்காகவா? உனக்கிஷ்டமானவைகளை நான் தடுப்பானேன்? இனி நான் உனக்கு ஒரு சிரமமும் கொடுக்கப்போவதில்லை.

பூமா:—நான் ஒன்று கேட்கிறேன். கோபிக்காதீர்கள்?

பாஸ்:—என்ன சொல்லு?

பூமா:—உங்களுக்கு என்ன வேதனை? ஏதோ என்னிடம் மறைக்கிறீர்கள். கொஞ்ச



வேலைக்கும் படிப்புக்கும் வேண்டிய ஊக்கத்தைப் பெருக்குகிறது.

ஆரோக்கியமும், நரம்புகளில் வலிவுமில்லாவிடில் வேலை செய்வதில் வெறுப்பும படிப்பில் அசிரத்தையு மேற்படும். மாணவர்களுக்கும் மூளை வேலையில் ஈடுபட்டுள்ள யாவருக்கும் "ஜீவாம்ருதம்" மூளைக்கும் நரம்புக்கும் வலிவூட்டும் அற்புத டானிக்காகும். உற்சாகமுடன் படிக்கவும, ஊக்கமுடன் வேலை செய்யவும் ஜீவாம்ருதம் உதவுகிறது இன்றே உபயோகிக்க ஆரம்பித்து உண்மையையுணருங்கள்.

ஜீவாம்ருதம்

மூளைக்கும் நரம்புகளுக்கும்

மேலான டானிக்

ஆயுர்வேதாஸ்ரமம்

151 கோவிந்தப்ப நாய்க்கன் வீதி

தபால்பெட்டி 287, மதராஸ்.

மெஸர்ஸ்: அமர்சந்த் சோபாசந்த்

கெமிஸ்ட்ஸ், மதராஸ்

மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட்ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,

செக்ரிடரி

நாளாக என்னோடு சரியாகப் பேசுவதுகூட இல்லை.

பாஸ்:—வீணுகப் பேசி என்ன பயன்? நம் இருவர் மனப் பான்மையும், இனி ஒருபோதும் ஒத்துக்கொள்ளப் போவதில்லை.

பூமா:—அப்படியா?... (விளக்கை நிறுத்திவிட்டு, அழுதுகொண்டே வெளியில் சென்றுவிடுகிறாள்.)

ஸீன் 4

(பாஸ்கரன், மிஸ் மோஹினியைச் சந்தித்துச் சுமார் 1 மாதம் கழித்து ஒரு நாள் மாலை-மோஹினியின் மாளிகையில் முன் அறை. பாஸ்கரனும் மோஹினியும் குதூகலமாய் சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர்.)

மோஹினி:—டைரக்டருக்கு என்மேல் ரொம்ப கோபம். அடுத்த படத்திற்கு என்னை எடுக்கமாட்டார்கள்.

பாஸ்:—ரொம்ப நல்லதாயிற்று. நானும் உனக்கு எவ்வளவோ தரம் சொல்லிவிட்டேன், அதைவிட்டு ஒழி என்று நீ ஸினிமாவில் நடிப்பதுஎனக்குக் கொஞ்சமும் சம்மதமில்லை.

மோஹி:—எனக்கு மட்டும் சம்மதமா? ஏதோ வேறு வழியில்லாததால்...

பாஸ்:—பார், மறுபடியும் பழய கதையையே ஆரம்பிக்கிறாய் (அடுத்த அறையிலிருந்து இறைச்சல் கேட்கிறது.)

ஒரு குரல்:—ஏன் ஐயா வீணுகக் கூச்சல் போடறே? எல்லாம் கொடுப்பாங்க, சும்மாயிரு.

மறுகுரல்:—என்ன கொடுப்பாங்க? மாசம் நாலாச்சு. ரூபா அஞ்சா, பத்தா;—ஐந்நூறு! எப்படிக் கொடுக்கப் போறுங்க? போய் சொல்லு. இன்று பணம் கொடுக்காவிட்டால், வீடு காலி செய்யணும்.

பாஸ்:—அது என்ன சப்தம் அங்கே?

மோஹி:—ஒன்றுமில்லை—என் கஷ்ட காலம் (அழ ஆரம்பிக்கிறாள்.)

பாஸ்:—அசடே. (கண்ணைத் துடைக்கிறான்.) என்ன? விஷயத்தைச் சொல்லு.

மோஹி:—எனக்குச் சொல்லுவதற்கே கூச்சமாயிருக்கு. நான்கு மாத வாடகை பாக்கி—அந்தச் செட்டி ரகளை செய்கிறான். நான் போய் பிறகு வரச் சொல்லுகிறேன்.

(எழுந்திருக்கிறாள்.)

பாஸ்:—வேண்டாம். வேண்டாம். நான் அவனை அனுப்பிவிட்டு வருகிறேன். இதுதானா ப்ரமாதம்?

(மற்றொரு நாள்.)

(மேன்மாடியில் இருவரும் உல்லாசமாகக் காலம் கழிக்கிறார்கள். முன்னால் ஏற்பாடு செய்தபடியே ஜவுளிக் கடை முதலி புடவை மூட்டையோடு வருகிறான். மோஹினி ஒவ்வொரு புடவையாகப் பிரித்துப் பார்க்கிறாள்.)

மோஹி:—இந்த நான்கும் என்ன விலையாகிறது?

முதலி:—சொற்பம்தான்—750 ரூபாயாகிறது. ஒரு அஞ்சு தள்ளிக் கொடுக்கிறேன்.

மோஹி:—அடேயப்பா, கையில் அதில் பாதிகூடயில்லை. வீணுக ஆசைப்படுவதில் என்ன? இப்பொழுது சௌகர்யமில்லை; இன்னொரு சமயம் பார்க்கலாம்.

முதலி:—(கோபமாக) கையில் ரொக்கமில்லாமல் அதிகாரத்தைப் பாரு. நான் என்ன உங்களைப்போல் வேலையில்லாதவனு?

பாஸ்:—டேய்! அதிகமாய் பேசாதே. ஜாக்கிரதை! (மோஹினியைப் பார்த்து, டியர்! உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்)

(மோஹினி சந்தோஷமாக 4, 5 புடவைகளை எடுத்து வைத்துக்கொள்கிறாள்.)

முதலி:—எஜமான்! கோபிக்காதீங்க. பதட்டமாய் பேசிவிட்டேன். அந்த ஐந்து புடவைகளும் 800 ரூபாய் ஆகுதுங்க.

பாஸ்:—சரி, இந்தா, இனிமேல் ஜாக்கிரதையாக இருந்துகொள்.

(நோட்டுக்களை எடுத்துக் கொடுக்கிறான்.)

ஸீன் 5:

(ஒரு மாதத்திற்குப் பிறகு பாஸ்கரன் வீடு-தகப்பனர் கிருஷ்ணஸ்வாமி அய்யர் நோயுண்டு படுக்கையிலிருக்கிறார். அருகில் பூமா வாடிய முகத்துடன் நிற்கிறாள்.)

கிருஷ்:—அம்மா, பூமா, நீ எவ்வளவோ மறைத்தபோதிலும், பாவி அவன் நடத்தை எல்லாம் தெரிந்துகொண்டுவிட்டேன். வீணுக உன் மனதைப் புண்ணுக்க எனக்கு இஷ்டமில்லை. முதலில் சொத்துக்களை உன்னிடமே ஒப்படைக்க நினைத்தேன். ஆனால் நான் இறந்த மறுநாளே உன்னை வஞ்சித்து மிரட்டி எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு உன்னை அனுதையாக விரட்டிவிடுவான். அவன் என்னவோ சுபாவமாக அவ்வளவு கொடியவனல்ல. ஏதோ சகவாஸ தோஷத்தாலும் நம் துர்அதிர்ஷ்டத்தாலும் இப்படி எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. சீக்கிரம் திரும்பிவிடுவான் என்றே நினைக்கிறேன். எந்தக்ஷணம் மனம் திரும்பி உன்னை விரும்புகிறானே அன்றே அவன் என் சொத்துக்களை அடைவான். அம்மா! என்னால் அதிகம் பேசமுடியவில்லை.

(பூமா துக்கமிகுதியால் தேம்பித்தேம்பி அழுகிறாள்.)

குழந்தாய்! அழாதே. எல்லாம் அவன் அருள்!

ஸீன் 6:

[கிருஷ்ணஸ்வாமி அய்யர் இறந்து 6 மாதங்களாகிவிட்டன. பூமா துக்க மிகுதியால் தேகம் மெலிந்து நோய்வாய்ப்பட்டு, சித்தஸ்வாதீனமின்றிப் பயித்திய ஆஸ்பத்திரியில் சொஸ்தமடைந்து வருகிறாள். பாஸ்கரன் கையிலுள்ள பணம் குறையக்குறைய நாளடைவில் மோஹினியால் வெறுக்கப்படுகிறான்.

மோஹினியின் மாளிகை முன்ஹாலில் மோஹினியும் சுந்தரமும் ஸோபாவிலமர்ந்து ரேடியோ சங்கீதம் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். வெளியே இறைச்சல் கேட்கிறது. சேவகனைத் திமிறிக்கொண்டு கந்தல் துணியுடுத்திய பாஸ்கரன் உள் நுழைகிறான்]

மோஹி:—டேய்! யாரது? ஏன் உள்ளே விட்டாய்?

பாஸ்:—அடி பாதகி! யாரென்றுமா தெரியவில்லை?

மோஹி:— (சுந்தரத்தைக் கட்டிக்கொண்டு) ஐயோ! ஏதோ பயித்தியம்போலிருக்கே!

சுந்த:—(சேவகனைப் பார்த்து) மடையன்! தெருவில் போகிற பயித்தியங்களை எல்லாம் உள்ளேவிடவா உன்னைக் காவல் வைத்திருக்கு? கொண்டுபோ, வெளியில் இவனை!

பாஸ்:—ஆ! சுந்தரம்! என் காதை நம்ப முடியவில்லையே! ஈசா, என்ன கொடுமை!

(மோஹினி சட்டென்று டெலிபோனை எடுத்துப் பேசுகிறாள். "ஹல்லோ! உடனே வரவும். அர்ஜன்ட். எஸ், எஸ். மோஹன விலாஸ்.")

(இரண்டு, மூன்று சேவகர்கள் பாஸ்கரனைப் பிடித்து வெளியே கொண்டு போகிறார்கள். இதற்குள் டெலிபோன் செய்தி கிடைத்துப் பயித்திய ஆஸ்பத்திரி காரும் வருகிறது.

எல்லோருமாக பாஸ்கரனைப் பலவந்தமாகக் காரில் தூக்கிப் போட்டுக்கொண்டு போகின்றனர்.)

ஸீன் 7

[பயித்திய ஆஸ்பத்திரி—பூமா நன்றாகச் சொஸ்தமடைந்துவிட்டபடியால், வெளியில் கொண்டுவிடப்படுகிறாள். அதே சமயம் ஆஸ்பத்திரி காரும் வந்து சேருகிறது. பாஸ்கரன் கீழேயிறக்கப்படுகிறான்.]

பாஸ்:—(திடுக்கிட்டு) பூமா!

பூமா:—நாதா!

(ஓடி அவன் கால்களில் விழுகிறாள்...ஒரு நிமிஷம் ஒருவரை ஒருவர் பார்த்து விழிக்கின்றனர்.)

பூமா:—ஐயோ! இது என்ன?

பாஸ்:—(தலையைக் குனிந்துகொண்டு) எல்லாம் அவள் சூது! (ஆஸ்பத்திரி சிப்பந்திகள் பாஸ்கரனை அணுகுகின்றனர்.)

பூமா:—(அவர்களைப் பார்த்து) இவரை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங்கள் கஷ்டப்படவேண்டாம். இவர் என் கணவர்.

(பாஸ்கரனைப் பார்த்து) வாருங்கள்; நம் கிரஹத்திற்குப் போகலாம்.

(இருவரும் செல்லுகின்றனர் வழியில் வீடுகளிலிருந்து ரேடியோ மூலம் ஹிந்துஸ்தானி சங்கீதம் கேட்கிறது.

ஜகத் மேம் ப்ரேம் ஹி ப்ரேம் பாராஹை விணுப்ரேம் யஹாம் குச் ந தராஹை...

जगतमें प्रेम हि प्रेम भरा है ।

विना प्रेम यहां कूछ न धरा है ॥

நரைமயிரை

அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனும்.

சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி (மெடிகல் டிபார்ட்மெண்டு S. 15) பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—

ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனுபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—

தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—

பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்.

இனாம்

378 டிசைன் 64 பக்க நகை கேட்லாக்.

பி. கோபால்சுவாமி நாயுடு & சன்ஸ்

பறங்கிமலை P. O. (சென்னை)

ஆராய்ச்சி பூர்வமான

நவீன மருந்துகள்

மேத்தாஸ் ஜுர மிக்சர்—8 அணா. ஆயிரக்கணக்கானவர்கள் நற்சாட்சி தந்திருக்கின்றனர்; பல்லாயிரக் கணக்கானவர்கள் ஆரோக்கிய ஐச்வர்யத்தைப் பெற்று வாழ்கின்றனர்.

கே. எஸ். மேத்தா & கம்பெனி,

பிரபல மருந்து வியாபாரிகள்,

234, சைனு பஜார், மதராஸ்.

சென்னை மாதர் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமதி அருண்டேல் ஸ்திரீகள் விஷயமாக ஒரு பிரசங்கம் செய்தபோது எடுத்த படம்

இந்திய வர்த்தமானம்

—— :[o]: ——

காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர் கைதியானார்

அரசியல் எதிர்ப்பு தினத்தையொட்டிக் காங்கிரஸ் காரியக் கமிட்டியங்கத்தினரும் அகில இந்திய அபேதவாதக் கட்சிப் பொதுக்காரியதரிசியுமான ஸ்ரீமான் ஜெயப்பிரகாச நாராயன் சென்ற 1-ந்தேதி பாட்னவில் போலீஸ் உத்தரவை மீறி ஊர்வலமாகச் செல்ல முயற்சித்ததற்காகக் கைது செய்யப்பட்டார். அவருடன் மற்றும் 15 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

* * * *

வைத்திய ஸர்விஸ் முறையில் மாறுதல்

இந்தியா சட்ட சபைக் கூட்டம் சென்ற வார இறுதியில் முடிவடைந்தது. வைத்திய ஸர்விஸ் முறையில் மாறுதல் செய்வதுபற்றிய விஷயம் ஒரு அவசரத் தீர்மானம்மூலம் விவாதத்திற்கு வந்தபோது பல அங்கத்தினர்கள் புதிய திட்டத்தைப் பலமாகக் கண்டித்துப் பேசினார்கள். இது சகிக்கக் கூடாததென்றும், வைத்திய ஸர்விஸ் திறமையே அடியுடன் குறைந்துவிடுமென்றும், இந்திய மயமாக்குவது மாகாண சுயவாட்சி ஆகிய இரண்டும் ஒரே பேனா அடியில் அழிக்கப்பட்டு விட்டதாயும், திட்டம் ஆபாசமான ஜாதித்துவேஷத்தைக் காட்டக்கூடியதென்றும், வெறும் புரட்டென்றும், பிரிட்டிஷாருக்கு ஏற்றதல்லவென்றும், பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு பிரிட்டிஷ் டாக்டர்கள் தான் வேண்டுமென்று சொல்லுவார்களாயின், இந்தியர் அதே கொள்கையைப் பின்பற்றிப் பிரிட்டிஷ் சாமான் எதையும் வாங்கக்கூடாதென்றும் அங்கத்தினர்கள் கூறினார்கள். முடிவில் மாறுதலைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேறியது. தெரிந்தெடுக்கப்பட்ட இந்தியர் அனைவரும் மாறுதலை எதிர்த்து ஓட்டுக் கொடுத்தனர்.

* * * *

குவெட்டா ஆயுதக்கிடங்கில் தீ விபத்து

குவெட்டா ஆயுதக் கிடங்கில் சென்ற 30-ந் தேதி மாலை பெரும் தீ விபத்து ஏற்பட்டுச் சர்க்காருக்குப் பெரு நஷ்டமேற்பட்டது. மருந்துக் கிடங்காகவிருந்த பாரக்ஸுக்கும் மிகுந்த சேதமேற்பட்டது.

* * * *

இந்தியா சட்ட சபையில் தேசீயக் கொடிப் போர்

அரசியல் எதிர்ப்பு தினத்தன்று டில்லியில் தேசியக் கொடிபோலீஸாரால் மிதிக்கப்பட்டதும் ஸ்ரீமதி சத்தியவதி தேவி கைது செய்யப்படத் தயாராயிருந்தும் அவரைப் போலீஸார் தொட்டுப் பலாத்காரமாக நிறுத்தியதும் இந்தியா சட்டசபையில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஒரு கொடிப் போர் நடத்தக் காரணமாகவிருந்தது. சென்ற 2-ந் தேதி இது என்றுமில்லாத ஒரு காட்சியாகவிருந்தது. காங்கிரஸ் தேசியக் கட்சியினர் பெஞ்சுகளில் சிறு காங்கிரஸ் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. ஸர் பிராங்கு நாய்ஸ் சபையில் ஏதோ சின்னங்கள் காணப்படுகின்றனவென்றும் அவை அகற்றப்படவேண்டுமென்றும் தலைவரிடம் தெரிவித்தார். ஸ்ரீமான் புலாபாய் தேசாய் அங்கத்தினர்கள் இஷ்டப்படும் ஆடை அல்லது சின்னத்தை அணியலாமெனக் கூறினார். இவையணியப்படுவதைத் தலைவர் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் சபையின் மேஜைகள்மீது இருக்கவேண்டாமெனச் சொன்னார். உடனே எல்லாக் காங்கிரஸ்காரர்களும் தங்கள் கைகளில் இக்கொடிகளை அணிந்துகொண்டனர்.

மேற்படி போலீஸ் செய்கையைக் கண்டித்து ஜனாப் அஸப் அலி கொண்டுவந்த அவசரப் பிரேரணை "மகாத்மா காந்திக்கு ஜே, தேசியக் கொடிக்கு ஜே!" என்ற பலத்த ஆரவாரத்துடன் 21 அதிக ஓட்டுக்களால் நிறைவேறிற்று. அங்கத்தினர் போலீஸ் நடவடிக்கையைப் பலமாகக் கண்டித்தனர்.

* * * *

ராஜப்பிரதிநிதி காந்திஜியைக் காணவேண்டும்.

'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகை நீண்டதோர் தலையங்கமொன்று எழுதுகையில், ராஜப்பிரதிநிதி தற்கால அரசியல் நிலைமையைப்பற்றிக் காந்திஜியுடனும் காங்கிரஸ் தலைவர்களுடனும் கலந்தாலோசிக்க வேண்டுமென்று திட்டமாக யோசனை கூறியிருக்கிறது. புதிய இந்தியா கவர்ன்மெண்டு சட்டம் உடனேயே நசிக்காமலிருக்க வேண்டுமாயின் அவ்விதம் இருதரப்பினரும் கலந்து கொள்ள வேண்டுவது மிக

(23-ம் பக்கம் பார்க்க)

ஸின்யர் முஸோலினி லிபியாவுக்கு விஜயம் செய்தபோது முஸ்லிம்களால், "இஸ்லாம் கத்தி" அவருக்கு அளிக்கப்பட்ட காட்சி. இக்கத்தி 2,000 பவுன் பெறுமானமுடையது.

பிரபஞ்ச வர்த்தமானம்

—:[0]:—

காந்திஜிக்கு நோபல் சமாதானப் பரிசு

1937-ம் வருஷத்திய நோபல் சமாதானப்பரிசுக்கான அபேட்சகர்களில் மகாத்மா காந்தி ஒருவர். அபேட்சகர்களைப் பிரேரிக்கும் உரிமை ஒருசிலருக்குத்தான் உண்டு. காந்திஜியின் பெயரைப் பிரேரிக்குமாறு அவர்களில் ஒருவரை, நார்வேயிலுள்ள இந்திய நண்பர்கள் சங்கத்தார் கேட்டுக்கொண்டனர். அவர் இக்கோரிக்கைக்கிணங்கி காந்திஜியின் பெயரைப் பிரேரித்திருக்கிறார்.

* * * *

"தலைவர்களை அழைத்துப் பேசுக"

மாகாண அரசாங்கங்கள் விஷயமாக ஏற்பட்டுள்ள சிக்கலான நிலையைத் தீர்க்க ஒரு வழி காணும் பொருட்டு காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்துப் பேசுமாறு தாம் கேட்டுக்கொள்வதாக மிஸ்டர் ஜார்ஜ லான்ஸ்பரி லின்லிதோ பிரபுவுக்கு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார்.

* * * *

இந்தியக் கம்பெனிக்கு ஆபத்து

அடிஸ் அபாபாவிலுள்ள மகமத் அலி கம்பெனியார் 18 தினங்களுக்குள் தங்கள் கடைகளை மூடிவிட்டு நாட்டிலிருந்து வெளியேற வேண்டுமென அவர்களுக்குச் சென்ற மாதம் 6-ந் தேதி இத்தாலிய சர்க்கார் நோட்டீஸ் கொடுத்தனர். அக்கம்பெனி தன் வர்த்தக நடவடிக்கைகளை முடித்துக்கொள்ள 18 நாட்கள் போதாதெனப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு முறையீடு அனுப்பியிருந்தனர். இக்கால வரையறை இப்பொழுது நீடிக்கப் பட்டிருப்பதாக இத்தாலிய சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அக்கம்பெனியாரை வெளியேற்றுவதற்கான காரணம் எதுவும் அந்தப் பதிலில் குறிப்பிடப் படவில்லை.

* * * *

ஜப்பானியப் பார்லிமேண்டு கலைக்கப்பட்டது

பிரதம மந்திரியின் சிபார்சின்பேரில் ஜப்பானியப் பார்லிமெண்டு கலைக்கப்பட்டுவிட்டதாக ஜப்பான் அரசர் ஒரு அறிக்கை பிறப்பித்திருக்கிறார். தற்போதுள்ள ராஜீயக் கட்சிகளுக்கு இடமில்லாது செய்து ராணுவத்தின் அங்கீகாரமுள்ள வேலைத் திட்டத்தைக் கொண்ட ஒரு தேசியக் கட்சி அதிகாரத்திற்கு வர வசதியளிப்பதே இப்பொழுது பார்லிமெண்டு கலைக்கப்பட்டதன் கருத்தெனச் சொல்லப்படுகிறது.

* * * *

தருமங்களுக்கு ஒரு கோடி டாலர்

இன்டியானா (அமெரிக்கா) மாகாணத்திலுள்ள மன்ஸியைச் சேர்ந்த மிஸ்டர் ஜார்ஜ் ஏ. பால் என்பவர் தமக்குச் சொந்தமான ஈக்விடிவான்ஸ்வரிங்கன் ரயில்வேயை விற்று அதில் தமக்குக் கிடைக்கக் கூடிய லாபத் தொகையான ஒரு கோடி டாலரை தருமங்களுக்குச் செலவிட உத்தேசித்திருக்கிறார்.

* * * *

ஹாங்காங் படைத்தளம்

ஹாங்காங் கடற்படைத் தளத்தை வலுப்படுத்தும் பொருட்டு 80 லக்ஷம் பவுன் செலவு செய்ய ஒரு திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. இதை, சிங்கப்பூர் தளத்தைப் போன்றதாக ஆக்குவதே நோக்கமென்று தெரிகிறது. விமானப் படைகளை எதிர்ப்பதற்கான தற்காப்பு சாதனங்களும் வலுப்படுத்தப்படுமாம். ஹாங்காங் ஒரு முக்கியமான ஆகாயப்படைத் தளமாகவும் விளங்குமாம்.

* * * *

50 நிமிஷத்தில் 7 மைல் நடை

ஒயிட் லிடி ரஸ்தாவில் ஸ்வீடனைச் சேர்ந்த மைகேல் பென் என்பவர் 50 நிமிஷம் 191/5 விநாடிநேரத்தில் ஏழு மைல் தூரம் நடந்து ஒரு புதிய ரிகார்டு ஏற்படுத்தினார்.

* * * *

சர்க்கரைத் தொழில் மகாநாடு

சர்வதேச சர்க்கரைத் தொழில் மகாநாடு இவ்வாரம் லண்டனில் மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்ட் தலைமையில் நடைபெற்றது. இதற்கு சர்க்கரை உற்பத்தி செய்யும் 22 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். சர்க்கரைத் தொழில் புள்ளி விவரங்களைச் சோதிக்கும் பொருட்டு ஒரு உபக் கமிட்டி நியமிக்கப்பட்டது. பல பிரதிநிதிகள் தத்தம் நாட்டிலுள்ள சர்க்கரைத் தொழில் நிலைமையையும் பொது நலத்தையும் முன்னிட்டு தங்களுடைய சர்க்கார் நியாயமான அளவு தியாகம் செய்யத் தயாராக விருப்பதாகக் கூறினார்கள்.

* * * *

(23-ம் பக்கம் பார்க்க)



மகாத்மா காந்தி

கையால் சித்திரம் எழுதுவதுபோல் டைப்ரைட்டரைக்கொண்டு இந்தப்படம் சென்னை ஸ்ரீமான் எஸ். கோவிந்தராஜுலுவால் வரையப்பட்டது.

சென்னை வித்யோதய மாணவிகள் சமீபத்தில் சென்னை ம்யூஸியம் தியேட்டரில் "ராதாகிருஷ்ண" நாட்டியம் நடித்துக் காட்டியபோது எடுத்த படம்.



யானைகளைப் பழக்கும் ஸிஸிலி ரொலேர்ஸிற்கும் நடிகரான வால்டர் ஷபிள் பாட்டமுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது. விவாகத்திற்குப் பிறகு மாதா கோவிலிலிருந்து அவர்கள் யானைமீது வந்த காட்சி.

யூகோஸ்லேவிய
ஞாபகச்[illegible]ில்



1934-ம் வருஷம் அக்டோப[illegible] 9-[illegible]
விய அரசர் அலெக்ஸான[illegible]ரு[illegible]
மந்திரியான லூயி பா[illegible]க்தே[illegible]
ஸில் சுட்டுக்கொல்லப்பட்[illegible]
களது ஞாபக[illegible]ம[illegible]
ஸேல்ஸ் பங்கு மார்க்[illegible]
கெதிரில் கட்டப்[illegible]
ருக்கும். சின்ன[illegible]

வியய மன்னர்
ின்னம்

9-ந் தேதி ஜுேோஸ்லே
ரும் அநிய நாட்டு
்தோவும் மார்ஸேல்
ப்பட்டனர். அவர்
மாக :மார்
மார்க்கெட்டுக்
ட்டப்பட்டி
சின்னம்.

சர்க்காரின் கிராமப்புனருத்தாரணத் திட்டம்—மோரதாபாத்தில் சர்க்கார் சுகாதார இன்ஸ்பெக்டர் கிராமவாஸிகளுக்கு மருந்து கொடுக்கிறுர்.

ஆகாய விமானங்களுக்கு பெட்ரோல் கொடுப்பதற்காக கிராய்டன் (லண்டன்) விமான நிலையத்தில் உபயோகிக்கப்படும் மோட்டார்.



சென்னையில் ஸ்ரீ சத்ரபதி சிவாஜி மஹாராஜா தினம் டாக்டர் நிம்கர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

அமெரிக்க ஜெனரல் மோட்டார்ஸ் வேலை நிறுத்தம் முடிவு பெற்று யூனியன் அதிகாரிகளும் முதலாளிகளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது எடுத்த படம்.

இந்திய வர்த்தமானம்

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமாகிறதென்றும், காங்கிரஸின் எதிர்கால நிலைமை நிச்சயமற்றிருக்கிறதென்றும், அரசியலை நிராகரிப்பதென்பது வெறும் அத்வானத்திலேயே கொண்டுபோய்விடுமென்றும், சட்ட ரீதியான விவரங்கள் இல்லாமல் போகுமென்றும், ஆனல் இப்பொழுது சத்தியாக இதுவரையில் காணப்படாத ஒரு நிலைமை எற்பட்டிருக்கிறதென்றும், மத்திய கவர்ன்மெண்டாரும் காங்கிரஸ் கக்ஷியினரும் கலந்து பேசுவது சாத்தியமென்பது மாத்திரமல்ல, முற்றிலும் அது சரியானதாகவும் அரசியல் முறைப்படி உசிதமானதாகவுமிருக்கிறதென்றும் எழுதுகிறது.

* * * *

லார்கானுவில் ஆலங்கட்டி மழை

கராச்சிக்கு அடுத்துள்ள லார்கானுவில் சென்ற 2-ந் தேதி மாலை ஒரு கடுமையான ஆலங்கட்டி மழை பெய்ததால் பல வீடுகள் நாசமாயின. சில மனிதர்களுக்கும் கால் நடைகளுக்கும் காயமேற்பட்டது. தெருக்களில் ஜலமும் ஆலங்கட்டியும் நிரம்பிவிட்டன.

* * * *

பிகானீரில் அடக்கு முறை

பிரபல வக்கீலும் தேச ஊழியருமான ஸ்ரீமான் சத்ய நாராயணராவ், பிகானீர் ஹரிஜன சேவா சங்கத்தலைவர் பாபு முக்த பிரசாத், பிரஜா மண்டலம் காரியதரிசி ஸ்ரீமான் லக்ஷ்மி தாஸ் முதலியோர் பிகானீர் சமஸ்தானத்திலிருந்து காலவரையறையின்றி வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். பிகானீர் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 19-வது பிரிவுப்படி பிகானீர்சமஸ்தான உள்நாட்டு இலாகா ஸ்பெஷல் உத்தியோகஸ்தர் அவர்கள் மீது ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

* * * *

ஹர்த்தால் தினக்கைதிகள் விடுதலை

பீஹார் பிரதம மந்திரியான கனம் யூனஸ் தம் வீட்டிற்கு முன்பு எப்ரல் முதல்தேதி ஆர்ப்பாட்டம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்ட ஸ்ரீமான் அம்பிகா காந்த ஸின்ஹாவையும் மற்றும் 12 காங்கிரஸ்காரர்களையும் விடுதலை செய்யும்படி உத்தரவிட்டிருக்கிறார். பீஹார் மாகாணத்தில் வெளியூர்களில் ஹர்த்தால் தினத்தன்று கைது செய்யப்பட்டவர்களைப்பற்றிய விவரங்களையும் அவர் கேட்டனுப்பியிருக்கிறார். அவர் ஒவ்வொரு வாது வழக்கையும் பரிசீலனை செய்து தகுந்தவர்களுக்கு மன்னிப்பு அளிப்பதற்காக இந்த தஸ்தாவேஜிகளைத்தமக்கு அனுப்பும்படி கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

* * * *

மத்தியகால மந்திரிசபை சட்ட சம்மதமானதா?

சென்னையில் மத்தியகால மந்திரி சபை அமைக்கப்பட்டது சட்டப்படி சரியானதாகுமாவென வினவ ஸ்ரீமான் வி. ராஜகோபாலாச்சாரியார் சென்னை அட்வகேட் சங்கத்துக்குக் கடிதமெழுதியிருந்தார். சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிகூடி இதைப்பற்றி விவாதித்தது. பிரஸ்தாப விஷயத்தைப்பற்றி எத்தகைய முடிவும்கூற அட்வகேட் சங்கத்துக்கு அதிகாரமில்லையெனக் கமிட்டி தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

* * * *

பிரபஞ்ச வர்த்தமானம்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸர் ஜேம்ஸ் கிரிரார் கூற்று

இந்திய நிலைமைப்பற்றி ஸர் ஜேம்ஸ் கிரிரார் (முன்பு ராஜப்பிரதிநிதி நிர்வாகசபை அங்கத்தினராக விருந்தவர்) "ஸண்டே டைம்ஸ்" என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் சாராம்சம் வருமாறு:-

காங்கிரஸில் திறமையும் பொதுஜன சேவை புரிய வேண்டுமென்ற உணர்ச்சியும் கொண்ட பலர் இருக்கின்றனர். காங்கிரஸைச் சேர்ந்த பலர் முன்பு கோரிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் இப்பொழுது அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த நாட்டில் உடனே தீர்க்க வேண்டிய பல சமூக, பொருளாதாரப் பிரச்னைகள் இருந்து வருகின்றன. இவ்வரசியலைக்கொண்டு அவர்கள் இப் பிரச்னைகளைத் தீர்க்க முன்வராதிருப்பாராயின் அவர்கள் ஒரு அரிய சந்தர்ப்பத்தை இழந்தவர்களாவார்கள். ஆனல் இந்தியாவில் தங்கள் கடமையையும் நலத்தையும் பற்றி வேறுவகையான அபிப்பிராயங்கொள்ளும் கட்சிகளும் தனிப்பட்டவர்களும் இல்லாமலில்லை.

* * * *

ரஷ்ய மந்திரி கைதியானர்

தபால், மின்சாரப் போக்குவரத்து இலாகா மந்திரியான மிஸ்டர் யாகோடா அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். அவர் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவில்லையாம். இவர் முன்னர் ரஷ்ய ரகசியப் போலீஸ் தலைவராக இருந்தவர். மாஸ்கோவிலிருந்து லண்டனுக்குக் கிடைத்துள்ள ஒரு செய்தியிலிருந்து மிஸ்டர் யாகோடா கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இன்னொரு பெரிய வழக்கு ஆரம்பமாகுமென்றும் தெரிகிறது.

* * * *

புஸ்தக விமர்சம்

ஸ்ரீ வேதாந்த தீபிகை

சென்னை ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த பிரசார சபையாரால் வெளியிடப்படும் இம்மாதப் பத்திரிகையின் மாசிமாத இதழ் வரப்பெற்ரேம். வழக்கமாகத் தொடர்ச்சியாகவரும் விஷயங்களைத் தவிர்த்து அடியார் திருவடிப்பொடி என்றதொரு வியாஸம் இதில் வெளிவந்திருக்கிறது. ஸ்ரீதேசிகன் புருஷார்த்த காஷ்ட தத்துவத்தை ஸ்ரீ பாதுகாஸகஸ்ரத்தின் மங்கள ஸ்லோகத்தின் மூலம் காட்டியிருப்பதை இது விவரிக்கிறது. ச்ருதி ஸ்ம்ருதிகள் முற்றும் ப்ரமாணமே என்ற விஷயமாகவும் ஒரு வியாஸம் வெளிவந்திருக்கிறது.

* * * *

மனேரஞ்சனி

சென்னை, எஸ்பிளனேட், எம். எஸ். ராமுலு கம்பெனியாரால் வெளியிடப்படும் இம்மாத நாவல் பத்திரிகையின் மார்ச்சு இதழ் வரப்பெற்ரேம். "ஸம்ஸார சன்னியாசி," என்ற கதையின் மற்ருெரு பாகம் இதில் வெளிவந்திருக்கிறது. கதா நாயகனை மகாதேவன் நாசி லோலனுகத் திரிந்த விஷயங்களும் ஜமீனே சீர்கேடான நிலைமைக்கு வந்துவிட்டதையும் இப்பாகம் கூறுகிறது.

* * * *

ஆனந்தபோதினி பஞ்சாங்கம்

ஸ்ரீமான் வி. ஜி. ராஜனின் ஈஸ்வர வருஷப் பஞ்சாங்கம் வரப்பெற்ரேம்.

—

மற்ற பக்கங்களில்

அர்ப்பணம் (சிறு கதை)	2
ராதா (தொடர்கதை)	5
விநோதக்கொத்து	7
ஸங்கீதப்பகுதி	8
கண்ணேட்டம்-பிரமுகர்கள்	11
மென்னிந்தியப் பிரமுகர்கள்	12
ஜோதிர்மண்டலம்	13
மிஸ்டர் பாஸ்கர்	15
இந்திய வாத்தமானம்	17
பிரபஞ்ச வர்த்தமானம்	18
யார்மத் கொலை (அதிசய உண்மைக் கதைகள்)	24
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணடி	25
நவநாகரீகம்	31
செல்லத்தின் குழந்தைகள் (ஹாஸ்யப்பகுதி)	33
சகோதர வாஞ்சை (சிறுவர் பகுதி)	37
அதிசயம் ஆனல் உண்மை	38
நரித்தலை வாயு (நோயற்றவாழ்வு)	39

ஸ்ரீமத் பகவத்கீதை

விலை ரூ. 3.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.

மாடரன் டயமண்ட்ஸ்

இவற்றின் அபார அழகும், அருமையான ஜ்வலிப்பும் மனதை பறிக்கின்றன.

சவரன் பொன்னில் "மாடரன் டயமண்ட்ஸ்" வைத்துக் கட்டப்பட்ட அழகு நிறைந்த லோலக்குகள் ஜதை 1-க்கு ரூ. 20-ம் அதற்குமேலும், கம்மல்கள் ஜதை 1-க்கு ரூ. 20-ம் அதற்குமேலும், மூக்குத்திருகுகள் ரூ. 4-ம் அதற்குமேலும், படங்கள் கூடிய ஜாபிதாவுக்கு எழுதுக.

வி. வி. ஆச்சார்யுலு & ஸன்,

உயர்தர நகை வியாபாரிகள்,

S 63, பொன்னப்ப செட்டி தெரு, த. பெ. 543, பார்க்டவுன் மதராஸ்

Mysore Silk Improves The Colour In Washing

USE

D. R. Gem, Designs.

Awarded Wembly Exhibition Medal 1924

Bangalore Poona Kongus (Thalapus)

Mohini, Indrani, Sunarda Border.

Dharmavaram Saries prepared with only Mysore (no mixture of foreign) Silk Each 9 yds. × 45"

WANTED AGENTS.

Manufacturers:-

D. R. NARAYANASWAMI & SONS.

DHARMAVARAM (Anantapur Dist.)

As D. R. Designs are prepared with only Mysore Silk, D. R. quality is very durable,

Mysore Silk Will Serve Longer In Daily Wash.



சென்னையில் அரசியல் எதிர்ப்பு தினம் கொண்டாடப்பட்டபோது எடுத்தபடம்.

அதிசய உண்மைக் கதைகள்

யார்மத் கொலை

———:[*]:———

(ஸ்ரீமான் எஸ். ரங்கராஜ ஐயங்கார், எம். ஏ. பி. எல்.)

[இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு கொலை வழக்கு சட்ட சாஸ்திரத்தில் மிகவும் பிரஸித்தி பெற்றதாகும். கொலைக் குற்றத்துக்கு நேர்முகமான ருசுவில்லாவிடினும், சந்தர்ப்ப சாக்ஷியத்தால் அதை நன்கு நிரூபித்துவிடலாம் என்பது அது தெற்றென விளக்குகிறது. குரூரத்தில் மிக்க அக்கொலையைப்பற்றிய உண்மை வரலாறும் அதன் மர்மம் புலனாகி குற்றவாளி பிடிபட்ட ஆச்சரியமான விவரமும் கீழே விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.]

ஹெர்பர்ட் பென்னெட் எளியகுடும்பத்தில் பிறந்தவன். ஆயினும் அவனது ஆசைக் கோரளவில்லை. தான் நினைத்த காரியத்தை எப்படியாயினும் சாதித்துவிட வேண்டுமென்ற திட எண்ணமே அவனது புத்தியைத் தீய வழிகளில் செல்லும்படித் தூண்டியது போலும்.

சிறுவயதிலேயே அவன் ஒரு இளநங்கையை மணந்து கொண்டான். அவள் ஒரு எளிய சங்கீத உபாத்தியாயினி. தாய் தந்தைகளை யிழந்தவள். அவளை ஆவலுடன் கொல்ல பென்னட் அவளதுஉள்ளத்தை ஒரு நொடியில் கவர்ந்து விட்டான். ஆனால் குடித்தனம் நடத்துவது மிகவும் கடினமாயிருந்தது. தம்பதிகள் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று பிழைக்க வழிதேடினர். அங்கே அவர்கள் மனதுக்குப் பிடித்த ஜீவனம் ஒன்றும் அகப்படவில்லை. ஆகவே, பென்னட் தன் மனைவியுடன் தாய் நாட்டுக்குத் திரும்பினான்.

அவனுக்கு ஒரு குழந்தை பிறந்ததெனினும், தன் மனைவியின்மீது வெறுப்பு தட்டிவிட்டது. தன் அந்தஸ்துக்குத் தகுந்த யோக்கியதை அவளிடம் இல்லையென்ற நினைப்பே அவனது வெறுப்புக்குக் காரணம். அவனுக்கு வூல்விச் ஆயுதத் தொழில் சாலையில் ஒரு உத்தியோகம் கிடைத்தது. ஆனால் அவன் தன் மனைவியுடன் குடித்தனம் நடத்த விரும்பவில்லை. அவளை பெக்ஸ்லிஹீத் என்ற ஊரில் தன் குழந்தையுடன் தனியே வசிக்கும்படி ஏற்பாடு செய்தான். மாதா மாதம் அவளுக்குப் போதுமான பணத்தை அனுப்பியும் வந்தான். யாருடனும் நெருங்கிப் பழகாத அவள் தன் குழந்தையுடன் தனியே காலத்தைக் கழித்து வந்தாள். அக்கம்பக்கத்தாருக்கு அவள் புருஷனைப் பற்றி அதிகம் தெரியாது. யாது காரணத்தாலோ அவள் தன் குழந்தையுடன் தன் கணவனை விட்டுத் தனியே வசித்துவந்தாள் என்று நினைத்தனர்.

அவளிடம் அதிக பண்டம் பொருள்கள் கிடையாது. விவாகத்துக்குமுன் அவளது நாயகனால் அளிக்கப்பட்ட இரண்டு மூன்று மோதிரங்களும் இறந்துபோன அவளது பாட்டியால் கொடுக்கப்பட்ட ஒரு வெள்ளி சங்கிலியுடன் கூடிய கைக் கெடிகாரமுமே அவளது ஆபரணங்கள். அவற்றை யணிந்துகொண்டு அவள் வெளியே போவது வழக்கம்.

அவளது புருஷனிடமிருந்து அடிக்கடிக் கடிதங்களும் பணமும் தபாலில் அனுப்பப் பட்டு வந்தன. பணத்தைத் தன் னிஷ்டப் பிரகாரம் செலவு செய்துகொள்ளுவாள். ஒரு ஸமயம் அவள் புது துணிகள் வாங்கினாள். அவற்றை அவ்வூரிலுள்ள ஒரு வண்ணாத்தியின் கடையில் சலவைக்குப் போட்டுப் பின்னர் உடுத்திக் கொண்டாள். சலவைக்குறியும் 599 என்ற நம்பரும் அவற்றின்மேல் பதியப்பட்டன.

நிற்க, அவளது புருஷனின் வாழ்க்கைப் போக்கை இனி கவனிப்போம்.

ஏகாங்கியாய்த் திரிந்த அவன் லண்டனில் ஆலிஸ் மெடோஸ் என்ற அழகிய நங்கையைச் சந்தித்தான். அவள் மீது காதல்கொண்டான். அவளை விவாகம் செய்துகொள்வது என்று தீர்மானித்தான்.

ஆலிஸ் மெடோஸ்ஒரு யோக்கியமான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுக்குப் பென்னெட்டின் பூர்வ விருத்தாந்தம் தெரியாது. அவனுக்கு ஒரு மனைவியிருப்பதையும் அவள் அறியாள். பிரம்மசாரியாக நடித்த அவனது பசப்புவார்த்தைகளிலும் இனிய நடத்தையிலும் மோகங்கொண்டாள். அவனை ஒரு யோக்கியமான இள புருஷன் என்று மதித்து மயங்கினாள். அவனுடன் உல்லாஸமாக ஸல்லாபஞ் செய்தாள். இருவரது மனங்களும் ஒன்றுபட்டால் அது விவாகத்தில் முடியும் என்பதில் என்ன ஐயமிருக்கிறது?

மணம் செய்துகொள்ளப் போகும் காதலர்களாகவே அவ்விருவரும் ஒரு தடவை ஆனந்தமாக சமுத்திரக் கரையிலுள்ள யார்மத் என்ற சிறு ஊருக்குச் சென்று ஒரு ஹோட்டலில் தங்கிவிட்டுத் திரும்பினர். ஆதலின் மனத்தில் இன்பகரமான நினைவுகள் குடிகொண்டிருந்தன. பாவம்! அவை இன்னும் சில தினங்களுக்குள் தவிடுபொடியாய் விடும் என்பதை அவள் எப்படி அறிவாள்?

தன் மனைவி உயிருடன் இருந்தது பென்னட்டின் லக்ஷியங்களுக்கும் ஆசைகளுக்கும் இடையூறாயிருந்தது. சட்டப் பிரகாரம் ஒரு மனைவியிருக்கையில் வேறொருத்தியை மணப்பது தண்டனைக்கு உள்ளாகக்கூடிய குற்றம். அவனுக்குக் குறுக்கே நின்றாள் தனியே வசித்த அவனது இளமனைவி. மேலும், அவளுக்கு மாதமாதம் பணம் அனுப்புவது அவனுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது.

ஆதலால் எல்லாவற்றையும் யோசித்த அவன் தன் மனைவியைக் கொலை செய்துவிடுவ

(27-ம் பக்கம் பார்க்க)

நாட்டு நடப்பு — சித்திரக் கண்ணாடி

லாகூர் தென்னிந்திய ஸ்திரீகள் சங்க அங்கத்தினர்கள் தலைவி ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி அம்மாளுக்கு (பெஷாவருக்கு மாற்றிச் செல்லும் ஸ்ரீமான் எஸ். எ. வனேஸ்வரின் மனைவி) ஒரு உபசரிப்பு நடத்தினர்.



முதலியார் சமூகத்தில் முதன் முதலாக சென்னையில் வக்கீலாகப் பதிவு செய்துகொண்டுள்ள ஸ்ரீமதி இ. டி சொக்கம்மாளுக்கு முதலியார்கள் சங்கம் ஒரு உபசரிப்பு நடத்தியது.



காஷ்மீர் சமஸ்தானத்தின் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும் திவான்பகதூர் என். கோபாலசாமி அய்யங்கார் சென்னையில் வழியனுப்பப்பட்டபோது எடுத்த படம். (வலது பக்கம்) எகிப்திய மாணவர்கள் சர்வகலாசாலை அதிகாரிகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். போலீஸார் சர்வகலாசாலையைப் பாதுகாத்து வருகின்றனர்.

PASSED MATRIC

பம்பாயிலிருந்து மிஸ்டர்.......... எழுதுவதாவது: "நான் மெட்ரீக் பரீக்ஷையில் தேறினேன்; இதற்கு தங்கள் "மூலிகை"யே காரணம். சீனியர் காம்பிரிட்ஜ் பரீட்சைக்காக ஒன்று அனுப்பவும்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரன், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் உ.ணர்வர். விலை ரூபா 3-8-0.

அ வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. பரீக்ஷைகள்:-எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. ஆரோக்கியமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.W

P O. SALKIA HOWRAH

உயர்ந்த வைரங்கள்

T. R.

ஜோஷி & சன்ஸ்,

Diamond Merchants,

38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்

பி. டி. மதராஸ்

உயர்ந்த ரோமசங்காரி

ஜனனா கிரீம்

வேண்டா ரோமத்தை உடனே நீக்கி சருமத்தை மிருதுவாக்கி பாதுகாக்கின்றது. பெரிய குடும்பங்களால் உபயோகிக்கப்படுகின்றது.

பெரியடியூப் அணா 12;சிறிய டியூப் அணா 6
பெரிய பாட்டில் அணா 14
சிறிய பாட்டில் அணா 10

வி பி. வேறு. எங்கும் விற்கப்படுகின்றது

Agents: Shivlal & Co., Bombay, 2

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager. Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

CONTRACEPTIVE.

'Rahat' is an unfailing contraceptive, a three-day use of which insures lifelong relief from the misery of conception without in any way harming the physique or disturbing menstrual regularity. Guarantee form accompanies every order.

Price Rs **5-8**; foreign, Shillings **10.**

Vilasvati: excellent retentive tonic pills.

Price Re. **1-6**, foreign, Shillings **2-6.**

Rajvati: recontinues stopped menses, regularising monthly course too.

Price Rs. **5-8**, foreign, Shillings **10.**

Dr. S. H. KHAN,

S. Tapia Mansion, Erskin Road,
BOMBAY 3.

உலகப் பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.

TRADE MARK

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம் : ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெரு, மதராஸ்.

ரூ. 500 இனாம்!

திமிர்குஷ்டமும்,
வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதனால்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,

(34) Panchpota, Bengal.

குமாரசஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

எலக்டிரிக் சினிமா ரூ. 5

இருட்டு அறையில் வெள்ளைத்திரையில் சினிமா பார்க்கலாம். உருவங்கள் சிறிதாகவிருப்பினும் சகல அபிநயங்களும் சுத்தமாகவும் தத்ரூபமாகவுமிருக்கும். ஒவ்வொரு மெஷினுடனும் 150 அடி பிலிமும் எலக்டிரிக் சாமான்களும் அனுப்பப்படும். தனி பிலிம் 150 அடி சுருள் ரூ. 2 தான்.

JOTHI & Co..
Post Box No 1224, Madras-

யார்மத் கொலை

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தவிர வேறு வழியில்லை என்ற கொடிய முடிவுக்கு வந்தான்.

இந்த ஸமயத்தில் தான் அவன் மனைவி அவனுக்கு ஒரு கடிதம் எழுதினுள். அதில் அவள் தனக்கு உடம்பு சௌக்கியமில்லை என்றும் காற்றிற்காக வேறு ஊர் போகவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தாள். பென்னட் அவளுக்குப் பணம் அனுப்பியதுடன் அவளைக் குழந்தையுடன் யார்மத்துக்குச் செல்லும்படி சொன்னுன். "சமுத்திரக் காற்று உன் உடம்புக்கு ஒத்துக்கொள்ளும். அங்கே சில தினங்கள் கழித்து வா" என்று அவன் கூறினுன். அப்படியே மிஸஸ் பென்னட் தன் குழந்தையை யழைத்துக் கொண்டு யார்மத்துக்குச் சென்றுள்.

அந்த ஊரில் அவள் மிஸஸ் ரெட்மன் என்பவள் வீட்டில் ஒரு அறையை வாடகைக்கு வைத்துக்கொண்டாள். அவள் யாருடனுமே அதிகமாய் புழங்குவதில்லை. மிஸஸ் ஹூட் என்ற பெயரை வகித்த அவள் தான் ஒரு விதவை என்று கூறிக்கொண்டாள். இதெல்லாம் அவனது ஆஞ்ஞயைப்படி செய்ய நேரிட்டது. அவளது கழுத்தில் ஒரு நீண்ட வெள்ளிச் சங்கிலியையும் பழைய வெள்ளிக் கடிகாரத்தையும் அணிந்திருந்ததை மிஸஸ் ரெட்மனும் ஊரிலுள்ள பலரும் பார்த்ததுண்டு.

அவள் அடிக்கடி கடற்கரைக்குத் தன்குழந்தையுடன்செல்வது வழக்கம். ஒரு தடவை அவள் தன் குழந்தையுடன் காற்று வாங்கிக்கொண்டிருக்கையில் ஒரு புகைப்படக்காரன் அவர்களை புகைப்படமெடுத்து ஒரு பிரதியை அவளிடம் கொடுத்தான். அதை அவள் தன்னறையில் மாட்டி வைத்தாள்.

ஒருநாள் அவளுக்கு ஒரு மஞ்சள் உறைகொண்ட கடிதம் வந்தது. உறையின் மேல் வூல்விச் தபால் முத்திரையிருந்ததை மிஸஸ் ரெட்மன் பார்த்துவிட்டாள். ஆனுல் அந்த உறையில் என்ன கடிதம் இருந்தது என்பது அவளுக்குத் தெரியாது. அக்கடிதம் பின்னர் அகப்படவே இல்லை.

விவரங்களையறிந்த நமக்கு அது பென்னட்டிடமிருந்துவந்தது என்பது தெரியும். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை நாம் எளிதில் யூகிக்கலாம். அன்று சாயங்காலம் தன்னை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கும்படி அவன் தன் குழந்தை மனைவிக்கு எழுதியிருந்தான். கடிதத்தைப் படித்த பின் கிழித்துவிடும்படிக்கோ அல்லது அதைத் தன்னுடன் கொண்டு வரும்படிக்கோ அவன் அதில் குறிப்பிட்டிருந்தான் என்பதில் யாதொரு ஸந்தேகமுமில்லை.

அன்று சாயந்திரம் மிஸஸ் பென்னட் தன் குழந்தையைத் தொட்டிலில் தூங்க வைத்துவிட்டு வெளியே கிளம்பினுள். அவள் புறப்படும்பொழுது அவளைப் பார்த்த மிஸஸ் ரெட்மன் அவள் கழுத்தில் வெள்ளிச் சங்கிலி தொங்குவதைக் கவனித்தாள்.

பின்னர் மிஸஸ் பென்னட் டவுன்ஹால் பக்கம் சென்று உலாவினுள். ரயிலிலிருந்து வந்து இறங்கின அவள் கணவன் அவளைச் சந்தித்தான். இருவரும் கைகோத்துக் கொண்டு உல்லாஸமாக ஒரு ஹோட்டலில் சிற்றுண்டி அருந்தினர்.

நன்ருய் இருட்டிவிட்டது. தம்பதிகள் சமுத்திரக்கரைக்கு மெதுவாய்ச் சென்றனர். பென்னட் தன் மனைவியுடன் இனிய வார்த்தைகள் கூறிச் சல்லாபித்தான். ஆனுல் அவன் மனதில் கூற்றினும் கொடிய வஞ்சகம் நிறைந்திருந்தது. இருவரும் தனியான இடத்தை யடைந்ததை வேருெரு ஜோடி காதலர் கண்டனர். ஆனுல் அவர்கள் தங்களது ஸல்லாப இன்பத்தில் மேலும் கவனிக்கவில்லை.

பென்னட் சட்டைப்பையில் பூட்ஸுக்குக் கட்டும் நாடா இருந்தது. வேண்டுமென்றே அதைக் கொண்டு வந்திருந்தான். மணல் மீது உட்கார்ந்த மனைவியுடன் அன்பு வழியும் முகத்துடன் முத்தமிட்ட பின், மறு விநாடி அவன் அக்கொடிய நாடாவை எடுத்து அவள் கழுத்தைச் சுற்றி இறுக்கி விட்டான். சில நிமிடங்களில் அப்பேதை மூச்சுத் திணறி இறந்தாள்.

அங்கேயே பிணத்தைக் கிடத்தி விட்டு கிளம்பினுன் கொலை பாதக பென்னட். அப்பொழுது நடுநிசி சமயம். தானும் ஆலிஸும் சில தினங்களுக்கு முந்தி தங்கிய ஹோட்டலை யடைந்தான். ஹோட்டல் வேலையாட்களிடம் தான் சற்று முன்பு வந்த ரெயிலில் வந்ததாயும், தான் மறுநாள் அதிகாலை லண்டன் திரும்ப வேண்டும் என்றும் கூறினுன். தான் இன்னும் சில தினங்களில் தன் மனத்துக்குகந்த மங்கையை மணக்கப் போவதாயும் அவன் கூறினுன். இனி அவன் ஆலிஸை மணப்பதற்கு சட்டப் பிரகாரம் யாதொரு தடையுமில்லை யல்லவா?

அதிகாலை வண்டியில் அவன் லண்டனுக்குப் புறப்பட்டுவிட்டான். அவன் மனதில் சற்றும் பயமில்லை. கடற்கரையில் கிடந்த பெண்ணை அவன்தான் கொன்ருன் என்பதை யாரால் நிரூபிக்க முடியும்?

II

போலீஸ் ஆராய்ச்சியும் குற்ற நிரூபணமும்

மறுநாள் பொழுது விடிந்தது. கடற்கரைக்கு நீராடச் சென்ற ஒருவன் மணலில் ஒரு பெண்ணின் பிணம் கிடந்ததைக் கண்டு போலீசாரிடம் தெரிவித்தான். பெண்ணின் கழுத்தில் பூட்ஸ் நாடா சுற்றி இறுக்கப்பட்டிருந்தது. அவள் குரூரமாய் முந்திய இரவு கொலை செய்யப்பட்டாள் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

அவள் யார் என்பது தெரியவில்லை. அவள் உடைகளில் யாதொரு கடிதமாவது அவள் பெயரைத் தெரிவிக்கும் அறிகுறியாவது இல்லை. பிணம் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டது. ஊரெங்கும் இச் செய்தி பரவியது.

மிஸஸ் ரெட்மனுக்கு தன் வீட்டில் குடியிருந்த மிஸஸ் ஹூட் முந்திய இரவிலிருந்து திரும்பி வராதது கவலையைக் கொடுத்தது. காலையில் தொட்டிலில் கிடந்த குழந்தை அழுதது. மிஸஸ் ரெட்மன் அதையெடுத்து உணவு கொடுத்துவிட்டு அதன் தாயைத் தேடிச் சென்றுள். போலீஸ் ஸ்டேஷனை யடைந்த அவள் அங்கே கிடந்த பிணம் தன் வீட்டில் குடியிருந்தவளுடையதே என்று அடையாளம் கண்டு பிடித்துக் கூறினுள்.

கொலையுண்ட பெண்ணைப் பற்றி அவளால் அதிகம் தெரிவிக்க இயலவில்லை. அவள் எந்த ஊரிலிருந்து வந்தாள் என்பதைக் கூட தனக்குத் தெரியாது என்று அவள் கூறினுள்.

ஆனுல் அவள் முதல் நாள் மிஸஸ் ஹூட்டுக்கு வூல்விச் தபால் முத்திரையுடன் ஒரு கடிதம் வந்தது என்பதை போலீசாரிடம் சொன்னுள். பின்னும் அவள் முந்திய நாள் மிஸஸ் ஹூட் வெள்ளிச் சங்கிலியை அணிந்து கொண்டாளென்று கூறினுள். அது பிணத்தின் மீது காணப்படவில்லை.

அது எம்மாதிரியானது என்று போலீஸார் விசாரித்தபொழுது அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவித்தாள் மிஸஸ் ரெட்மன்.

முதல் நாள் இரவு மிஸஸ் ஹூட்டும் ஒரு ஆடவனும் டவுன்ஹாலிலிருந்து ஒருஹோட்டலுக்குச் சென்று சிற்றுண்டி யருந்தியதைப் பார்த்ததாக இரண்டுபேர் கூறினர். ஆனுல் அவன் யார் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

போலீஸார் முந்தியநாள் வந்த கடிதத்தில் ஏதோ முக்கியமான விஷயம் உள்ளது என்பதை ஊகிப்பது இயல்பே. ஆனுல் அது அவர்களது சோதனையில் அகப்படவில்லை. ஆனுல் மிஸஸ் ஹூட் இருந்த அறையில் சில நாளைக்குமுன் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் கடிகாரச்சங்கிலியுடன் அவள் தன் குழந்தையுடன் நின்றதைப் போலீஸார் கண்டனர்.

மோ
கி
னி
க்
கு

கவலையில்லை குறைவுமில்லை
ஓரே ஆனந்தமே
நவயௌவன விலாஸம்
உங்களுக்கு குறை ஏன்?

அவளுக்கு

பூரணாரோக்கியம்!
அது உங்களுக்கில்லை.

ஸ்திரீக்கு ஆரோக்கியமிருந்தால் எல்லாம் ஆனந்தமே!! கிரஹ யஜமானத்வம், சந்தான சம்பத்து, பெருமை இவைகளெல்லாம் ஆரோக்கியமிருந்தால்தான் அமைந்திருக்கும்.

ஆரோக்யம்—ஸ்திரீகளின் ஆரோக்கியம் முக்கியமாக கர்ப்பகோசத்தின் ஸ்திதியை ஒட்டியிருக்கிறது. கர்ப்பகோசத்தில் யாதொரு தோஷமுமில்லாதிருந்தால் ஸ்திரீக்கு அந்த ஆனந்தமும் அதிக சௌந்தர்யமும், அந்த நவயௌவன விலாஸமும் சந்தான சோபை எல்லாம் அமையும்.

தேகம் அனாரோக்யமாய் விட்டதென்றும், குணப்படாதென்றும் கைவிடுபவர்கள் யாரோ அவ்விதயலைப்பு அனுவசிய. ஆனந்தம் உங்கள் அருகாமையிலேயே இருக்கிறது.

லோத்ரா

ஆரோக்யப் பிரதாயினி

கேஸரி குடீரம்—மதராஸ்.

அதைக் கைப்பற்றியதுடன் அவளது துணிகள் சிலவற்றையெடுத்துக்கொண்டனர். அவற்றில் 599 என்ற சலவைக்குறி இருந்தது.

வூல்விச்சிலிருந்து யாரோ கடிதம் கொலையுண்டவளுக்கு அனுப்பினுன் என்பதை வைத்துக்கொண்டு அதிகம் கண்டு பிடிக்கமுடியாது. எனினும் போலீஸார் மிகவும் ஊக்கமாய் வேலை செய்தனர். தங்களிடமிருந்த புகைப்படத்திலிருந்து பல பிரதிகளை எடுத்து பிரசுரித்தனர். அவற்றிலொன்றை பெகஸ்ஹீத் என்ற ஊரிலிருந்த ஒரு வண்ணாத்தி பார்த்து அடையாளங்கண்டு பிடித்துவிட்டாள். "ஆம் புகைப்படத்திலிருந்தவள் மிஸஸ் பென்னட்" என்று அவள் கூறினுள் போலீஸாரிடம்.

போலீஸார் உடனே தங்களிடமிருந்த மிஸஸ் பென்னட்டின் துணிகளை அவளிடம் காட்டினர். "ஆம், இவை என்னுல் சலவை செய்யப்பட்டன. 599 குறி என்னுடைய

எப்ரல் முதல் தேதி பம்பாயில நடந்த ஹர்த்தாலின்போது ஒரு சிறுவன் ஒரு போஸ்டரைத் தன்'' சைகிளில் எடுத்துச் சென்ற காட்சி.

தான்'' என்று கூறிய அவ்வண்ணாத்தி தன்னிடமுள்ள கணக்குப் புஸ்தகத்தை யெடுத்து தன்னால் சலவைசெய்யப்பட்ட விவரங்களையும் காண்பித்தாள்.

போலீசாருக்கு இப்பொழுது இறந்தவளது உண்மைப் பெயர் தெரிந்துவிட்டது. அவள் பெக்ஸ்விஹீத்தில் வசித்தாள் என்பதையுணர்ந்த பின் அவள் முன்பு குடியிருந்த இடங்களில் சென்று புலன் விசாரித்தனர். அவளுக்கு ஒரு கணவன் இருந்தான் என்பதையும் அவனுக்கு வூல்விச் ஆயுதச்சாலையில் உத்தியோகம் என்பதையும் தெரிந்துகொண்டனர்.

அது முதல் அவர்கள் பென்னெட்மீது மோகுல் செய்ய ஆரம்பித்தனர்.

பென்னெட் ஆலிஸ் மெடோஸைக் காதலிப்பதையும் அவளை அவன் விவாகம் செய்துகொள்ளப் போவதையும் அறிந்துகொண்டனர். அவன் தன் மனைவியைக் கொலை செய்யக் காரணம் இருந்தது என்பது நன்கு விளங்கியது. அவன் யார்மத்துக்கு ஆலிஸுடன் சில தினங்களுக்குமுன்பு சென்றதையும் ஒரு ஹோட்டலில் தங்கியதும் கொலை நிகழ்ந்த இரவு அவன் அதே ஹோட்டலில் நடுநிசிக்குமேல் வந்து விட்டு காலை லண்டனுக்குத் திரும்பியதையும் கண்டுபிடித்த பின் அவர்களுக்கு அவனே தன் பெண்டாட்டியைக் கொலை செய்த சண்டாளன் என்ற நிச்சயம் மனதில் வேரூன்றி விட்டது.

ஆனால் போலீஸ் இவ்வளவு தூரம் நடத்திய ஆராய்ச்சியின் விவரம் பென்னட்டுக்குத் தெரியாது. ஆலிஸ் மெடோஸுடன் குலாவிய அவன் அவளை கூடிய சீக்கிரம் மணந்து இல்வாழ்க்கை நடத்தப் போவதாக மனப்பால் குடித்துக் கொண்டிருந்தான். கொலையுண்டவளின் உண்மைப் பெயர் போலீஸாருக்குத் தெரியாது என்றும் கொலை செய்தவன் யார் என்பதை அவர்கள் எப்பாடு பட்டாலும் அறிய முடியாது என்றும் அவன் நம்பிக்கை கொண்டிருந்தான்.

ஏன்! அவன் தன் காதலியுடனும் அவளது உறவினருடனும் யார்மத் கொலையைப் பற்றி சில தடவைகளில் பேசியதுடன் அதைப்பற்றி தன்னுடைய அபிப்பிராயத்தையும் கூறியதுண்டு என்பது பின்னர் தெரியவந்தது.

இப்படி இன்பகரமாகக்காலத்தைக் கழித்த பென்னெட்டை ஒரு நாள் திடீரென்று போலீஸார் கைது செய்தனர்.

“பென்னட்! யார்மத் கொலைக்காக உன்னை நான் கைது செய்கிறேன்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

“யார்மத்தா?'' என்று வினவிய பென்னட், “நான் அந்த ஊருக்குப் போனதே கிடையாதே'' என்றான்.

ஆனால் அது சுத்தப் புளுகு என்பதை ஆலிஸ் மெடோஸே ஒப்புக்கொண்டாள். பாவம்! அவள் மனம் பட்ட பாட்டை யாரே அறிவார்? தன்னை மணக்கவிருந்தவன் ஒரு கொடிய கொலைகாரன் என்பதை யுணர்ந்தாள். அவள் அடைந்த கலவரத்தை எப்படி விவரிப்பது?

போலீஸார் பென்னட்டின் வீட்டைச் சோதனை செய்தனர். அவனது பெட்டியில் அவன் மனைவி அணிந்திருந்த வெள்ளிச் சங்கிலி அகப்பட்டது. ஆம்! அதுதான் அவன் குற்றத்தைச் சந்தேகமற நிரூபித்த வஸ்து.

தன் மனைவியைக் கொலை செய்யுமுன்னமோ, அல்லது அப்புறமோ பென்னட் அவள் கழுத்திலிருந்த கடிகார சங்கிலியை எடுத்துக்கொண்டுவந்து விட்டான். சங்கிலியைத் தன்னுடனேயே வைத்துக்கொண்டிருந்தான். அதுவே அவனை தர்ம தேவதைக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது.

என்ன விநோதமான உளவுகள். தற்செயலாய் யாரோ ஒரு புகைப்படக்காரன் இறந்தவளின் புகைப்படத்தை எடுத்தான். அது போலீஸாரது ஆராய்ச்சிக்கு முக்கிய ஆயுதமாக ஏற்பட்டது. அதன் மூலமும் இறந்தவளின் துணிகள் மூலமும் அவள் உண்மைப் பெயர் தெரியவந்தது. பின்னர் அவள் கணவனின்மீது போலீஸாரின் நாட்டம் விழுந்தது. அவன் கைது செய்யப்பட்டான். அவனிடமிருந்து அகப்பட்ட வெள்ளிச் சங்கிலி மிஸஸ் பென்னெட்டைக் கொலை செய்தது அவனே என்பதை நிரூபித்து விட்டது.

ஆம்! மிஸஸ் பென்னெட் கொலையுண்ட இரவு அதையணிந்து சென்றதை மிஸஸ் செட்மன் பார்த்திருக்கிறாள். ஹோட்டலில் இதை இரண்டொருவர் பார்த்திருக்கின்றனர். அவள் பிணத்தின்மேல் அது இல்லை. பின்னர் அது பென்னெட்டிடமிருந்து அகப்பட்டதால் அவனைக் கொலை செய்துவிட்டு அதை அவன் எடுத்துச்சென்றான் என்பது நிச்சயமாய் நிரூபணமாகிறது.

கிரிமினல் சட்டத்தில் நிபுணரான ஒருவர் பின் வருமாறு கூறுகிறார்:—“பென்னெட்டிடம் சங்கிலி இருந்திராத பட்சத்தில் அவன் குற்றவாளி என்பதை நிரூபிப்பது கஷ்ட சாத்தியமாய் விடும். அது மட்டுமல்ல. குற்றஞ் செய்தது அவனல்ல என்பதை அவன் தரப்பில் வாதித்து விடலாம். சங்கிலியை எவனோ ஒருவன் திருடுவதற்காக மிஸஸ் பென்னெட்டைக் கொலை செய்துவிட்டு அதை எடுத்துக்கொண்டு போய் விட்டான் என்று கூறலாம்.''

ஆனால் விதி பென்னட்டை தர்ம நியாய அதிகாரிகளுக்கு காட்டிக் கொடுத்து விட்டது. அவனது குற்ற வழக்கு நியாயஸ்தலத்தில் நடைபெற்றபோது, அவனுக்காக வாதித்த நியாயவாதியால் அவனுக்கு விரோதமாய் ஏற்பட்ட சந்தர்ப்ப சாக்ஷியத்தின் பலத்தைப் பேதிக்கமுடியவில்லை. பென்னெட்டுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆலீஸ் மெடோஸை மணப்பதற்காக தன் மனைவியைக் குரூரமாய் கொலை செய்த அவன் தூக்கு மரத்தில் தன் பிராணனை விட்டான்.

* * * *

வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும நாலே வாரதில் குணம். சுவர்த்தக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.

KAMALA WORKS (S M.)

Panchpota—Bengal, India.

பத்மராஜூ

விலை ரூபா 1—8—0

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

சென்னை.

போலிகளைக் கண்டு உஷார் !!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா,

அத்தர் அரசன்

ஆட்டோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)



சுகந்த வாசனையைத் தரும் அரிய மலர்களிலிருந்து தயாரிக்கப்படுவது. 2 அணா ஸ்டாம்பனுப்பினால் சாம்பில் கிடைக்கும். இதையே உபயோகியுங்கள்.

விலை:—½ அவுன்ஸ் புட்டி ரூ. 1 4; 1 டிராம் புட்டி 12 அணா; வி. பி. சார்ஜ் தனி.

மொத்த ஏஜண்டுகள்:

The Anglo Indian Drug & Chemical Co. BOMBAY, 2

தென்னிந்தியப் பிரமுகர்கள்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையும் மீனனின் பிராபல்யத்தைக்கண்டு மிக்க அசூயை கொண்டனர். வெகு சீக்கிரத்தில் மீனன் காலமாகிவிடவே, மஹாராஜாவிற்கு துக்கம் மிகவும் ஏற்பட்டது. 1836-ல் இவர் 165-வஸ்துக்களின் மீது விதிக்கப்பட்டு வந்த வரியை நீக்கிவிட்டார். இதனால் வர்த்தகம் விருத்தியடைவது சாத்தியமாகியது. ரெஸிடெண்டு இதை மிகவும் பாராட்டி, இவ்வருஷம் ஜூலை மாதம், "திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு இது பெரும் புகழை விளைவிக்கின்றது" என்று திவானுக்கு எழுதினர். இதே வருஷம் ஜனன மரணக் கணக்கையும் எடுக்கும்படி இவர் உத்திரவிட்டார். 1834-ல் திருவனந்தபுரத்தில் ஒரு ஆங்கில வித்தியாசாலை இவருடைய ஆதரவின் பேரில் ஏற்படுத்தப்பட்டது.

மஹாராஜாவிற்கு வான சாஸ்திரத்திலும் நல்ல ஞானம் உண்டு. 1836-ல் ஆலப்புழைக்கு விஜயஞ் செய்தபோது இவர் வர்த்தக ஏஜண்டான மிஸ்டர் கால்டிகாட் என்பாரிடம் சில வான சாஸ்திரக் கருவிகள் இருப்பதைக்கண்டு, அவற்றில் தமது விசேஷ பரிசயத்தைக் காட்டினர். பின்பு உடனே மிஸ்டர் கால்டிகாட் துரையின் ஆலோசனையின் பேரில் திருவனந்தபுரத்தில் வான சாஸ்திரிகளுக்கு ஒரு வசதியையும் செய்துகொடுத்தார். மிஸ்டர்கால்டிகாட் அரசாங்கத்தின் முதல் வான சாஸ்திரியாகவும் நியமிக்கப்பட்டார். இவருக்குப் பின்பு வந்த மிஸ்டர் பிரௌன், எப். ஆர். எஸ். என்பார் மஹாராஜாவைப் பற்றி, "இந்தியா முழுதும் தமது கல்விக்காகப் பிரசித்தி பெற்றவர் நம் அரசர். இவரது ஒழுங்குபடுத்தப்பட்ட சித்தமும், எதையும் நடத்திவைக்க வல்ல திறமைகளும், பல பாஷைகளில் பயிற்சியும், உயர் நடத்தையும், எல்லாவற்றையும்நன்குகவனித்துக் காப்பாற்றும் குணாதிசயமும் எங்கும் சிலாகிக்கப்படுபவை" என எழுதினர்.

ஸ்திரீகளுக்கு க்ஷவரம்-நெய்க் கொப்பரையில் இறக்குவது

தாம் பட்டத்திற்கு வந்தவுடனேயே இவர், ஸ்திரீ குற்றவாளிகள் க்ஷவரம் செய்யப்பட்டு அவமதிக்கப்படுவதை முதலில் ஒழித்தார். அவர்களைப் பின்புசமஸ்தானத்திலிருந்து வெளியே துரத்துவதையும் இவர் எடுத்துவிட்டார். எந்த நம்பூதிரியின் நடத்தை சந்தேகிக்கப்பட்டாலும் அவர் சுசீந்திரத்தில் நெய்க்கொப்பரையில் இறங்க வேண்டும் என்ற கொடிய விதி முன்புசமஸ்தானத்தில் உண்டு. இவர் இவ்விதியை அகற்றினர். ராயத்துகள் பயிர் செய்யும் தென்னை முதலிய மரங்கள் மீதுபோடப்பட்டுவந்தவரியில் நான்கில் ஒரு பாகம் வஜா செய்யப்படவேண்டுமென்ற ஒரு ரெவின்யூ சட்டத்தை இவர் நிறைவேற்றி வைத்தார். தவிரவும் மஹாராஜா சில கெட்ட உத்தியோகஸ்தர்களையும் பக்ஷபாதமின்றி பதவியிலிருந்து நீக்கிவிட்டார்.

1837-ல் திவான் சுப்பராவ் ராஜிநாமாச் செய்ய திவான் பேஷ்காராக விருந்த ரங்காராவ் திவானாயினர். மறு வருஷம் மாஜி திவானான ராய் ராய ராய் வெங்கடராவ் கும்பகோணத்திலிருந்து திவான் பதவிக்கு வரவழைக்கப்பட்டார். அவரும் மறு வருஷம் ரெஸிடெண்டுடன் தகராறு காரணமாகப் பதவியை விடுத்தார். ஆகவே, மாஜி திவான் சுப்பராவ் மீண்டும் திவான் பதவியை ஸ்வீகரித்தார்.

1840-ம் வருஷ இறுதியில் லெப்டினண்டு கல்லன் ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டார். இவர் மஹாராஜாவுடன் சரியாகப் பழகவில்லை. ஆகவே மஹாராஜாவின் அருங்குணங்களை அறியாமல் உபத்திரவங்களுக்குக் காரணமாக விருந்தார். இவ---- சிநேகம் செய்து கொள்ள ம---ஜாவும் ஆவல்கொள்ளாமல் இருந்த--. இந்த ரெஸிடெண்டுடன் வந்த ஒரு மசூலிப்பட்டணம் பிராமணர் கிருஷ்ணராவ் சுப்பராவிற்கு எதிராக சில சதிகள் செய்யவாரம்பித்தார். ரெஸிடெண்டு கல்லன் செவிடாக விருந்ததுபற்றியும் மஹாராஜாவிற்கு அவருடன் பேசுவதில் பிரியம் ஏற்படவில்லை. இதனால் கிருஷ்ணராவ் ரெஸிடெண்டிடம் அடிக்கடி போய் விஷயங்களை வேண்டுமென்றே தாறுமாறாகச் சொல்லி, அவரது கொதிப்பைக் கிளப்பி வந்தார். இதுபற்றி ரெஸிடெண்டு அடிக்கடி மஹாராஜாவின் வேலையில் பிரவேசிக்கலானர். மஹாராஜாவிற்கு இது வெறுப்பை விளைவித்தது. இதனால்ராஜாங்க நிர்வாகமும் மிக்க தடைபட்டது. நீதி இலாகாவையும் இது உபத்ரவித்தது. ஆகவே, ஒரு சமயம் பிரதான நீதிபதி ஸ்ரீநிவாஸ ராயர், கவர்ன்மெண்டிற்கு, ரெஸிடெண்டு அடிக்கடி நீதி மன்ற விஷயங்களில் தலையிட்டு வருவதால், சரியான நியாயம் வழங்குவது கடினமாகிறது என்று கோபத்துடன் எழுதினர்; திவானுடைய அதிகாரமும் ஒடுங்கிவிட்டது. ரெஸிடெண்டு இட்டது சட்டமாகிவந்தது. திவான் சுப்பராவும் 1842-ல் வேலையை வெறுப்புடன் விடுத்தார். மஹாராஜாவும் பரம அதிருப்தியுடன் ரெஸிடெண்டு நண்பரான கிருஷ்ண ராவை திவானாக நியமித்தார். பின்பு ஒரு சமயம் ரெஸிரெண்டின் உபத்திரவம் தாங்காமல், கல்கத்தா சுப்ரீம் கவர்ன்மெண்டாருக்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரு

இவருடைய தலைமயிரின் அழகே அழகு...

மிருதுவு, அடர்த்தி, பளபளப்பு

காரணம்? அதன் ஆரோக்கியம்

வாசனை தேங்காய் எண்ணெய்.

வறண்டு மங்கியுள்ள தலைமயிருக்கு டாம்கோ வாசனைத் தேங்காய் எண்ணெயேசிறந்தது; "பிசுக்குண்டு" பண்ணாமல் கூந்தலுக்கு ஆரோக்கியமும், பளபளப்புமூட்டும்.

லைம்ஸ் & கிளஸரின் (லெமன் க்ரீம்)

தலைமயிர் வளர்ச்சி குன்றி அழகும் குன்றி விடுகின்றதா? வாசனை நிறைந்த இந்த டானிக் க்ரீமைக் கொண்டு நன்கு தேயுங்கள்; கூந்தலை வளர்க்கும்; உதிர்தலைத் தடுக்கும்.

டாம்கோ விற்பனை இலாகா
19-A, வாணியர் தெரு,
மதராஸ்.

இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை நிறைந்த ஔஷத கூந்தல் டானிக், கெட்டி பிரிலியண்டைன் முதலியன.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்,
பம்பாய் & டாடாபுரம் TH 412

டன் தாம் சேர்ந்ததால் தமக்கு ஏற்பட்ட அவமானங்களையும் எடுத்துக் கூறி, இத்தகைய நிலை மாற்றப்படாவிட்டால் ரெஸிடெண்டிடமும் கிருஷ்ணராவிடமும் ராஜ்யத்தை விட்டுவிட்டுத் தாம் போய்விடுவதாகவும் கூறி ஒரு நீண்ட தஸ்தாவேஜைத் தயாரித்தார். பலருடைய ஆலோசனையின் பேரில் இவர் கடின பதங்கள் அடங்கிய இதைக் கல்கத்தாவிற்கு அனுப்பவில்லை. 1843-ல் மஹாராஜா திவான் பதவியை கும்பகோணத்திலிருந்த ரெட்டிராவிற்கு அளித்தார். சென்னை கவர்ன்மெண்டார் இதை ஆமோதித்த போதிலும், ரெஸிடெண்டிற்கு இது பிடிக்கவில்லை. பின்பு இவர் கிருஷ்ணராவையும் நாட்டிலிருந்து வெளியே அனுப்பிவிட்டார். இவ்வருஷம் சென்னை கவர்னர் மார்க்விஸ் அப் ட்வீடேல் பிரபுவிற்கு எழுதிய கடிதத்தில் இவர் ஜனரல் கல்லனுடன் தாம் கொண்டிருந்த சம்பந்தத்தைத் தெளிவாக்கி எழுதினார். இதன் பின்பு கிருஷ்ணராவ் போன்றவர்களை வேலையிலிருந்து எடுத்து விடுவது மஹாராஜாவின் இஷ்டம் தவிர வேறு ஒருவருடையதும் இல்லை என்று மதராஸ் கவர்ன்மெண்டிடமிருந்து ரெஸிடெண்டிற்கு தெரிவிக்கப்பட்டது. இருந்தும் கல்லன் துரை விரோதத்தை விட்டுவிடவில்லை; கடைசியாக மஹாராஜாவின் மரணத்திற்கு சற்று முன்பு கிருஷ்ணராவ் மீண்டும் திவான் பதவிக்கு அழைக்கப்பட்டார்.

இந்த சம்பவங்கள் காரணமாக மஹாராஜா ராஜ்ய நிர்வாகத்தைச் சரியாகக் கவனிக்கவில்லை; எப்போதும் விரதங்களை அனுஷ்டிப்பதிலும் ஸ்ரீபத்மநாபஸ்வாமியைப் பூஜிப்பதிலுமே இவர் தமது காலத்தைக் கழிக்கலானார். இவர் ஒருவரையும் பார்ப்பதும் கிடையாது. ரெஸிடெண்டுடன் பேசுவதை விடுத்தார்; ஐரோப்பியர்களிடமும் இவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. ரெஸிடெண்டை அற்பமாக இவர் மதித்து வந்தார்; இவர் முன்பு அவருடைய பெயரைச் சொல்லவும் யாவரும் பயந்தனர்.

சங்கீதத்தில் விசேஷ ஞானம்

மஹாராஜாவிற்கு ஸ்வர ஸாஹித்யங்களில் விசேஷ ஞானம் உண்டு. "கிருஷ்ணா, கோதாவரி நதிக் கரைகளில் இருக்கும் தெலுங்கு கிராமங்களில் மக்கள் இவருடைய பாட்டுக்களைப் பாடி மகிழ்கின்றனர்" என்று திவான்பஹதூர் வி. நாகமய்யர் குறிப்பிட்டுள்ளார். கீர்த்தனங்கள், பதங்கள், வர்ணங்கள் ஆகியவை இவரால் எழுதப்பட்டன. இப்போது மொத்தம் 177 உருப்படிகள் திருவாங்கூர் கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டுள்ளன. திருவனந்தபுரத்தில் "ஸ்வாதி திருநாள் சங்கீதப் பள்ளிக்கூட" அதிகாரிகள் இவருடைய பத்யங்களைப் பிரபலப்படுத்தி வருகின்றனர். கேரளீய கலாபிவிருத்திக்கு இது மிகவும் அவசியமாகும். இவரை அநேகம் பிரபல சங்கீத வித்வான்கள் ஆஸ்ரயித்தனர். தியாகய்யரின் நேர் சிஷ்யரான கன்னையா பாகவதர், வாய்ப்பாட்டு பிடில் நாட்டியம் முதலியவற்றில் வல்லவரான வடிவேலு இவரருகே இருந்தனர். வடிவேலுவின் உதவியினால் பரதநாட்டியத்தை அபிவிருத்தி செய்ய இவர் பெரிதும் பிரயாசைப்பட்டார். "கோகிலகண்டம்" என்று பிரசித்தராகி, காலக்ஷேபம் செய்வதில் நிபுணராக விருந்த மேரு ஸ்வாமி என்ற மஹாராஷ்டிர பிராம்மணரும் திருவனந்தபுரத்திற்கு வந்திருந்தவர். தவிர மஹாராஜாவே "குசேலோபாக்கியானம்" "அஜாமீளோபாக்யானம்" என்ற இரண்டு ஹரிகதைகளை இயற்றி வைத்தார். கர்நாடக சங்கீதத்தில் நிபுணராக விருந்த இம்மஹாராஜா ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் சூக்ஷ்ம நுணுக்கங்களிலும் ஞானம் குறைந்தவரல்லர். இவர் சில ஹிந்துஸ்தானி பாட்டுக்களையும் இயற்றினார். ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் விசேஷ ஞானம் படைத்த தஞ்சாவூர் ராமய்யங்காரும் மஹாராஜாவின் ஆஸ்தானத்தில் இருந்து வந்தார். ஆகவே, தஞ்சை, மஹாராஷ்டிரம், மைசூர், மலையாளம், திருநெல்வேலி முதலியவிடங்களிலிருந்து வித்வான்கள் இவரைச் சூழ்ந்திருந்தனர்.

பக்தி ரஸம் ததும்பும் பக்தி மஞ்ஜரி இவர்களால் கடைசியாக இயற்றப்பட்டது. இவர் பத்மநாப சதகம், ஸ்யமந்தரபு, வாமனப்ரபந்தம், சங்கீத கீர்த்தனைகள், உத்ஸவ வாமன ப்ரபுத்தம் (சம்ஸ்கிருதம் மலையாளம் கலந்தது.) முதலியன இவரால் உலகிற்கு உதவப்பட்டவை. தமது ஸாஹித்யங்களில் ஸ்வராக்ஷரங்களை இவர் அமைத்திருந்தது யாவரும் இப்போது நன்கு அறிவர்.

ஏற்கனவே குறிப்பிட்ட வருத்தங்கள் மஹாராஜாவின் தேக திடத்தைக் குன்றிவிடும்படிச் செய்துவிட்டன. 1846-ம் வருஷம் டிசம்பர் மாதம் 25-ம் தேதியன்று இரவு மஹாராஜா ஸ்ரீ ஸ்வாதி திருநாள் அனாயாஸமாக பரமனடி சேர்ந்தார். அப்போது மஹாராஜாவின் பிராயம்34-தான். சுமார் 18 வருஷ காலம் மிகுந்த பிரக்யாதியுடனும் சிறப்புடனும் ராஜ்ய பாரத்தை வஹித்த இம்மஹா புருஷரின் அல்பாயுசு தேக வியோகம் எங்கும் வருந்தப்பட்டது. மஹாராஜா ஒரு பரம வைதீகர்; தெய்வ பக்தர், 1829-ல் துலா புருஷ தானத்தையும், 1834-ல் ஹிரண்ய கர்ப்பத்தையும் இவர் நடத்தி வைத்தார். இவருக்கு வசீகர சக்தி உண்டு என்றும் தெரிகிறது. "சக்தன் ராஜா" என்று இவர் வழங்கப்பட்டார். இவர் தமது சமீபத்தில் ஹைதராபாத் பயில்வான்கள், முதலியவர்களை வைத்துக்கொண்டிருந்தார். சீன தேசத்தவர்களிடம் இவருக்கு நன்மதிப்புண்டு. இரண்டு சீன ஜால வித்தைக்காரர்கள் இவர் சபையில் இருந்தனர். பல தேசத்தின் பிரதிநிதிகளும் இவர் சபையை சோபிக்கச் செய்தனர். எல்லா விதங்களிலும் தமது சமஸ்தானத்திற்கு இவர் பெருமையைக் கொண்டு வந்தார். இன்னும் இவரது பெயர் உலவி வருவதிலிருந்து நாம் இவரது பெருமையை நன்கு அறியலாம்!

* * * *

ஈறுகள் மிருதுவாக விருக்கின்றனவா? அவற்றினின்றும் இரத்தம் வருகிறதா?

ஈறுகள் மிருதுவாக விருந்து, அவற்றிலிருந்து சீழ், இரத்தம் பெருகினால், பயரியா நோய்க்கு ஆளாகிறீர்கள் என்று அர்த்தம்; விரைவில் உங்கள் இபற்கைப் பற்களை இழக்கலாம்; எனவே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகித்து ஈறுகளைப் பாதுகாருங்கள். பற்களைப் பிரஷ் செய்தபின்பு ஆள் காட்டி விரலால் ஈறுகளைத் தேயுங்கள். பற்களையும், ஈறுகளையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும் நவீன முறை இதுதான். ப்ராசீன காலம் தொட்டு நம் தேசத்தில் வழங்கி வரும் வேப்பங்குச்சியின் சத்து நிறைந்தது "நீம் டூத் பேஸ்ட்" இன்றே இதை உபயோகிக்க ஆரம்பியுங்கள்.

வெற்றி! பெருவியாதி ஒழிந்தது!

பெருவியாதி ஆராய்ச்சிக்காரர் சொல்வதாவது:

பெருவியாதி எக்காரணத்தினாலும் ஏற்படும் பெருவியாதி உள்ளுக்கும். வெளிக்கும் எடுத்துக் கொள்ளும் மருந்தினால் உடனே நிவர்த்தியாகிறது. 45 நாள் மருந்து, ஸ்நானத்திற்குக்கூட செட் 1-க்கு ரூ 10 டாக்டர் ஐ. ஸ்ரீராமுலு, எம். பி., எப். ஆர். எச். எஸ். (Cho) அகில-இந்திய பெருவியாதி நிவாரண சங்கம், ஆராய்ச்சியளர், பிரதிநிதி, டரிபார்ட்டரி கூறுவதாவது:— மற்ற நிவாரணிகள் பலனளிக்கத் தவறுகையில் இது கடுமையான நிலைமையிலும் சிறந்த குணமளித்தது.

வெண் குஷ்ட நிவர்த்தி

வெண்குஷ்டம் இரத்தக் கோளாறினாலோ அல்லது இதரகாரணங்களினாலோ ஏற்படுவது. உள்ளுக்கும், வெளிக்கும் இம் மருந்தைச்சாப்பிடுவதால் நிச்சயமாகக் குணமாகிறது, குணத்திற்கு உத்தரவாதம். செட் 1-க்கு ரூ 7-8. விஷமற்றது, டாக்டர் பி. கோபால் ராவ், பி. எஸ் சி., எம். பி., பி. எஸ்., பெங்களூர். எழுதுவதாவது: வெண்குஷ்டத்திற்கு உபயோகித்து. நல்ல பலனேற்பட்டது.

கிடைக்குமிடங்கள்:—

BEHAR CHEMICAL WORKS, Bhagalpur

அல்லது கீழ்க்கண்ட ஏஜண்டுகள்:—

மெஸர்ஸ் அப்பா & கம்பெனி, தாதா & கம்பெனி மதராஸ்.

ஸ்ரீராமா பார்மாசி மைசூர் பெங்களூர்

கடிதங்களும், ஆர்டர்களும் ஆங்கிலத்திலேயே

அபார சக்திவாய்ந்த டானிக்!

S.K.M.

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,

த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915 ஞு) 289, எஸ்பிளனேட் மதராஸ்.

நவ நாகரீகம்

'பிராக்' தினுசுகள்

(காசினி எழுதுயது.)

* * * 'சில மாதங்களு க்கு முன், என் தம்பிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருக் கிறது என்று உனக்கு எழுதிய ஞாபகமாக இருக்கிறது. போன வாரம் எங்கள் ஊரு க்கு ஒரு ஜவுளி வியாபாரி வந் திருந்தான். இவன் அழகான பொட்டுக்கள் போடப்பட்ட மெல்லிய சுதேசித் துணி தினு சுகள் வைத்திருந்தான். சின் னக் குழந்தைக்குச் சட்டை தைக்க நன்ருக இருக்குமே என்று, வெள்ளையிலும், பூக் கள்போட்டும் கொஞ்சம் துணி வாங்கினேன். பிறகு, சட்டை களை மருமாளுக்கு நாமே தை த்துக் கொடுக்கலாமே என்று தோன்றிற்று. பிராக்குகளைப் பல தினுசுகளில். வளைத்து வெ ட்டித் தைக்கிருர்களாமே? இது எப்படி? மேல் பாகத்தை வெட்டுவதா? சுருக்கம் பிடிக் கும் கீழ் பாகத்தை வெட்டி ளுல் தையல் எப்படி விழும்?' என்று நீ கேட்டிருக்கிருய்.

மேல் பாகத்தைத்தான் வெட்டவேண்டும். சுலப மான இரண்டு, மூன்று தினுசு களைக் கீழே எழுதி இருக்கி றேன். 'யோக்' என்று கூறப் படும் மேல் பாகத்தில் முன் பக்கத்தில்மட்டும் வளைவு வெட்டித் தைக்கும் தினுசு ஒன்று. இதில் பின்பாகம் சாதாரண பிராக்குகள் மாதிரி யிலேயே இருக்கும். இதற்கு முன்பாகத்துத் துணியை (இது சாதாரணமாக இரட் டையாக இருக்கும்) வேண்டிய அளவுக்குச் சற்று அகலமாக எடுத்து இரண்டாக மடித்துக் கொள்ள வேண்டியது. பிறகு பிராக்கின்சுருக்கங்கள்வைத்து இசைக்கப்படும் 'யோக்' கின் கீழ்பாகத்தை, நடுவில் வட்டமாக வெட்டிக் கையின் அருகில் குறுகி வரும்படி வெட்டிவிட வேண்டியது. பின் பக்கத்துயோக்கின் அக லத்துக்குச் சரியாக கழுத்து, கை இவைகளை வெட்டிச் சுரு க்கம் உள்ள கீழ்பாகத்தை இத்துடன் இசைக்க வேண்டி யது. அப்பொழுது, இசைத்த தையல் மேல்யோக்கின் துணி மார்பின்மேல் வட்டமாகவும், பிறகு குறுகிய இடத்தில் நே ராகவும், அழகாக மடிந்து தொங்கும். இந்த மடிப்பு இப் படியே நிற்க, ஒன்று அவ்வப் போது இஸ்திரி செய்யலாம் அல்லது இதன் மேல் பூவேலை செய்து விடலாம். இது ஒரு தினுசு.

இதே மாதிரியில், 'யோக்' கின் முன்பாகத்தின் நடு மத் தியில், ஆங்கில வீ போல் வெட்டி, இந்த வீயின் இரண்டு பக்கங்களிலும் வட்டமாக வெட்டிக் கைகளின் அருகா மையில், குறுகலாக வெட்டித் தைக்கலாம். மிகவும் சின்ன குழந்தைகள் 'பிராக்கில்' இந்த வெட்டு அதிகமாக எடுந்துக் காட்டாது. 'யோக்' சற்றுப் பெரிதாக இருந்தால்தான் இது அழகாகத் தெரியும். இந்த வெட்டில் கீழ்பாகத்தின் சுருக்கங்களை இசைக்கும் பொ ழுது, சுருக்கங்கள் ஒரே சீராக இருக்கும்படிக்கும், 'யோக்கில்' சுருக்கம் விழாமல் இருக்கும் படிக்கும் ஜாக்கிரதையாகத் தைக்கவேண்டும்.

'யோக்கின்'மேல் சுருக்கங் கள் அரும்புகள் மாதிரியில் தெரியும்படி வைத்துத் தைக்க லாம். இந்தத் தினுசில் 'யோக் கில்' வளைவு வெட்டிளுல் அவ் வளவு நன்ருக இருக்காது. இந்தபிராக்குகளைவிட, 'யோக்' கே இல்லாத ஹங்கேரியன் தினுசுப் பிராக்குகள்தான் இப் பொழுது நாகூக்காக வழங்கி வருகிறது. இதற்குச் சுருக் கங்களுக்கு வேண்டிய அள வுக்கு நீளமாகத் துணியை எடுத்துக்கொள்ள வேண்டி யது. இதற்கு 'யோக்'கில்லாத தினுல், உயரத்தையும் முதலி லேயே கவனித்துக்கொள்ள வேண்டும். கைகளையும் கழுத் தையும் வெட்டிப் பிறகு கைக ளுக்கு வைத்து இசைக்க வே ருகத் துணியை வெட்டிக் கொள்ளவேண்டும். அதா



ராமனுதபுரம் ஜில்லா உதவி பஞ்சாயத் ஆபீஸர் ஸ்ரீமான் கே. மாணிக்கத்திற்கும் மதுரை ஸ்பெஷல் போலீஸ் ஸப் இன்ஸ் பெக்டர் ஸ்ரீமான் எஸ். கே. மீனுக்ஷிசுந்தரம் சேர்வையின் குமாரி ஸ்ரீமதி ராஜேஸ்வரிக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

எனது சருமத்தின்

மிருதுத்தன்மையை

யாவரும்போற்றுகின்றனர்

ரகஸியம்

சிறந்த சரும டானிக்தான்

சிறந்த சரும டானிக் சரும அழகை எவ்வளவு தூரம் பெருக்குகிறதென் பதை ஸ்திரீகளில் வெகு சிலரே உணர் கின்றனர். உணருபவர்கள் மேலான சரும டானிக்கைத்தான் உபயோகிக் கிருர்கள். டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் சிறந்த கோல்ட் க்ரீமை உபயோகித் தால் சருமத்துவாரங்கள் சுத்தமடை ந்து, இரத்த ஓட்டம் பெருகி, உங்களு க்கு வாலிபமும், புத்துயிரும் உண்டா கும். யாவரும் போற்றும் வசீகரம் ஏற் படும். வியர்வையால் ஏற்படக்கூடிய அசுத்தத்தையும் அகற்றும். இன்றே ஒரு புட்டி வாங்கி, புதிய சரும உல்லா சத்தை அனுபவியுங்கள்.

Daggett & Ramsdell

வது, பிராக்கின் துணியில், சரிவாகக் கைகளுக்குத் துவாரம் வெட்டிக்கொள்ள வேண்டியது. இந்தச் சரிவில் வைத்து, இசைத்துக் கழுத்துப் பக்கத்தில் ஒரு பாகமாக இருக்கும்படிக்குக் கைகளை வெட்ட வேண்டியது. இந்தச் சட்டைக்குத் தோள் தையல் வேறாகக் கிடையாது. கைகளை வைத்துப் பொருத்தி, முன் பாகத்தைச் சுருக்கித் தைத்துவிட்டு சட்டைத்துணி, கைகளின் மேல் பாகங்களாலாகிய கழுத்தைச் சுருக்கி, மெல்லிய பட்டி வைத்துத் தைக்க வேண்டியது. முன் பக்கத்தில் கயிறு வைத்துத் தைத்துச் சட்டையைச் சௌகரியமாகப் போடுவதற்கு வேண்டிய அளவு இடம் விட்டு இரண்டு பாகங்களையும் சேர்த்துத் தைத்துவிட வேண்டியது. இதில், பூவேலைகள் செய்யலாம். மெல்லிய துணியில் பூவேலை செய்து, தைத்தால் மிகவிம் அழகாக இருக்கும். கீழ் பக்கத்திற்கு இஷ்டம்போல், டக்குகள் பூவேலை முதலியவைகள் செய்யலாம். எனக்கு ஒரே ஒரு சந்தேகம்தான் தோன்றுகிறது. இதெல்லாம் எழுதினால் புரியுமா என்பதுதான். வெட்டுகளுக்கு என்ன? அவரவர்கள் யுக்தி புத்தியை உபயோகித்து, புதிய மாதிரிகளில் வெட்டிப் பார்த்தால் போகிறது.

* * * *

குவேகர் ஓட்ஸ் தோசை

கொஞ்ச நாட்களுக்கு முன் நான் ஆனரபிள் சிவன் வீட்டிற்குப் போயிருந்தேன். எல்லாரும் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லார் இலையிலும் அன்றைய டிபனான ரவை இட்டிலியுடன், உள்ளங்கை அகலத்திற்கு அடைமாதிரியில் ஒன்றும் வைத்திருந்தது. நான் முதலில் இது மிகவும் மெல்லியதாகத் தட்டப்பட்ட அடையென்றேயெண்ணினேன். பிறகுதான் அது குவேகர் ஓட்ஸினால், செய்யப்பட்ட தோசை என்பது தெரியவந்தது. ஓட்ஸ் என்பது மேல்நாடுகளில் விளையும் ஒரு தானியம். இதை ஒரு தினுசாகப் பக்குவப்படுத்தி, கஞ்சி பண்ணிச் சாப்பிடுவதற்கு நன்றாக இருக்கும்படிக்குச் செய்து 'குவேகர் ஓட்ஸ்' என்று விற்கிறார்கள். இந்தத் தானியத்தைத் தான் 'ஜான்ஸன்' என்ற ஆங்கில நூலாசிரியர் 'இங்கிலாந்தில் குதிரைகளும், ஸ்காட்லாண்டில் மனிதர்களும் உண்ணும்உணவு' என்று அவர் எழுதிய நிகண்டில் விளக்கிக் கூறினாராம். ஸ்காட்லண்டு என்றால் அப்பொழுது அவ்வளவு இளப்பமாக இருந்தது. இது உடம்பிற்குப் புஷ்டி தரும் உணவாகக் கருதப்படுகிறது. 'கஞ்சி கொழ, கொழ என்றிருக்கிறது. தோசை நன்றாக இருக்கிறது. இதில் இன்றைக்குக் கோஸ் நறுக்கிப் போட்டு வாத்திருக்கு; சாப்பிட்டுப் பாருங்களேன்' என்று உபசரித்தாள் ஆனரபிள் சிவன் மனைவி.

குவேகர் ஓட்ஸுடன், கொஞ்சம் மைதாமாவும் சேர்த்துத் தயிர்விட்டு, இஞ்சி, பச்சை மிளகாய், கோஸ் எல்லாம் போட்டு, நெய்விட்டு, முரு முரு என்று வார்க்கப்பட்டிருந்த இந்தத் தோசை வாய்க்கு மிகவும் ருசியாகவே இருக்கு. ஓட்ஸ் அவல் மாதிரியில் இருக்கும். கூட ஏதாவது மாவு போடாவிட்டால் சேராது. கரைத்து வார்க்கவும் முடியாது. தீயை மெதுவாக விட்டு, கைகையாகக் கரைத்து, சிறிய தோசைகளாகப் பரத்தி வார்த்து, நெய் தாராளமாக விட்டுச் சுட்டு எடுக்கவேண்டியது. கோஸுக்குப் பதிலாக உருளைக் கிழங்கையும் போடலாம். ஒன்றும் போடாமலே வார்க்கலாம். தோசை நன்றாகத்தான் இருக்கு. ஆனால் வார்ப்பது சிரமம். நாலு பேர்களுக்கு வயிறு நிரம்ப வார்க்க வேண்டுமானால் சிரமம்தான். மற்றைய டிபன்களுடன், ஒரு நாசூக்கான புதிய தின்பண்டமாக வைப்பதற்கு மிகவும் ஏர்வையானது. மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

முத்துக்குளியல்

சில வருஷங்களுக்கு ஒரு முறை தென் சமுத்திரத்தில் முத்துக்குளித்து, சிப்பிகளை சிறு பொட்டணங்களாக்கி, ஒரே சராசரி விலையில் விற்பதுண்டு. அவற்றை வாங்கும் அதிர்ஷ்டமுள்ள சிலருக்கு மாத்திரமே முத்துக்கள் கிடைக்கின்றன.

அவ்வண்ணமே, காப்பிக்கொட்டைக்கு பச்சைச் சாயமேற்றி விற்கும் இக்காலத்தில், நீங்கள் கடையில் காப்பி வாங்கும் சமயத்தில் உங்கள் விதிப்படி நல்ல காப்பியோ அல்லது வெளிப்பகட்டான காசுக்கு உதவாத மட்டச் சரக்கோ கிடைக்கலாம். ஆனால் **ஸ்டேன்ஸ் கம்பெனி**யில் 3, 5, 7 பவுன் துணிப்பைகளில் பிடிக்கப்பட்டு முகவாயில் ஈய முத்திரை தரிக்கப்பட்ட அசல் நீலகிரிக் காப்பியை வாங்குவீர்களேயானால், உங்கள் பணத்துக்குத்தக்க பொருள் பெறுவீர்கள். துர் அதிர்ஷ்டம் என்பதே கிடையாது; போட்டி சரக்குகளும் துணிப்பைகளில் விற்பனை செய்யப்படுவதால்,

ஸ்டேன்ஸ்

என்று கேட்கவும்.

ஐயோ சகிக்க முடியவில்லையே!

என்று கண்ணீர்விட்டுக் கதறிய ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் இன்று சூதக வியாதிகளை வென்று தம் குழந்தைகளோடு கொஞ்சுகின்றனர்.

ஸ்திரீ ஸோதரி

(மூலிகைச் சத்துக்களால் தயாரிக்கப்பட்டது.)

ஸ்திரீகளின் மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதகவாய்வு, சூதகக் கட்டு, சூதக வயிற்றுவலி, இடுப்புவலி, வாந்தி, மயக்கம், பேதி, தலைவலி, பசியின்மை, உடல் கனத்தல், ஜ்வரம் முதலிய எல்லா சூதகக் கோளாறுகளையும் கண்டித்து, மலட்டுப் பூச்சிகளைக்கொன்று கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து, சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். அநேக நற்சாக்ஷிகள் பெற்றது. அநேக டாக்டர்களும் இதையே சிபார்சு செய்கின்றனர். குணமில்லையேல் பணம் வாபஸ் செய்யப்படும். ஒரே முறையில் முழுகுணத்தையளிக்கும். விலை ரூ. 5. பாக்கிங் & தபால் செலவு வேறு. எல்லாவிடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

வேலன்ஸ் மெடிகல் ஹால்,

காரணீஸ்வரர் கோயில் தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

வியாதியாலோ, பிரஸவத்தாலோ வேறு எந்தக்காரணத்தாலோ உதிர ஆரம்பித்த கூந்தலை, உதிராமல் தடுப்பது

கேசவர்த்தினி

ஒன்றே

மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி விலை அண 12;
மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்!— தென் இந்திய ரஸாயன சாலை
மயிலாப்பூர், சென்னை.

வருங்கால பலன்

புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.

பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.

ஹாஸ்யப்பகுதி

செல்லத்தின் குழந்தைகள்

(எஸ். ஆர். ஜயம்மாள்)

ராமமூர்த்தி இந்த வருஷம் கோடைகால விடுமுறைக்கு எங்கு போவதென்று யோசித்துக்கொண்டிருந்தான். இவ்வருஷம் அவனுக்கு எங்கேயாவது நாட்டுப் புறத்திற்குச் செல்லவேண்டுமென்ற அவா இருந்தது. அதற்கேற்றாப்போல் அவனது அக்காள் செல்லம் தங்கள் ஊருக்கு (வெங்கனூருக்கு) வந்து ஒரு மாதமாவது இருந்துவிட்டுப் போகவேண்டி ஒரு கடிதம் எழுதியிருந்தாள். ராமமூர்த்தியும் அங்கேயே செல்வதென்று தீர்மானித்தான்.

ராமமூர்த்தி வெகு குதூகலத்துடன் அன்றையதினமே வெங்கனூருக்குப் பிரயாணமானான். அவனுக்கு அச்சமயம் பட்டணத்திலிருக்க சலித்துப் போனதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஆனால் அதை ஒருவரும் எளிதில் அறிந்துகொள்ள முடியவில்லை.

ராமமூர்த்தியை அழைத்துச் செல்ல அவனது குட்டி மருமான் சங்கரனும் மருமாள் பட்டுவும் அவனது அத்திம்பேர் கனகசபாபதி அய்யரும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். வெங்கனூரில் வக்கீல் தொழிலை நடத்தி வந்தார் கனகசபாபதி அய்யர். ராமுவைக் கண்டதும் அவனது மருமக்கள் "மாமா, பெப்ரமெண்ட் எங்கே? சாகிலட் எங்கே?" என்று அவனைக் கட்டிக்கொண்டனர். ராமுவோ தான் வெங்கனூர் வரப்போகும் குதூகலத்தில் குழந்தைகளுக்கு ஏதாவது தின்பண்டங்கள் வாங்கி வரக்கூட மறந்துவிட்டான். ஆனால் அவன்சாதுரியமாகப் பெட்டிக்குள் இருப்பதாகவும் வீட்டிற்குப் போனபின் எடுத்துக் கொடுப்பதாகவும் சொல்லிவிட்டான். அதற்குள் அவனது அத்திம்பேர், "ராமு இதோ என் நண்பர் ஒருவர் அழைக்கிறார். அவருடன் பேசிவிட்டு வருகிறேன். நீ சாமான்களை ஆளிடம் ஒப்புவித்துவிட்டுக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போ" என்று சொல்லிவிட்டுத் தனது நண்பருடன் சென்றுவிட்டார்.

உடனே ராமுவும் குழந்தைகளைக் கடை வீதி வழியாக அழைத்துச் சென்று ஏதாவது வாங்கிக் கொடுத்து, அப்புறம் வீடுசெல்வோமென்று யோஜித்தவனாக அவர்களை அழைத்துக் கொண்டு கடை வீதிக்குச் சென்றான். வழி நெடுக குழந்தைகளிருவரும் "மாமா என்னைத் தூக்கிக்கொள்" இல்லை "மாமா எனக்குத் தான் காலை வலிக்கிறது, என்னைத்தான் தூக்கிக் கொள்ள வேண்டும்" என்று சண்டை போட்டுக்கொண்டே வந்தனர். ராமு பாவம் குழந்தைகளைத் தூக்கியவனே அல்ல. ஆகையால் அவர்களை மெள்ள ஏமாற்றித் தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்து வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

அன்று முழுவதும் ராமமூர்த்திக்குக் குழந்தைகளுடன் ஓரியாடுவதிலேயே முடிந்தது. மத்தியானம் சற்று கண் அயரலாமென்றாலோ, குழந்தைகள் விடவேயில்லை. குழந்தைகள் செல்லத்தண்டை வந்தால் கூட அவள் "மாமா கிட்டே போங்கோ மாமா, நன்னா விளையாட்டு காமிப்பான்" என்று சாக்குச் சொல்லி ராமுவிடம் அனுப்பிவிடுவாள். வெங்கனூரில் ராமுவுக்குப் பட்டாபிராமனென்றொரு நண்பனிருந்தான். ராமு வந்திருக்கும் செய்தி கேட்டு அவனைப் பார்க்க பட்டாபி சாயங்காலம் வந்தான். "வீட்டில் என்ன செய்கிறாய்? கொஞ்ச நேரம் உலாவப் போலாம் வா" என்று அவன் அழைத்தான். உடனே செல்லம் அடுத்த அறையிலிருந்து "அப்படியே சற்று பட்டுவையும், சங்கரனையும் அழைத்துக் கொண்டுபோ ராமு. வீட்டிலிருந்தால் என்னை வயிற்றெரிச்சல் கொட்டிக்கொள்கிறார்கள். மாமாதான் வந்திருக்கிறாயே குழந்தைகளையும் அழைத்துப் போயேன்" என்றாள். அதைக்கேட்டதும் ராமுவிற்கு பகீரென்றது. என்ன செய்வது? இதுகளிடமிருந்து கொஞ்ச நேரம் தப்பித்துக் கொண்டு போய் வரலாமென்றாலும் விதியில்லையே என்று மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டே அவர்களையும் கூட அழைத்துச் சென்றான். புறப்படும்பொழுதே சங்கரன் "மாமா, காத்தாலெ ஆட்டம் என்னை மிட்டாய்க் கடைக்கு அழைச்சுண்டு போகணும்" என்று பீடிகை போட்டான். பட்டு "காத்தாலே சங்கரனாச்சு. இப்போ என்னெத்தான் தூக்கிக்கணும்?" என்று அழ ஆரம்பித்தாள். வழி நெடுக ராமு பட்டபாடு கொஞ்சமல்ல. அவன் பட்டாபியுடன் இரண்டொரு வார்த்தைகள் கூடப் பேசுவதற்கு குழந்தைகள் விடவில்லை. அவனுக்கு உலாவப்போனது போதுமென்றாய்விட்டது.

* * * *

மறுநாள் சாப்பிட்டானதும் எல்லோரும் சற்று சிரமபரிகாரம் செய்துகொண்டிருந்தார்கள். வெய்யில் வெகு தீக்ஷண்யமாகவிருந்தது. ராமுவும் சற்று படுத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது சங்கரனும், பட்டுவும்

இந்த ஆரோக்கியமான டயான் ஐப்பிறவி குழந்தைகள் இன்று க்வேக்கர் ஓட்ஸை உண்டன.

ஒவ்வொருவருக்கும் உணவுக்கு எது மிகச் சிறந்தது என்பதற்கு டயான் நிபுணர்கள் பதில் கூறுகிறார்கள்!

டயான் ஐப்பிறவி குழந்தைகளுக்கு க்வேக்கர் ஓட்ஸைப் பொறுக்கி எடுத்ததால் இந்த தான்யமே மேலானதென்று அதில் நம்பிக்கை இருப்பதாக அதிக வாக்குகள் கிடைத்திருப்பதை யார் தான் நம்பாமலிருக்க முடியும்? க்வேக்கர் ஓட்ஸ் சிறியோர் முதியோர் எல்லோருக்கும் மிக்குயர்ந்த உணவு என்பதற்கு வேறு அதிக நல்ல அத்தாட்சி என்ன இருக்கிறது?

இயற்கையில் கிடைக்கும் அதன் சொந்த உணவு சத்தாகிய விடமின் "பி" க்வேக்கர் ஓட்ஸில் ஏராளமாயிருப்பதால் இது புஷ்டியைத் தருகிறது, நரம்பை அமைதியாயிருக்கச் செய்கிறது; ஜீரணத்திற்கு உதவி புரிகிறது, மலபந்தம் வராமல் தடுக்கிறது. இதன் மூலம் நல்ல ஆரோக்கியமான பசியுண்டாகிறது. இது தேகத்தை பலப்படுத்தி, உறுதியான எலும்புகளை யுண்டாக்கி, பலமான சதையும், கெட்டியான பற்களும் ஏற்படும்படி செய்கிறது.

இதனால் தான் ஒவ்வொருவரும் க்வேக்கர் ஓட்ஸை தினம் ஏதாவதொரு ருசிகரமான விதமாய் உட்கொள்ள வேண்டும்; ஏனெனில் "பி" உணவு சத்தை நமது உடலில் சேர்த்து வைக்க இயலாது; அதை நாடோறும் அப்பப்போது சேர்த்துக் கொண்டே யிருக்க வேண்டும்.

இதை தயார் செய்வது சுலபம். 2½ நிமிஷத்தில் உணவுக்காக வேக வைத்துவிடலாம்.

க்வேக்கர் ஓட்ஸில்

இயற்கை உணவுசத்து அதிகமிருப்பதால் ஜீரணம், நரம்பு சக்தி, பசி இவைகளை அதிகப்படுத்தும்.

செய்துகொள்ள வேண்டுமென்று ஆசையிருந்தும் கல்யாண விஷயமாக எனக்கிருந்த முன் பிடிவாதத்தால் அதை வெளியில் சொல்லிக் கொள்ள முடியாது போய்விட்டது.

ராமுவிற்கு இப்பொழுது பட்டு சங்கரன் என்றால் பிராணன். அவர்கள் ஓரியாட, ஓரியாட அவனுக்குப் பரமானந்தம்.

* * * *

செல்லம் தக்ஷணமே படமும் கையுமாக ராமு விருந்த அறைக்கு வந்தாள். ராமுவிடம் அதைக் காட்டி நகைத்தாள்.

செல்லத்தினிடம் ஓரியாடிக் கொண்டிருந்தார்கள். செல்லம் "மாமாவிடம் போங்கள். அவன்யானே, குதிரை எல்லாம் நன்னு எழுதுவான். காகிதத்தைக் கொண்டுபோய் எழுதித் தரச்சொல்லுங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டாள்.

ராமுவிற்கோ இக்குழந்தைகளுடன் ஓரியாடி ஓரியாடி வெகு சலித்துப் போய்விட்டது. மறுநாளே ஏதாவது சாக்குக்குச் சொல்லிக்கொண்டு அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுவிடலாமா என்றாகிவிட்டது.

ராமு, "பட்டு, போய் பக்கத்துள்ளே என் சொக்காய் ஜேபியில் பென்சில் இருக்கு, கொண்டா போ" என்று சொல்லிப் பட்டுவை அனுப்பினான்.

"நான் முந்திப்போய் கொண்டுவந்து விடுகிறேன், நான்தான் மொதல்" என்று இருவரும் ஓடினார்கள். கொஞ்சநேரம் குழந்தைகளின் சத்தமே இல்லை. பிறகு இருவரும் பலமாகச் சண்டைபோடும் இரைச்சலைக் கேட்ட செல்லம் அந்த அறைக்குப்போனாள். ஆனால் ராமு குழந்தைகள் சென்றவுடன் பேபர் படிப்பதில் மூழ்ந்து விட்டதால் அவனுக்கு ஒன்றும் கேட்கவில்லை. இரு குழந்தைகளும் ராமுவின் ஜேபியிலிருக்கும் சாமான்களையெல்லாம் பென்ஸில் தேடும் காரியத்தில் கீழே இறைத்துக்கொண்டிருந்தவர்கள் அவன் டைரியிலிருந்த சிறு படமொன்றை எடுத்துக் கொண்டு எனக்கிந்தப்படம், எனக்கு எனக்கு? என்று ஒருவருக்கொருவர் சண்டை

போட்டுக்கொண்டிருந்தார்கள். செல்லம் அப்படத்தைக் குழந்தைகளிடமிருந்து பிடுங்கிக்கொண்டு வெகு ஆச்சரியத்துடன் நோக்கலானாள். அப்படம் அவள் சிநேகிதி கமலத்தின் (முன்சீப் நீலகண்டய்யர் மனைவி) அக்கா பெண் ஸரோஜாவினுடையது. தக்ஷணமே படமும்கையுமாக ராமுவிருந்த அறைக்கு வந்தாள். ராமுவிடம் அதைக் காட்டி நகைத்தாள். தன் காதலியின் படம் எவ்விதம் அக்காவிற்குக்கிடைத்ததென்று தெரியாமல்திகைத்துப் போனான் ராமு. மறுக்ஷணம் "பென்ஸில் எடுத்து வரப்போன குழந்தைகள் காரியம்தான் இது" என்று அவனுக்குத் தோன்றிவிட்டது. அக்ஷணமே அவ்விரு குழந்தைகளையும் நன்றாகப் புடைக்க வேண்டுமென்று ஆத்திரம் கொண்டான். ஆனால் அக்கா என்ன சொல்வாளோ என்று பல்லைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்திருந்தான். செல்லம், "ராமு, நான் உன்னை இந்த ஊருக்கு எதற்கு வரவழைத்தேன் தெரியுமோ. ஸரோஜாவைப் பார்ப்பதற்காகவே. அவளுடைய ஒப்பற்ற அழகையும், குணத்தையுமாவது கண்டு கலியாணம் செய்துகொள்வாய் என்று ஆசையிருந்தது. அதை நிறைவேற்றிவிட்டாய்போலும். நாளைக்கே அம்மாவையும் அப்பாவையும் நாட்டுப் பெண்ணை பார்க்க வரச் சொல்லி எழுதி விடுகிறேன்" என்றாள்.

ராமு வெகு ஆச்சரியத்துடன் "அக்கா உனக்கு ஸரோஜாவை எப்படித் தெரியும்?" என்றான்.

செல்லம், "போனமாதம் இந்த ஊருக்கு மாற்றி வந்த முன்சீப் நீலகண்டய்யரின் மைத்துனி பெண் அவள். அவளும் அவள் தாயார் தகப்பனாரும் இங்கு வந்திருந்தார்கள். பெண்ணைக் கண்டதும் எனக்கு ரொம்பப் பிடித்துப் போச்சு" என்றாள்.

ராமு:—ஸரோஜாவின் தமயனும் நானும் ஒரே வகுப்பில் வாசித்தவர்கள். அவன் தன் தங்கையைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று என்னை வற்புறுத்திக்கொண்டிருந்தான். தற்செயலாக ஒரு நாள் அவளைப் பார்த்தேன். எனக்கு அவளை விவாகம்

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

"ZANDU"
KESARI JIVAN
THE IDEAL TONIC FOOD
SALE AGENTS DAMODER & Co.
78. CHINA BAZAAR ROAD MADRAS.

SAVE YOUR EYE

From ALL TROUBLES, even Cataract
Try 'SELLER'S LOTUS HONEY'
—The nature's own remedy. Absolutely safe, Sure, world-wide reputed and Tested. At all Chemists. Literature Free
Beware of Imitation—Insist on SELLER'S.

10 வருஷம் உத்திரவாத முள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான சொற்ப கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,
அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.
187, சைனு பஜார் ரோட், ஜி. டி.
மதறாஸ்.

ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். இதற்குள், சுலோசன நாயுடு பங்களாக் காம்பவுண்டின் தெற்கற்றத்திலிருந்து நந்தகோபர் பங்களாவின் வடக்கற்றம் வரை கொத்துவால் ரஸ்தாவை இருபக்கமும் மறித்து மேற்கு முகமாய் மகாநதியை நோக்கி, அமைக்கப்பட்டிருந்த அதிவிசாலமான அலங்காரப் பந்தலில் காலை ஏழுமணிக்கெல்லாம் ஆயிரக்கணக்கான பொது ஜனங்கள் வந்து கூடினார்கள். மங்களச் சின்னமாக ஒரு பக்கத்தில் மேளக்காரர் வாசித்துக் கொண்டிருந்தார்கள். பந்தலின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மணமேடையின் தென்பக்கம் முழுதும் புருஷர்களுக்கென்றும் வடபக்கம் பெண்களுக்கென்றும் பிரிக்கப்பட்டிருந்தது. மணமகனாகிய நாயனர் மணக்கோலத்துடன் மணமேடைக்கு வருமுன்னமே உள்ளூர் பிரபுக்களும் அயலூர் பிரபுக்களும் மணப்பந்தலில் வந்து உட்கார்ந்தார்கள். அனைவர்க்கும் சுலோசன நாயுடுவும் நந்தகோபரும் வந்தனோபசாரம் செய்துகொண்டு இன்னும் சில முக்கியமானவர்களின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

அந்த சமயம் தென்திசையிலிருந்துண்டாகிய வாங்காய்த் தொனியைக் கேட்டு அனைவரும் தெற்கே நோக்கினார்கள். நோக்கவே ஆலவாய் இராஜா சேதுராய பாண்டியனவர்கள் வருகின்ற பட்டுப்பல்லக்கும் மற்ற ராஜ சின்னங்களும் தோன்றின. உடனே நாயுடுவும் நந்தகோபரும் எதிர்கொண்டு சென்று, பாண்டியனவர்கட்கும் அவருடன் வந்த புலியூர் ஜமீந்தார் முதலிய பிரபுக்களுக்கும் ராஜோபசாரம் செய்து வரவேற்றுக்கொண்டிருக்கும்பொழுது நாயனரும் மணக்கோலத்துடன் பந்தலுக்குள் வந்து பாண்டியனவர்களை உபசரித்தார். எல்லாரையும் சூழ்ந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த எண்ணற்ற ஜனங்களுள் சிலர், நாயனரையும் அவர் மணக்கோலத்தையும் கண்டு, "இவரும் ஒரு ராஜகுமாரரோ"வென்று நினைத்தார்கள். இவ்வாறு நாயனரும் பாண்டியனும் நாவலரும் மணமேடையின் பக்கத்தில் விரித்திருந்த ரத்னக் கம்பளத்தில் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், வெகு தடபுடலாய் வந்து பந்தலுக்குள் நுழைந்த பயங்காசாமி நாயுடு எல்லாரையும் நமஸ்கரித்து "மிஸ்டர் நாயனர், என்ன தாமஸம்? முகூர்த்தம் நடக்கலாமே? நேரமாய்விட்டதே?" என்றார்.

அதற்கு நாயனர், "சபையார் எல்லாரும் வந்துவிட்டார்கள். முகூர்த்தம் நடப்பிக்க வேண்டிய ஆசாரியர் வரட்டும்" என்று தென் திசையை நோக்கிப் பார்த்தவண்ணமே நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது இரண்டு மூன்று வண்டிகள் வந்து பந்தலின் முன் நின்றன. முதல் வண்டியிலிருந்திறங்கிய ஒரு பெரியவர் நாயனரை நோக்கி, "அமரேசா, வந்துவிட்டேன், நல்ல சமயத்தில் எல்லாரும் வந்துவிட்டோம்" என்று சொல்லிக்கொண்டு பந்தலுக்குள் நுழையவே, சேதுராயபாண்டியன், பயங்கரசாமி நாயுடு முதலிய எல்லாரும் எழுந்து நின்று, "ஸ்வாமீ வருக! ஸ்வாமி வருக!! இப்படி எழுந்தருளட்டும்" என்று உபசரித்தார்கள். நாயனர் எழுந்து நின்றபடியே சுமார் ஒன்றரை ஆள் உயரமுள்ள பெரிய நமஸ்காரம் செய்து ஸ்வாமிகள் முன் கைகட்டி நின்றார். இந்த ஸ்வாமிகள்தான் ஸ்வாமி ஞானனந்தர். இவர்தான் டாக்டர் நாயனருடைய ஞானசிரியராகிய மகா பக்காஸ்வாமிகள். இந்த ஸ்வாமிகளோடு பின்னல் வந்தவர்களுள் முக்கியமானவர்கள் சென்னை ஐக்கோர்ட்டு ஜட்ஜ் ஸர் சத்தியசிலராயர், தீனதயாளுபந்துலு, தர்மானுஜராயர், இந்தூர் திவான் சீராள பிள்ளை, அவர் மனைவி பொற்றொடியம்மை முதலியவர்களும் வந்தார்கள். வந்தவர்களனைவரும் பந்தலில் சிறிதும் தாமதியாமல் கார்த்திகேயப் பிள்ளையையும் கற்பகத்தையும் பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு நிற்பதைக் கண்டு நாயனர், அவர்களெல்லாரையும் நந்தகோபர் பங்களாவிற்கு அழைத்துக்கொண்டு போய்த் தம் பெற்றோரைக் காட்டிப் பேட்டி செய்வித்தார். இதற்குள் மணியும் கிட்டத்தட்ட ஒன்பதாய் விட்டபடியால், பக்காஸ்வாமிகள் பந்தலுக்குள் வந்து மணமேடையிற் போய் உட்கார்ந்துகொண்டு. வதூவரர்களை அழைத்து வரும்படி உத்தரவு செய்தார். மணமகனாகிய நாயனரைத் திவான் சீராள பிள்ளையும் மணப்பெண்ணாகிய ராதாவை அவர் மனைவி பொற்றொடியும் அழைத்துக்கொண்டு வந்து மணமேடையில் உட்கார்த்தினார்கள். கார்த்திகேயபிள்ளை சித்தாந்தம் செட்டியார், கற்பகம், ஆண்டாளம்மை நால்வரும் நாயனர்பக்கத்திலும் நந்தகோபரும் காளத்தியும் ராதாம்பாள் பக்கத்திலும் நின்றார்கள்; மற்றப் பந்துக்களனைவரும் மணமேடையைச் சூழ்ந்து நின்றார்கள். அப்பொழுது பக்காஸ்வாமிகள் மூன்று புஷ்பஹாரங்களையெடுத்து ஒன்றைச் சித்தாந்தம் செட்டியார் கையிலும் மற்றொன்றைக் கார்த்திகேய பிள்ளை கையிலும் இன்னுமொன்றை நந்தகோபர் கையிலும் கொடுத்தார். முதல் மாலையைச் சித்தாந்தம் செட்டியாரும் ஆண்டாளம்மையும் நாயனர் கரத்தில் கொடுத்து வாழ்த்தினார்கள். நந்தகோப முதலியாரும் காளத்தியும் மற்ற மாலையை ராதாவின் கரத்திற் கொடுத்து வாழ்த்தினார்கள். உடனே நாயனர்—டாக்டர் அமரேச நாயனர்—ஸர்வ ஜனங்களும் "வாழ்க வாழ்க" வென்று கூறிய மங்கள கோஷத்தின் மத்தியில்—தன் உயிர்க்காதலியாகிய ராதாவுக்கு மணமாலை சூட்டினார்; உடனே ராதா ஆனந்தமென்னும் அரிய விலைபெற்ற உலோகத்தில் வார்க்கப்பட்டு, மேலே நாணமென்னும் பொன்முலாம் பூசப்பெற்ற உயிருள்ள சித்திரப்பதுமைபோல் எழுந்து நின்று,—அன்பு பக்தி ஆவல் உபசாரமுதலிய பல்வகை மலர்களைக் காதலென்னும் கயிற்றிற்கோத்துக் கற்பு என்னும் பரிமளம் கமகமவென்று கமழும் ஒரு அருவமாலையை முதலிலும், தன் பிதாவாற் கொடுக்கப்பட்ட உருவமாலையை அதன் பின்னுமாக, தனது ஆசிரியரும் காதலனும் அத்தானுமாகிய நாயனர் கழுத்திற் சூட்டினாள். அதன்பின், கார்த்திகேயரும் கற்பகமும் கொடுத்து வாழ்த்திய மாலையை நாயனர் வாங்கித் தன் மனைவி ராதாவுக்கு மறுமாலைசூட்டினார். நாயனரும் ராதாவும் இவ்வாறு பூமாலை மாற்றி முடியவும் சூழ்ந்து நின்ற பெண்களும் பாலர்களும் புஷ்பங்களை வாரி மண

அசல் புளூ ஜார்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)

நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாபசந்த்
175, சைனா பஜார். மதராஸ்.

கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுதுக.

நீளம் அடி	அகலம் அடி	உயரம் அடி	சாதா ரூ.	உயர்ந்தது ரூ.	மேலானது ரூ.
6	3½	3½	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
6½	4½	4½	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
7½	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory.
P. O. Bally Dist. HOWRAH

நம்பிக்கையான இடம்.

மர்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு
பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்
தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

மக்கள் மீது எறிந்து மகிழ்ச்சி கொண்டாடினார்கள். இதற்குள் ராஜா சேது ராய பாண்டியன் எழுந்து வந்து மணமேடையை நெருங்கி, தன் மகிழ்ச்சிக்கறிகுறியாய் நாயனார் கரத்தில் ஒரு நவரத்ன மோதிரத்தைப் பூட்டியதுமன்றி அவரிடம் ஒரு விலைபெற்ற ஸ்வர்ணமாலையைக் கொடுத்து அதை ராதாம்பாளுக்கு தரிக்கும்படி வேண்டினார். அவ்வண்ணமே நாயனார் அதை அன்பாய் வாங்கித் தன் மனைவி கழுத்திற் பூட்டினார். இவைகள் முடியவும் மணமக்கள் இருவரையும் நந்தகோபரின் பங்களாவுக்குள் அழைத்துக்கொண்டு போனார்கள்.

முகூர்த்தம் நடந்து ஸர்வ ஜனங்களுக்கும் சந்தனதாம்பூலாதிகள் கொடுத்து உபசரித்து முடியவும், பக்காஸ்வாமிகள் எழுந்து நின்று "நண்பர்களே, நான் ஒரு அறிக்கை செய்து கொள்ள விரும்புகின்றேன். அதாவது இன்று இந்த விவாக சபையில் வந்து கூடியிருக்கும் எல்லா நண்பர்களுடைய ஆசாரங்களையும் சௌகரியங்களையும் உத்தேசித்து இரண்டு விதமான போஜனப் பந்திகள் நடைபெறும். ஜாதிபேதம் மதபேதம் முதலிய பழங் கொள்கைகளையுடைய வைதிக நண்பர்களுக்காக நந்தகோப முதலியாரவர்களுடைய வடக்குப் பங்களாவில் ஒரு வைதிகப் பந்தி வைக்கப்படும்; இனி, அவ்வித மதப்பற்று, ஜாதிப்பற்று முதலியவைகளை விடுத்த என்போன்ற நண்பர்களுக்காகச் செயர்மென் நாயுடு அவர்கள் தெற்குப் பங்களாவில் ஒரு பொதுப்பந்தி வைக்கப்படும். எல்லா நண்பர்களும் ஆக்ஷேபனையின்றிப் போஜனம் செய்யும்படிப் பிராமண பரிசாரகர்களால் சமையல் தயார் செய்யப்பட்டிருக்கின்றது" என்று வெளியிட்டார்.

உடனே போஜனத்திற்குப் பந்தி வைக்கப்பட்டது. சித்தாந்தம் செட்டியார், நாவலர் முதலிய நைஷ்டிக சைவர்கள் வைதீகப் பந்தியில் உட்கார்ந்தார்கள். தெற்குப் பங்களாவில் வைக்கப்பட்டிருந்த விசாலமான பொதுப்பந்தியில் மகா பக்காஸ்வாமிகள், இராஜா சேதுராய பாண்டியன், புலியூர் ஜமீந்தார், பசுங்கிளித் தேவரவர்கள், ஜட்ஜ் ஸர் சத்தியசீலராயர், திவான் சீராளப் பிள்ளை, மகேந்திரம் திவான் பேஷ்கார் ராமானுஜ பந்துலு, பாரிஸ்டர் நரஸிம்ம பந்துலு, பாற்கடல் போலீஸ் பயங்கரசாமி நாயுடு, ஸப் இன்ஸ்பெக்டர் தாதாமியா ஸாகிப், ஹெட்மாஸ்டர் மரியதாஸ் கோனார் முதலியவர்கள் உட்கார்ந்து போஜனம் செய்தார்கள்.

ரஸ்தாவில் போடப்பட்ட விசாலமான மணப்பந்தலில் ஏழைகளுக்கு அன்னதானப் பந்தி வைக்கப்பட்டது. வைதீகப் பந்தியை நந்தகோபரும், பொதுப் பந்தியைச் செயர்மென் நாயுடுவும் அன்னதானப் பந்தியைக் கார்த்திகேய பிள்ளையும் விசாரணை செய்தார்கள். இந்த மூன்று பந்திகளையும் மணமகனாகிய டாக்டர் நாயனார் மேல்விசாரணைசெய்துஉபசரித்தார். பகல் 1 மணிக்கெல்லாம் முதலிரண்டு பந்திகளும், அவற்றோடு ஆங்காங்கே பெண்கள் பந்தியும் போஜனம் செய்து முடிவாய் விட்டாலும், அன்னதானப் பந்தி மட்டும் மாலை மூன்று மணிவரை மாறிமாறி நடந்து கொண்டேயிருந்தது. ஸர்வ ஜனங்களும் போதும்போதுமென்று பரிபூரணமாய்ப் போஜனம் செய்து, மணமக்களையும் மற்றவர்களையும், "வாழ்க வாழ்க!" வென்று வாய்நிறைய வாழ்த்திப் புகழ்ந்து, தங்கள் பாரமான வயிறுகளைப் பிரயாசையுடனிழுத்துக்கொண்டு மகாநதியிற்போய் கையலம்பினார்கள். சந்தன வாடையைக் கனவிலும் முகர்ந்தறியாத பரம ஏழைகளும், பள்பறை முதலிய ஈன ஜாதியாரும்கூட அன்று மாலையில் மேனியெங்கும் சந்தனமும் தலைமுழுதும் புஷ்பமும், வாய் நிறையத் தாம்பூலமும் அணிந்தவர்களாய் மகாநதியின் கீழக் கரையிலுட்கார்ந்து ஆனந்தமாய்க் காற்றூடிக்கொண்டிருந்தார்கள்.

ஸர்வ ஜனங்களும் போஜனம் செய்து முடிந்தபின் நந்தகோபர், கார்த்திகேயர், சுலோசன நாயுடு, நாயனார் நால்வரையும் போஜனம் செய்வித்து, அதன்பின் கற்பகம், காளத்தி, ராதா மூவரும் உண்டார்கள். இதற்குள் மணியும் நான்காய்விட்டபடியால், மிகுந்த களைப்போடு போஜனம் செய்த நாயனாரும் ராதாவும் சிறிது நேரம் இளைப்பாறுவதற்குக்கூட இடம்கொடாமல், கல்யாணப் பிரியர்களாக்கிய பக்காஸ்வாமிகளும் பயங்கரசாமி நாயுடுவும் நலுங்குக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டு, மணப்பந்தலில் வந்து உட்கார்ந்தார்கள். திவான் சீராளப் பிள்ளையும் பொற்றொடியும் மணமக்களை அழைத்துக் கொண்டு வந்தார்கள். மாலைவரை நாயனாரும் ராதாவும் நலுங்கு, ஊசல் முதலிய மணவிளையாட்டுகளை ஆனந்தமாயும் உத்ஸாகமாயும் விளையாடி முடியவும், நந்தகோபர் தன் அருமை மருமகன்மீதும் மகள் மீதும் கொண்ட அன்பிற்கறிகுறியாய் ஒரு வெள்ளிக்கமலத்தில் ரொக்கமாய் ஆயிரம் தங்க பவுன்களையும் இன்னும் சுமார் ஐயாயிரம் ரூபாய் பெறுமான ஆடையாபரணங்களையும் வைத்து, சித்தாந்தம் செட்டியார், கார்த்திகேயபிள்ளை இருவர் முன்னிலையில் ஸமர்ப்பித்தார். இருவரும் அதையெடுத்து நாயனாரிடம் கொடுத்து வாழ்த்தினார்கள். அதை எழுந்து நின்று வணக்கத்துடன் பெற்று, நாயனார் தன் மனைவி ராதாவினிடம் கொடுத்தார். பின்னர் மணமக்களிருவரும் பக்கா ஸ்வாமிகள் முதலிய பெரியோர்களை நமஸ்கரித்து ஆசிர்வாதம், பிரஸாதம் பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றார்கள்.

இவ்வாறு நமது கதாநாயகி ராதாவுக்கும், அவளை ஏழு வருஷமாய்க் காதலித்துவந்த நமது கதாநாயகன் அமரேச நாயனாருக்கும் மனப்பூர்வமான காதல்பற்றிய மெய்ம் மணம் நிறைவேறிற்று. இந்த மண விழா இனி முடிந்ததைப் பற்றி மணமக்களும், அவர்களைப் பெற்றோரும் பாட்டிமார் முதலிய மற்றோரும் அடைந்த ஆனந்தத்தை . இக்கதையில் எழுத்தால் எழுதிப் படிப்பதைவிட மனத்தால் நினைந்து பார்ப்பதே இலகுவாயும் இன்பமாயுமிருக்கும்! இந்த விவாகம் பெயரளவில் விதவா விவாகமேயாயினும், அதைக்கண்டு களிப்பதற்காகச் சகல சாஸ்திர நிபுணராகிய ஸ்வாமி ஞானானந்தரும், சேதுராய பாண்டியன் முதலிய பிரபுக்களும், ஸர் சத்தியசீலராயரைப் போன்ற நியாயதுரந்தரர்களுமே விஜயஞ் செய்து வந்திருந்த காரணத்தால், சாலிவாடி கீழப்பாளயம் முதலியவிடங்களிலுள்ள கர்நாடக ஜனங்களும்கூட இந்த விவாகத்தை மிகவும் முறையான விவாகமென்றே எண்ணும்படி ஏற்பட்டுவிட்டது. இந்த விவாகம் முடிந்து சுமார் ஒரு வாரகாலமாய், சாலிவாடி முதலிய நகரங்களில் மட்டுமல்ல சாலிவாடி ஜில்லா முழுவதும் இந்தப் பிரஸ்தாபமே பரவி நிறைந்திருந்தது. அந்த ஜில்லாவில், பட்டணங்களிலும் கிராமங்களிலும் ஆங்காங்கு மறைந்து கிடந்த பால்ய விதவைகளும் அவர்களைப் பெற்றோரும் தமக்கெல்லாம் ஒரு நற்காலம் தோன்றிவிட்டதென்றெண்ணி மகிழ்ந்தார்கள். இந்து நாட்டில் வைதவ்வியமென்னும் அநீதியான கொடுஞ் சிறைக்காட்பட்டு வருந்தும் எண்ணற்ற ஏழைப் பெண்களனைவரும் மீட்சி பெற்று உஜ்ஜீவிப்பதற்கென்றுதான் நாயனாரும் ராதாவும் இவ்வுலகில் அவதரித்தார்களோவென்று எண்ணற்ற ஜனங்கள் தத்தம் மனத்தில் நினைந்து அவ்விருவரையும் பெரிதும் புகழ்ந்தார்கள். "நாயனாரும் ராதாவும் நன்கு வாழ்க! இனிது வாழ்க! நீடு வாழ்க!" வென்று வாயார வாழ்த்தி வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

சுபம்.

இந்தியா பூராவும் புகழ் பெற்றது

மைசூர் பட்டுகள் இணையற்ற அழகிற்கும் அழுத்தத்திற்கும் பெயர் பெற்றவை

ஆடம்பரமானஸாடிகள் ஜார்ஜெட்டுகள், க்ரேப்புகள். டப்பட்டாக்கள், கைக்குட்டைகள் கழுத்துப் பட்டைகள் யாவும் நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு விசேஷ அனுகூலமாகத் தயாரிக்கப்படுகின்றன.

கவர்ன்மெண்ட் பட்டு நெசவுத் தொழிற்சாலை,
மைசூர்

ஸ்டாக்கிஸ்டுகள் :

1. மதராஸ் ஸ்வதேசி எம்போரியம் லிமிடெட்., 1/17 A, மவுண்ட் ரோட், மதராஸ்.
2. மெஸர்ஸ் ஜயத்மல் மிஸ்ரிலால் & கம்பெனி., கம்மர்ஷியல் ரோட், உதகமண்டலம்.
3. மைசூர் ஆர்ட்ஸ் & க்ராப்ட்ஸ் இலாகா 4, சவுத்பரேட், பெங்களூர்.

சிறுவர் பகுதி

சகோதர வாஞ்சை

(ஸ்ரீமான் பி. ஏ. லக்ஷ்மண முதலியார்)

புதுப்பட்டி என்ற கிராமத்தில் ஓர் குடியானவன் இருந்தான். அவனுக்கு சில வீடுகளும் இரண்டொரு காணி நிலமும் இருந்தன. அவனுக்குக் கடவுள் கடாட்சித்தது இரண்டே குழந்தைகள். அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் பேரன்பு பூண்டிருந்தனர். அவர்களுடைய சகோதர வாஞ்சையைக் கண்டு ஊரார் எல்லோரும் பெரு வியப்புற்றனர். ஆதியில் அவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர் மறைந்து ராமு, லக்கு என்றே அவர்கள் அழைக்கப்பட்டனர். அவர்களை மகவாகப் பெறப் பெற்றோர் பெருமிதம் பூரித்திருந்தனர். தக்க பருவத்தில் ராமு, லக்கு இருவருக்கும் திருமணம் முடித்துப் புளகித்தனர் அவரை ஈன்றோர். சில ஆண்டுகளுக்குப்பின் தாயும் தந்தையும் இருந்தனர். பெற்றோரைத் திடீரென ஒருமிக்க இழந்தது சிறுவர் மனதை மிகுதியும் வருத்திற்று. அவர்கள் மதியூகிகள். ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டனர்.

சகோதரர் இருவருக்கும் களங்கமிலா வாஞ்சை நிலவியிருந்தும் அவர்கள் குடும்பத்தில் புதிதாக அனுமதிக்கப் பட்டவர்களால், சில்லரை அபிப்பிராயங்கள் ஏற்பட்டன. பின்னர் அவை முற்றி சச்சரவுகளாயின. இவைகளைக் காணவும் சகோதரர் மனம் உளைந்தது. தம் மனைவியருக்கு எவ்வளவோ உபதேசித்தும் பெண்களுக்குள் ஒற்றுமை யேற்படவில்லை.

ஆனால் சகோதரர்களின் நிலைமை சற்றும் மாறுபடவில்லை. இருவரும் பல நாட்களாக இது விஷயமாகக் கலந்து ஆலோசித்தனர். கடைசியாக ஓர் முடிவிற்கு வந்தனர். இருவரும் தனித்தனி வசிப்பதெனத் தீர்மானித்தனர்.

இது அவர்களுக்குப் பெரும் துக்கத்தைத் தந்தது. ஆயினும் மனைவியர்களுக்குள் சச்சரவை விலக்க இம்முறையை அவர்கள் அனுசரிக்க வேண்டியதாயிற்று. சகோதரர்கள் தனித்தே வசித்தனராயினும் எல்லா விஷயங்களையும் இருவரும் கலந்து ஆலோசித்தே செய்து வருவார்கள். பயிர்த்தொழில் முதலியவைகளையும் இருவரும் ஒருமித்தே செய்து வந்தனர்.

அவ்வருடம் நிலங்களில் அறுவடை முடிந்து நெல்லை அடித்துத் தூற்றி இரண்டு அம்பாரமாகக் குவித்து வைத்தனர். சகோதரர் இருவரும் ஆளுக்கொரு குவியலாக மறுநாள் தத்தம் மனைக்கு எடுத்துப் போவதாகக்கூறி வீடு திரும்பினர்.

வீடு திரும்பிய ராமு, "என் தம்பி மிகவும் நல்லவன். யாருக்கும் இல்லையென்னாது கொடுப்பவன். அவனுக்கு வருவார்போவாரும் அதிகம். அவனுடைய புதிதாகப் பிறந்த குழந்தைக்கு இவ்வருடமாவது ஏதாவது ஆபரணம் செய்ய வேண்டாமா? ஆகையால் நான் சரிபாதி நெல்லை எடுத்து வந்துவிட்டால், அந்தோ பாபம் அறியாதவன் என்ன செய்வான்?" என்று நினைத்தவனாய் திரும்பவும் நெற்களத்திற்கு வந்து தன்னுடைய குவியலில் இருந்த நெல்லில் தனக்கு வேண்டியதை வைத்துக் கொண்டு மிகுதியைத் தம்பிக் குவியலில் சேர்த்து வைத்துவிட்டு வீடு திரும்பினான்.

அப்போது வீடு திரும்பிப் போஜனம் முடித்த இளையோன் மனம் நிம்மதியற்றிருந்தது. பன்முறையும் பெருமூச்செறிந்தான். "அண்ணாவிற்கோ குழந்தைகள் அதிகம். இவ்வருடம் அவர் பிள்ளைகளுக்குக் காது குத்தும் சடங்கு செய்ய வேண்டும். குடும்பத்திற்குப் பெரியவர் என்ற முறையில் உள்ளூரிலும் வெளியூரிலுமுள்ள பந்துக்கள் வீடுகளில் நடக்கும் சுப அசுப காரியங்களுக்குப் போகவும் அவைகளுக்கான சீர் முதலிய செய்யவும் வேண்டியவராயிருக்கிறார். இவ்வளவு செலவு அவருக்கிருக்க, சரிபாதி நெல்லை அவர் கொடுத்தாலும் நான் அடித்து வந்துவிடுவது நியாயமே அல்ல" என்று சிந்தித்தவனாய் நேரே நெற்களத்திற்குச் சென்றான். தன் நெல்லில் பாதியை

எடுத்துத் தமையனாருடைய குவியலில் சேர்த்துவிட்டு சந்தோஷமாய் வீடு திரும்பி நிம்மதியாய்த் தூங்கினான்.

மறுநாட் காலை இருவரும் தத்தம் நெற்குவியல் பழைய அளவில் சமபாகமாயிருப்பதைக் கண்டு பெருவியப்புற்றனர். இருவரும் ஏதோ சாக்குச் சொல்லி அன்று நெல்லை அப்புறப்படுத்தவில்லை.

அன்றிரவு ராமு தன் நெல்லை இலக்குவின் குவியலில் சேர்த்துக்கொண்டிருக்கையில் இளையவனும் அங்கு வந்து சேர்ந்தான். பெரு வியப்புற்றான். "அண்ணா, இது என்ன வேலை?" என்று தழதழத்த குரலில் கூவினான். ஒருவரையொருவர் கட்டிப் பிடித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். முன்னாள் இரவு இருவரும் செய்த வேலை அவர்கள் மனதைப் பிளந்தது.

இவர்கள் செய்கை அவர்கள் அடுப்பங்கரை மட்டும் எட்டிப்போனது. மனைவியார் மனமும் நெகிழ்ந்தது. "இப்படிப்பட்ட உத்தமர்கள் நம்மாலன்றோ தனித்து வசிக்கின்றனர்" என அவர்கள் இருவர் மனமும் ஒன்றுபட ஏங்கிற்று. தம்முடைய குறையைக் கண்டனர். ஒருவரையொருவர் தழுவி இதுவரை செய்த தவறை நினைத்து இருவரும் துக்கக் கண்ணீர் உகுத்தனர்.

அன்று முதல் தாங்கள் ஒருமித்து வசிக்கவேணுமென்ற முடிவிற்குத் தாமே வந்து அதை அன்றே அமுலுக்கும் கொணர்ந்தனர். அதைக் காணவும் சகோதரர்மனம் ஆனந்தத்தில் அழுந்திற்று. பருத்தி புடவையாய்க் காய்த்ததாகக் கருதினர்.

* * * *

அதிசயம் ஆனால் உண்மை



நோயற்ற வாழ்வு

நரித்தலை வாயு

——:[o]:——

(வைத்தியரத்ன பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேதபூஷணம ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது.)

ஆமதோஷம் என்பதைப் பற்றி இப்பத்திரிகையில் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். அத் தோஷத்தினால் உண்டாகும் 'ஆமவாதம்' என்கிற வியாதியைச் சேர்ந்தே பிரக்ருத வியாதியும். என்றாலும் இதன் இலக்ஷணங்களும், தோன்றும் வகைகளும், நீடித்திருந்தால் இதனால் நேரிடும் உபாதிகளும் ஸாமாந்ய ஆமவாத ரோகத்தினும் வேறுபட்டனவாகத் தோற்றுமாதலால், இதைத் தனியாக ஒருவகை வாதரோகமாகவே வைத்தியக் கிரந்தங்களில் ஆசிரியர்கள் விவரித்துக் கூறுகிறார்கள். இப்பொழுது நான் கூறும் வியாதி ஆமவாத ரோகம் போலவே தேஹத்தில் முக்கியமான பூட்டுகளைப் பொதுவாகத் தாக்குவது இயல்பானபோதிலும், விசேஷமாக முழங்காலையே தாக்கித் தொந்தரவளிப்பது வழக்கம். ஆமதோஷம் போன்ற ஒரு வகை விஷ நீரால் "வாத தாதுவும், இரத்தமும் முக்கியமாய் முழங்காலில் விகாரமடைந்து வீக்கங் காணும்; ஆரம்பத்திற் கடுமையான நோவெடுக்கும்; வீக்கம் விருத்தியடைந்து, முழங்கால் நரியின் தலையைப் போல் பருத்துவிடும்; உள்ளே ஒரு வகை சிலேஷ்ம நீர் சேர்ந்து, இவ்வீக்கம் அழுத்த மிருதுவாயிருக்கும்; ஆகவே இது "கிரோஷ்டுக சீர்ஷம்"—நரித்தலைவாயு—என்று வழங்கப்படுகிறது" என்றுமாதவதரன் முதலியவர்கள் கூறுகிறார்கள்

இவ்வியாதி முழங்கால் முதலிய முக்கியமான ஸந்தி பாகங்களைப்பற்றியே உண்டாவதால் அச்சந்திகளின் உட்புற அமைப்பைப்பற்றியும் சிறிது குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. "ஸ்நாயுபிச்ச ப்ரதிச்சந்நாஸ் ஸந்ததாம்ச்ச ஜாராயுணா, ச்லேஷ்மணா வேஷ்டிதாம்ச்சாபி ஸந்திபாகான் ஸ்திராந்விது':—எலும்புகளுடைய பூட்டுகளின் உட்புறங்கள் ஸ்நாயுக்கள் என்கிற மிகவும் உறுதியான தசை நார்களால் சேர்த்துப் பிணைக்கப்பட்டும், ஜாராயு என்கிற கெட்டியான ஜவ்வுத் தோலால் போர்த்து ஒன்றோடொன்று அடிபடாது அமைக்கப்பட்டும், தேய்வும் உரைதலும் ஏற்பட்டுச் சிதையாமலிருக்குமாறு இப்போர்வைகளுக்கு இடையே சிலேஷகம் என்கிற வழ வழப்பான கஞ்சி போன்ற சிலேஷ்ம தாது உண்டாகி அவ்விடம் எப்பொழுதும் பசையுள்ளதாகச் செய்யப்பட்டும் இருந்து வருவதால் அச்சந்தி பாகங்கள் அசைந்துழன்று வேலை செய்ய அனுகூலமாய் இருக்கின்றன என்று எலும்புப் பூட்டுகளின் உட்புற அமைப்பு ஸுச்ருதாதிகளால் வெகு நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஸந்திகளுக்குப் பசையூட்டும் சிலேஷக கபம் என்கிற இச்சிலேஷ்ம ரூபமான பசையைப்பற்றி மேனாட்டார் கூறும் விஷயத்தையும் சிறிது விளக்குகிறேன்.

சிலேஷக கபத்தை ஊறச் செய்யும் மெல்லிய கெட்டியான சவ்வுப் போர்வையே சிலேஷ்ம கலை அல்லது ஜாராயு என்று ஆயுர்வேதத்திற் கூறப்படுகிறது. இந்த சிலேஷக கபந்தான் ஆங்கிலத்தில் ஸைநாவியல் ப்ளூயிட் என்றும், சிலேஷ்ம கலை என்கிற ஜாராயுவே ஸைநாவியல் மெம்பிரேன் என்றும் கூறப்படுகின்றன. லிகமெண்ட்ஸ் என்கிற ஸ்நாயு ஜாலங்களையும், கார்டிலேஜ் என்கிற தருணாஸ்தியையும் (மிருதுவான வளையும் எலும்பு,) எலும்புகளின் முனைகளையும் இந்த ஸைநாவியல்ப்ளூயிட் என்கிற சிலேஷ்மம் பசை வழ வழப்பாகச் செய்கிறது. கொழுப்பும் முட்டைக் கரு (அல்ப்யூமின்) போன்ற பசையும் கலந்தாற் போலுள்ள இதை ஆங்கிலத்தில் "ஜாயண்ட் ஆயில்" (பூட்டுப் பசை) என்றும் ஸாதாரணமாக வழங்குவதுண்டு. ஸைநாவியல் மெம்பிரேன் (சிலேஷ்மகலை அல்லது ஜாராயு என்கிற சவ்வு) எவ்விதத்திலாவது அழற்சியடையத் துவக்கினால், ஜாயண்ட் ஆயில் என்கிற ஸந்திப் பசை அடிக்கடியும் அந்த மெம்பிரேனிலிருந்து மிக்க அதிகமாகக் கசிந்து, அவ்விடத்தில் அதிக வலியோடு கூடிய வீக்கத்தையும் உண்டு பண்ணும். முழங்காலை ஊன்றிக்கொண்டு வேலை செய்பவருக்கு முழங்கால் முட்டி மிகப் பருத்துவிடுவது இயல்பாகையால், அவ்வித வேலைக்காருடைய முழங்காலைப் போல் முன்னுக்குப் பருத்து வீங்கிவரு மியல்புடைய இவ்வியாதியையும் அப்பெயரால் (ஹௌஸ் மைட்ஸ் நீ என்று) ஸாமாந்ய பாஷையில் கூறுகிறார்கள். இவ்வித விகாரங்களெல்லாம் இடம் பெறுவதற்கு மற்றப் பூட்டுகளைவிட முழங்கால் பூட்டே ஏற்றதாயிருப்பதால், ஆமவாத தோஷத்தினால் அநேகமாய் முழங்காலே பாதிக்கப்பட்டு, 'கிரோஷ்டுக சீர்ஷம்' என்கிற கோளாறுக்கும் அதுவே ஆஸ்பதமாக ஆகிறது. இதனால் பாதிக்கப்படும் பூட்டு உட்புறத்தில் விசேஷமாகவும், வெளிப்புறத்தில் ஸாமாந்யமாகவும் நிலையான மாறுதலைப் பெறுகிறது. நீடித்து நிற்கக் கூடிய வீக்கமும் சில ஸமயம் சிலருக்கு ஏற்படும். அவ்விடத்திலுள்ள ஃதாதுக்கள் பொதுவாக இயற்கைக்கு மாறான நிலைமையைப் பெறுவதுண்டு. எலும்புப் பூட்டுகளின் உட்புறமுள்ள சிலேஷ்மகலை விகாரப்படுவதால், முக்கியமாக முழங்காலில் அந்த சிலேஷ்ம கலையென்கிற சவ்வு வெண்ணிறமாக மாறுபட்ட விகாரத்தையுண்டுபண்ணி விடும்.

இதில் மூன்று வகைகள் உண்டு. (1) ஆமவாதம் என்கிற தோஷம் ஸந்தி பாகங்களைத் தாக்கும்போது, அக்கோளாறைத் தமிழில் கீல் வாயு என்றும், சிலர் ஓடுவாயு என்றும் சொல்வதுண்டு. இதில் வலியும் வீக்கமும் ஒரு பூட்டிலிருந்து மற்றொரு பூட்டுக்கு அடிக்கடியும் மாறியோடும். அநேகமாய் பெரிய ஸந்திகளே இத் தோஷத்தினால் தாக்கப்படுகின்றன. அவ்விதம் தாக்கப்பட்ட ஸந்தி பாகம் சிவப்பாகப் போய், அமிதமான வலியும் அவ்விடம் உண்டாகும்; ஆனால் வீக்கம் அவ்வளவு அதிகமா யேற்படுவதில்லை. சில நாட்களில் அப்பாகம்சரியான நிலைமைக்கு வந்துவிடும். பிறகு சில நாட்களில் வேறு பூட்டுகளில் முன் பூட்டில் உண்டான அதே ரீதியில் கோளாறுகள் தோன்றித் தொந்தரவளிக்கும். எந்தப் பாகமும் இதில் பத்து நாட்களுக்கு மேல் நிலைத்து அவ்வித வீக்கம் முதலியதைப் பெறுவதில்லை. இக் கோளாறு ஏற்பட்டால் ஸ்திரமான மாறுதல் அவ்வவயவத்தில் ஏற்படுவதில்லை. இதை ஸாமாந்யமான ஸந்தித்த ஆமவாதம் என்றும் அல்லது கீல்வாயு என்றும் கூறுவர்.

(2) இரண்டாவது வகை கடுமையான கீல்வாயு எனப்படும். அல்லது க்ரூரமான க்ருத்ரஸீவாதம் என்றும் சிலரால் வழங்கப்படும். இதில் சிறு சிறு கணுக்களும் ஆமதோஷ விஷத்தால் வாதையுறும் காலையில் விரல்களின் கணுக்களில் வலியும், அசைக்கவியலாதபடி விறைப்பும், பிறகு கிரமமாக அவ்விடங்களில் நீல நிறமான மாறுபாடும் காணுவதுண்டு. ஆனால் இதில் முதலிற் கூறியதைப்போல் வியாதியின் தொந்தரவு கணுக்கள்தோறும் மாறி மாறி ஓடுவதில்லை; தாக்கப்பட்ட பூட்டுகளின் பாகம் கனத்துத் தடித்துவிடும்; ஆனால் பூட்டுகளின் மேல் சர்மம் ஸ்திரமாகவே மெல்லியதாகவும், வெளிறிப் பளபளப்புள்ளதாகவும் மாறும்.

(3) இதில் மூன்றாவது வகை ஓர் ஒட்டுவா ரொட்டி நோய். ஆமதோஷ நீர் அதிக விஷத்தன்மையடைந்து, குளிர்ஜ்வரம் போன்ற கோளாறுடன் ஸந்தி பாகங்கள் அதிக கனமான வீக்கத்தைப் பெறும். இவ் விஷ நீரின் தோஷம் முதலில் பல பூட்டுகளில் மாறி மாறி ஓடி பாதையைக் கொடுத்து வந்து, கடைசியில் ஏதேனும்

ஜெர்மன் ரெயில்வேக்களில் கட்டப்பட்டுள்ள புதிய; வண்டிகள். இரண்டு தட்டுகளிருக்கின்றன.

ஒன்று அல்லது இரண்டுமூன்று பூட்டுகளில் நிலைத்து நிற்கும். இவ்விதமான வீக்கம் சிலருக்கு முழங்காலில் தங்கி நின்று, கிரோஷ்டுக சீர்ஷம் எனப்படும் நோயாகக் கருதப்படுகிறது. முழங்காலில் எப்பொழுதுமே ஒரு சிறிது வீக்கம் நிலைத்திருந்து பிறகு, அவ் வீக்கம் அளவில் அதிகமாவதும் வடிவதுமாயிருப்பது வழக்கம். நீடித்த காலமாயுள்ள இக்கிரோஷ்டுக சீர்ஷம் என்னும் முழங்கால் வீக்கம் அவ்வவயவத்தில் ஒரு சிறிதேனும் பூசினாற் போல் இருந்தே வரும்.

சிகித்ஸை: இதில் (1) ஆமவாத தோஷம் என்கிற விஷத்தை விலக்குவதற்கு முதலில் விரேசநம் (பேதியாகும் சிகித்ஸை) அத்யாவச்யம். நிலாவாரைக் கஷாயத்தில் (ஓர் ஆழாக்கு அளவில்), ஒரு பலம் சுத்தமான சரக்கொன்னைப் புளியைக் கரைத்து, நாலைந்து குன்றுமணி எடை இரஸ கற்பூரம் சேர்த்து உட்கொள்ள வெகு சுகமாக விரேசநமாகும். அல்லது வயதுக்குத் தகுந்தவாறு 3 முதல் 6 மாத்திரை வரையில் இச்சாபேதி வடி என்கிற மாத்திரையையாவது பேதிக்குச் சாப்பிடலாம். (2) வலியும் வீக்கமும் உள்ள பூட்டுகளின்மேல் வாலேந்திர போளத்தைச் சிறிது ஜலத்திற் குழைத்துச் சூடாக்கி நன்றாகப் பூசுவதால், வலியும் வீக்கமும் தற்கால சாந்தியடையும்; இத்துடன் சிறிது அபினையும் கலந்து உபயோகிப்பது இன்னும் விசேஷம். ஸுரதார்வாதி லேபம் என்கிற சூர்ணத்தைப் பசு மூத்திரத்திற் கலந்து சூடாக்கி, நோயுண்ட பூட்டுகளிற் பத்துப் போட்டு வருவதும் வெகு நலம். (3) மஹாராஸ்நாதிக்வாதம் என்கிற கஷாயத்தை வேளைக்கு ஒரு அவுன்ஸ் அல்லது இரண்டு அவுன்ஸாக, கைசோரிக குக்குலு என்கிற மாத்திரையோடு தினத்துக்கு மூன்று முறை உட்கொள்ளலாம். இதனால் தினந்தோறும் ஆமதோஷநீர் நன்கு மலசோதனையின் மூலமாய் வெளிப்பட்டு, பூட்டுகளில் சேர்ந்துள்ள துர்நீர்களும் கிரமமாகக் குறைந்து, வீக்கம் முதலிய வேதனைகள் தீரும். மஹாயோக ராஜ குக்குலுவை வேளைக்கு இரண்டு மாத்திரைவீதம் விடங்காரிஷ்டம் என்கிற திராவகத்துடன் (வேளைக்கு ½ அவுன்ஸாக) நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்றுமுறை சாப்பிடுவதால் சீக்கிரத்தில் பல பிணியாளிகள் திருப்திகரமாகக் குணமடைந்திருக்கிறார்கள். (4) முழங்கால் முதலிய அவயவங்களில் வீக்கம் அதிகமாயிருக்கையில் உள்ளுக்கு முன்கூறிய மருந்துகளை உபயோகித்தவாறு, வீங்கிய விடத்திற்குக் கீழே இரண்டு மூன்று அட்டைகளை விட்டு ரத்தத்தை உறியச் செய்வதும், அதன் பிறகு போஸ்தக்காய் சேர்த்துக் காய்ச்சிய ஜலத்தினால் சூடாக ஒற்றடம் கொடுப்பதும் நல்ல முறை. வாரத்திற்கு இரண்டு மூன்று தடவை இம்முறையைக் கையாள்வது நலம். (5) இப்பிணியாளிகள் அஜீர்ணத்திற்குக் காரணமான ஆஹாரங்களை வியாதி முற்றிலும் ஸ்வஸ்தமாகும் வரையில் உபயோகிக்கக்கூடாது. மாப்பண்டங்கள், கடலை, உளுந்து, தயிர், உருளைக்கிழங்கு சேம்பு, ஆறிப் பழகிய உணவுகள் முதலியவற்றை விலக்குவது நலம். உண்ணும் உணவும், பருகும் பானமும் சுத்தமாகவும் சூடாகவும் பழகாதனவாகவும் இருத்தல்வேண்டும். சூடான பசும்பாலும், மிளகு ரஸங் கலந்த சூடான அன்னமும், புதிய கீரை வகைகளும், மற்றும் பசுமையான காய்களும் உண்ண உபயோகமானவை. இந்த வியாதி அநேகமாய் அஜீர்ண போஜனங்களாலும், அசுத்தமான ஜலத்தினாலும், சுத்தமில்லாத வாயுவாலும், பரிசுத்தமில்லாத பழக்கவழக்கங்களாலும், தினந்தோறும் திருப்திகரமாக மல சோதனையாகாமையாலும் உண்டாவதால், துராசார—துராஹாரங்களைப் பரிஹரித்துச் சுத்தமாக வாழ்வதிற் கருத்தாயிருந்தாலன்றி, வெறும் மருந்துகளால் மாத்திரம் கச்மல தோஷங்களைக் காரணமாகக் கொண்ட இவ்வித நோய்கள் நன்கு தீருவதில்லை. கிரோஷ்டுக சீர்ஷமென்பது கொடுமையான நோய்களில் சேர்ந்ததில்லையெனினும், இவ்வியாதி தேஹத்திற் பற்றியபின் ஏற்ற பரிஹாரம் பகுத்தறிவுடன் செய்ய முயலாவிடில், இதற்குக் காரணமானவிஷ நீர் ஆங்காங்கு அவயவங்களில் தங்கி நின்று, நீடித்த வியாதியாக நிலைத்துப் போய் மனிதனை விஷ நீர்க் களஞ்சியமாக வரவரச் செய்து மொண்டி முடங்களைப்போல் வீசியுலாவி வேலைகளைத் தாராளமாகச் செய்யச் சக்தியற்றவனாகவும், அதிக வலிவற்றவனாகவும் செய்துவிடுமாதலால், இவ் வியாதி ஏற்பட்ட சீக்கிரத்தில் இதைப் பற்றறவே ஒழிக்க முழு முயற்சியும் செய்வதுதான் விவேகமாகும்.

* * * *

சென்னை ஆயுர்வேத கலாசாலையிற் பயின்று டிப்ளோமா பெற்றவரும், எஸ். கே. பி டி. ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டராயிருந்தவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்தியக் கலாசாலைப் பரீக்ஷகரும், ஸிலோன் வைத்தியக் கல்லூரி பரீக்ஷக போர்டின் பிரஸிடெண்டும், அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீட பரீக்ஷகரும். அநேக ஆயுர்வேத காவ்ய நாடகாதி கிரந்தங்கள் இயற்றியவருமான,

வைத்திய ரத்னம்

பண்டித **எம். துரைஸ்வாமி ஐயங்கார்,** ஏ. வி எஸ்

ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதசார்ய அவர்களுடையஔஷதங்கள்

ஆயுஷ்ய ரஸாயனம் எவ்வித பலஹீனத்தையும் நீக்கும். தேஹ புஷ்டியையும், மூளைச் செழிப்பையும், இருதய பலத்தையும் தரும். நரம்புத் தளர்ச்சியை நீக்கும். தேனினும் இனிக்கும். புட்டி ரூ. **3-4-0.**

அஜீர்ண கேஸரி இரைப்பையில் புளிப்பு, புளித்த ஏப்பம், மார்பு எரிவு, வயிற்றுப்புசம் முதலிய தொந்தரவளிக்கும் கடுமையான அஜீர்ணங்களில் பலன் தரத்தக்கதென்று உபயோகித்துப் பரீக்ஷிக்கப்பட்ட சூர்ணம் டப்பா 1-க்கு ரூ. **2-8-0.**

ஹரீதக்யாதி லேஹ்யம் எவ்வித மலச்சிக்கலுக்கும் திவ்யௌஷதம் லிவர்என்கிற கல்லீரலைத்தூண்டி, பித்தத்தை வெளிப்படுத்தி, காமாலை முதலியதையும் தணிக்கும். கர்ப்பிணி முதல் அனைவரும் உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. **3-0-0.**

லோஹாஸவம் இரத்தத்தைத் துரிதமாய் விருத்தி செய்யும் அயத்திராவகம். குழந்தை முதல் அனைவருக்கும் ஏற்றது. இரத்தக் குறைவு, பலஹீனம், தோலைப் பற்றிய வியாதிகள் முதலியவை தீரும். 1 பவுண்டு ரூ **3-12-0.**

விடங்காரிஷ்டம் கீல் வாயுவுக்கு மிகப் பிரசஸ்தமான திராவகம். நீர்க்கடுப்பு முதலியவற்றையும் நீக்கும். பொதுவாக வாயுரோகங்களில் உபயோகிக்கக்கூடிய சிறந்த மருந்து. 1 பவுண்டு ரூ. **5.**

காஸஹர ரஸாயனம் இருமல், மார்ச்சளி, நாட்பட்ட ஜலதோஷம், ச்வாஸ-காஸம், டான்ஸிலைடிஸ் என்கிற தொண்டை வீக்கம், கக்குவான் ஆகியவை இதனால் முற்றிலும் குணமடைந்திருக்கின்றன. எவ்வயதினரும் உபயோகிக்கலாம். இனியசுவை. புட்டி ரூ. **2-8-0.**

வேறு ஸகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,

"ஆர்ய க்ருஹம்" 11, ஆதியப்ப முதலி தெரு, வேப்பேரி, மதராஸ்

நஞ்சன்கூடு பல்பொடி ப்ராக்டெரியின்

கூலாயில்

சிறந்தஸ்நானத் தைலம்

அணா3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறாஸ். ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்)

தாது புஷ்டியைக் கொடுப்பதில் சிறந்தது



சி.எம். சாமி

மன்மதக் குளிகை

இது உடலுக்கு வலுவைக்கொடுத்து ஆண்மையை அதிகப் படுத்தி இரத்த விருத்தியையும் வீரியவிருத்தியையும் திடகாத்திரத்தையும் தரும்.

20 குளிகை ரூ 2/-

பிராஞ்சு:—1/54. அருணசலநாயகன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

கவலை யொழிக்க



இந்திய தேயிலை பானம்

“துக்க நிவாரணி தேயிலையே” என்று ஒரு வேதாந்தி கூறியிருக்கிறார். அது கவியின் சாமர்த்தியமான கூற்றல்ல. தேயிலை பானம் செய்யும் ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துகொண்டது. இந்தியாவில் விளையும் தேயிலையினால் தயாரித்த பானத்தை முதலில் தாம் சாப்பிட்டவர்கள் மிகவும் நேர்த்தியானதும் அதிசயமான பொருள்களைப் பார்த்தவுடன் என்ன உணர்ச்சி யேற்படுமோ அதற்கு ஒப்பிடுகிறார்கள்.

தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும நல்ல இந்திய தேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் - இந்திய தேயிலை

IK 43.

Regd. No. 2514

ஆரோக்கிய ஊற்று

ஆம்; **காட் லிவர் ஆயில்** உண்மையிலேயே ஆரோக்கிய ஊற்றுதான்; இதைப்பற்றி வைத்தியர்கள் ஆராய்ச்சி செய்யச் செய்ய, இந்த உண்மை உறுதிப்பட்டு வருகிறது. காட் லிவர் ஆயில் மனித வர்க்கத்திற்கு இன்றியமையாதது; அதிலும் முக்கியமாக வளரும் குழந்தைகளுக்கு தேக போஷாக்குக்கு அவசியமான எல்லா சத்துக்களும் காட் லிவர் ஆயிலில் இருக்கின்றன.

"**ஆனல்ஸ் ஆப் இண்டர்னல் மெடிஸின்**" என்பது மேனாட்டில் பிரசுரமாகும் ஓர் பத்திரிகை; நியூ யார்க் நகரைச் சேர்ந்த **டாக்டர் சார்ல்ஸ் ஹெண்டீ ஸ்மித்** என்பார் சமீபத்தில் அதில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

குழந்தைகளுக்கு ஏற்படும் க்ஷயம்—சுண்ணாம்புச் சத்து உடம்பில் அதிகமாகப் பரவ வேண்டுமானால் காட் லிவர் ஆயில் தான் கொடுக்க வேண்டும்; இரத்த ஓட்டம் சம்பந்தமான வியாதிகள் வராமல் பாதுகாப்பதற்கும் இதுவே சிறந்தது. இதை வழக்கமான ஆகாரத்திற்குப் பிறகு ஆரெஞ்சு ரஸத்திலோ, பாலிலோ, அல்லது எப்படிக்கொடுத்தால் குழந்தை சுலபமாகச்சாப்பிடுமோ அந்த வகையில் கொடுக்க வேண்டும். சத்துக்கள் நிறைந்ததென உலகில் எத்தனையோ காட் லிவர் ஆயில்கள் மலிந்திருக்கின்றன. ஆனால் அவை எந்த விதத்திலும் மாலர்ஸ் சூபர் ஸ்ட்ரேங்த் காட் லிவர் ஆயிலுக்குச் சமமாக மாட்டா. மலிந்த சரக்குகள் சிலவற்றில் D விட்டமின் அளவுக்கு மிஞ்சியிருப்பதால் தீங்கு கூட ஏற்படலாம்!"

காட் லிவர் ஆயில்களில் சிறந்தது

மாலர்ஸ்

சூபர் - ஸ்ட்ரேங்த்

காட் லிவர் ஆயில்

விட்டமின்கள் பூரணமாகவிருப்பதால் மாலர்ஸ் ஸூபர் ஸ்ட்ரெங்த் காட் லிவர் ஆயில் (Moller's Super Strength Cod-Liver Oil) மற்ற மட்டமான சரக்குகளைவிடச் செலவுகுறைந்தது; எப்படியெனில், இதில் கொஞ்சம் கொடுத்தாலும் போதுமானது; 15 நாட்களுக்கொருதரம் சரக்கு வந்து கொண்டிருப்பதால் ஆயில் சுத்தமாகவே இருக்கிறது.

மொத்த ஏஜண்டுகள்:

சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி,

12, மன்னாரு தெரு :: பார்க் டவுன் :: மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—*Editor* C. R. Srinivasan, B.A.